REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 பெப்ரவரி 22 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

1932 - 2022

வரு. 91 இல. 45 | Wednesday 22, February, 2023 | 32 பக்கங்கள் | 50/-

## இராஜாங்க அமைச்சர்களுக்காக வாகனங்களை தருவிக்கவில்லை

### எதிரணிக்கு ரஞ்சித் சியம்பலாபிட்டிய பதிலடி

இராஜாங்க அமைச்சர்களுக்காக 239 வாகனங்களை இறக்குமதி செய்துள்ளதாக எதிர்க் கட்சி சுமத்தும் குற்றச்சாட்டில் எவ்வித உண்மையும் இல்லையென, நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டு வருட முடிவில், நீர் விநியோக பவுஸர்,

06

# வீழ்ச்சியடைந்துள்ள நாட்டுக்கு ஆதரவளிக்க IMF ஒன்றே தீர்வு

## அதனைத் தவிர வேறு எந்த நிறுவனமும் இல்லை

### பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசின் திட்டத்திற்கு மாற்று முன்மொழிவுகள் இருந்தால் அவற்றை IMF இடம் சமர்ப்பிக்க தயார்

### ஜனாதிபதி கண்டியில் தெரிவிப்பு



நாட்டில் வலுவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டுமெனவும், தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துள்ள பொருளாதார வேலைத்திட்டத்தால், கடந்த சில மாதங்களாக இருந்த பொருளாதார நெருக்கடிகள் ஓரளவு குறைந்துள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இவ்வாறு வீழ்ச்சியடைந்த நாட்டுக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியத்தை தவிர உலகில் வேறு எந்த நிறுவனமும் இல்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி, பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு மாற்று முன்மொழிவுகள் இருப்பின், அவற்றை சர்வதேச நாணய நிதியத்திடம் சமர்ப்பிப்பதற் கான வாய்ப்பை வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் (20) நடைபெற்ற கண்டி மாவட்ட வர்த்தகர்கள் மற்றும் சட்டத்தரணிகளுடனான சந்திப்பிலேயே,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசியல் கட்சிகள் இதற்கான முன்மொழிவுகளை முன்வைக்காமல் மக்களிடம் பொய் சொல்லி அரசியல் நாடகம் ஆடுவதாக தெரிவித்த ஜனாதிபதி, நாட்டினதும் மக்களினதும் எதிர்காலத்துடன் எவருக்கும் விளையாட முடியாது எனவும் வலியுறுத்தினார். இந்த சவால்கள் தொடர்பில் தெரியாமல், ஜனாதிபதிப் பொறுப்பை ஏற்கவில்லையெனவும், தடைகள் வந்தாலும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நிறுத்தப் போவதில்லை எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

06

## தமிழ், சிங்கள எழுத்துக்களின் நூல்கள் ஜனாதிபதியிடம் கையளிப்பு



அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் தொகுக்கப்பட்ட "சிங்கள எழுத்துக்கள்" மற்றும் "தமிழ் எழுத்துக்கள்" ஆகிய இரண்டு நூல்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிக்கும் நிகழ்வு நேற்று (21) பாராளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது.

பெப்ரவரி (21) சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு, பிரதமர் தினேஷ் குணவர்த்தனவினால் இந்த நூல்கள் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டன.

சபாநாயகர் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இந்த நூல்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும் கலந்து கொண்டார்.

### மார்ச் 03, 04இல், கச்சதீவு ஆலய திருவிழா

## குறிக்கட்டுவானிலிருந்து அரச, தனியார் பஸ்கள் சேவையில்

09

## மார்ச் மாதத்தில் அரசுக்கு தாங்க முடியாத கடன் சுமை

### சகல செலவுகளின் பின் ரூ.554 பில். பற்றாக்குறை

- அரசின் மொத்த வருவாய் ரூ.173 பில்.
- ஊதியம், ஓய்வூதியம் மற்றும் நிவாரணத்துக்கான செலவு ரூ.196 பில்.
- அரச நிர்வாகச் செலவு ரூ.23 பில்.
- உள்நாட்டு வெளிநாட்டு கடன் சேவைகள் ரூ. 508 பில்.
- பற்றாக்குறை ரூ.554 பில்.



அரசாங்கத்துக்கு, மார்ச் மாதத்தில் மட்டும் தாங்கிக்கொள்ள முடியாத கடன் சுமை இருப்பதாக நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன அமைச்சரவைக்கு அறியத்தந்துள்ளதாக ஊடகத்துறை அமைச்சர், அமைச்சரவை பேச்சாளர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மார்ச் மாதத்தில், அரசாங்கம் எதிர்பார்க்கும் வருமானம் 173 பில்லியன் ரூபாவாகும். அரச ஊழியர்களுக்கான சம்பளம்,

06

## சட்டவிரோத கடைகளுக்கு எதிராக நடவடிக்கை

### அமைச்சர் பந்துல தெரிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்

வீதிகளின் இரு மருங்கிலும் முன்னெடுக்கப்பட்டு வரும் சட்டவிரோத வர்த்தக நடவடிக்கைகளுக்கு எதிராக, உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சட்ட விரோதமான வகையில் இடம்பெறும்

06

## உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக்கோரி எதிர்க்கட்சிகள் சபை நடுவில் ஆர்ப்பாட்டம்

### பாராளுமன்றம் சபாநாயகரால் ஒத்திவைப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



உள்ளூராட்சித் தேர்தலை நடத்துமாறு கோரி எதிர்க்கட்சியினர் நேற்று சபையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தால் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் நேற்றுக் காலை 9:30 மணிக்கு பாராளுமன்றம் கூடியது. வழமையான நடவடிக்கைகளுக்குப் பின்னர், உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துமாறு கோரி எதிர்க் கட்சியினர் சபா மண்டபத்தின் நடுவில் நின்று, பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டம் நடாத்தி,

06

## எரிபொருள் QR முறைமை மூன்று மாதங்களில் நீக்கம்

லோரன்ஸ் செல்வநாயகம்



வாகனங்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள QR கோட் முறையை, இன்னும் மூன்று மாத காலங்களுக்குள் நிறைவுசெய்ய முடியுமென எரிசக்தி மின்சக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர தெரிவித்துள்ளார். அதன்பின்னர், வழமைபோன்று எந்த சந்தர்ப்பத்திலும் வாகன உரிமையாளர்கள், தமக்கான எரிபொருளை போதியளவு பெற்றுக்காள்ள முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

QR கோட், முறைமையை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் அது தொடர்பில் மேலும்

06

### நடைமுறையிலுள்ள புதிய வரிக் கொள்கை

## வீழ்ந்த பொருளாதாரத்திலிருந்து மீண்டெழுவதற்கான புதிய வியூகம்

தற்போதைய வரிக் கொள்கையானது சாதாரண வரிக் கொள்கையன்றி மீட்பு நடவடிக்கை எனவும் இந்த செயற்பாடு சீர்குலைந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை மட்டுமன்றி எந்தவொரு நாட்டுடனும் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாய்ப்பை இலங்கை இழக்க நேரிடும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் சாதாரண வரவு செலவுத் திட்டம் அல்ல எனவும், பொருளாதாரத்தை மீட்பதற்கான நடவடிக்கை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று (21) நடைபெற்ற 2023 வரி மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்திய போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

06

## அரசாங்க நிதி குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் விபரங்கள் வெளியீடு

### சபையில் உத்தியோகபூர்வமாக சபாநாயகர் அறிவிப்பு

லோரன்ஸ் செல்வநாயகம்



அரசாங்க நிதிக் குழுவுக்கு புதிதாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை, சபாநாயகர் நேற்று சபையில் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 இன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, அரசாங்க நிதி தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்கான உறுப்பினர்களின் பெயர்களையே சபாநாயகர் சபைக்கு அறிவித்தார்.

இதற்கமைய ரவூப் ஹக்கீம், விஜித ஹேரத்,பாட்டலி சம்பிக்க ரணவக்க, சந்திம வீரக்கொடி, நாலக கொடஹேவா, ஹர்ஷ டி சில்வா, எம்.ஏ.சுமந்திரன், காவிந்த ஜயவர்தன, மயந்த திஸாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா ஆகியோர் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் படி அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுவின் தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும். இதற்கமைய, அந்தப் பதவி ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவுக்கு வழங்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியல்ல எம்பி கேட்டுக் கொண்டார்.

09 ஆவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் போது பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கு முரணாக,

06

## பட்டியலை கையளித்ததும் கட்டணம் அறவிட முடிவு

### தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையால் புதிய முறை அறிமுகம்



நீர்க் கட்டணப் பட்டியலை வழங்கும் சந்தர்ப்பத்தில், அதற்கான கட்டணத்தையும் அறவிடும் புதிய முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை தீர்மானித்துள்ளது.

இதற்கான முன்னோடித் திட்டத்தை வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் ஆரம்பிக்கவுள்ளதாக, சபை தெரிவித்துள்ளது.

இந்தப் புதிய செயற்திட்டம் எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி அமுலுக்கு வரவுள்ளது. புதிய முறைமையின் கீழ், நீர் கட்டணப் பட்டியலை பாவனையாளரின் கைகளில் சமர்ப்பிக்கும் போதே, கட்டணம் அறவிடப்படவுள்ளது. வங்கி வரவட்டை அல்லது கடனட்டை மூலம் இதனை அறவிட முடியுமென தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பியல் பத்மநாத தெரிவித்துள்ளார்.

## தப்பிச்சென்ற இரு கைதிகளில் ஒருவர் இராமேஸ்வரத்தில் தஞ்சம்

### மற்றவரை தேடி பொலிஸார் வலை வீச்சு

09

## ஐ.நா அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இராணுவ வீரர் மரணம்



மாலியில் ஐ.நா அமைதி காக்கும் பணியில் ஈடுபட்டிருந்த இலங்கை இராணுவ வீரர் ஒருவர், திடீரென நோய்வாய்ப்பட்டு உயிரிழந்ததாக இலங்கை இராணுவ ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 42 வயதான லான்ஸ் கோப்ரல் எம்.ஜி.எல். தேசப்பிரிய என்பவராவார்.

இவர், 06ஆவது சர்வீஸ்

06

## நீதிமன்றில் மன்னிப்பு கோரிய சேபால் அமரசிங்க விடுதலை



ஸ்ரீ தலதா மாளிகை தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சேபால் அமரசிங்க விடுலை

06

## எரிபொருள் இறக்குமதி, விநியோகத்திற்கு மூன்று நிறுவனங்கள் தெரிவு

### அமைச்சரவையில் அனுமதி

நாட்டுக்கு எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கும் பொருட்டு, வினைத்திறனுள்ள மூன்று தனியார் நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இதற்கான பிரேரணையை அமைச்சரவையில் சமர்ப்பித்து அனுமதி பெறவுள்ளதாகவும் எரிசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏறக்குறைய 10 தனியார் நிறுவனங்கள், எரிபொருள் இறக்குமதிக்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ளதாகவும், விண்ணப்பங்களை ஆய்வு செய்த சிறப்புக் குழு, மூன்று நிறுவனங்களையே தேர்ந்தெடுத்ததாகவும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

## தேசிய பாதுகாப்புச் சபையை சட்டமாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி

லோரன்ஸ் செல்வநாயகம்

தேசிய பாதுகாப்பு சபையை சட்டமாக்குவதற்கு ஏற்ற வகையில் சட்டமூலமொன்றை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். இதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக சட்டமூல தயாரிப்புக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தேசிய பாதுகாப்பு சபை

06

# கிழக்கின் குரல்



கிழக்கு மாகாணத்தில்

## 45 நாட்களுக்குள் 1,363 டெங்கு நோயாளர்கள்

றொட்டவெவ குறூப் நிருபர்



கிழக்கு மாகாணத்தில் 45 நாட்களுக்குள் 1,363 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண தொற்று நோயியல் நிபுணரும், சமூக வைத்திய நிபுணருமான டொக்டர் எஸ் அருள்குமரன் தெரிவித்துள்ளார்.

டெங்கு தொற்று தொடர்பில் (20) கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவில் 780 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ள நிலையில் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 203 டெங்கு நோயாளர்களும், அக்கரைப்பற்றில் 148 நோயாளர்களும் அட்டாளைச்சேனையில் 118 நோயாளர்களும் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் ஏழு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 25 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் 315 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் செங்கலடி, ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு நகரம் போன்ற இடங்களில் தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில் திருகோணமலை மாவட்டத்தில் மொத்தமாக 243 நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்குட்பட்ட பகுதியில் 87 நோயாளர்களும், உப்புவெளி பகுதியில் 58 நோயாளர்களும், மூதூர் சுகாதார அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 24 டெங்கு நோயாளர்களும், கந்தளாய் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு உட்பட்ட பகுதியில் 19 நோயாளர்களும், கிண்ணியாவில் 18 நோயாளர்களும்,

குச்சவெளியில் 16 நோயாளர்களும் பதிவாகியுள்ளனர்.

ஆகவே பொதுமக்கள் சுற்றுப்புற சூழல்களை சுத்தமாகவும், டெங்கு நுளம்புகள் பரவும் விதத்தில் காணப்படும் பொருட்களை அகற்றுமாறும் கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணியகம் கோரிக்கை விடுத்துள்ளது.

## அறுவடைக்கு தயாராகவுள்ள நெல்வயல்களை சேதப்படுத்தும் காட்டுயானைகள்

ஒலுவில் விசேட நிருபர்

ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் அறுவடை செய்யப்படவுள்ள நெல் வயல்களை காட்டு யானைகள் தேசப்படுத்தி வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மாலை வேளையில் வரும் யானைக் கூட்டம் அறுவடை செய்யவுள்ள நெல் வயல்களை தேசப்படுத்தி வருவதால் பல அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

ஒலுவில் அஷ்ரப் நகர், சம்புநகர், ஹிறாநகர், ஆலிம்நகர் ஆகிய பின் தங்கிய பிரதேசங்களிலும் யானைத் தொல்லை அதிகரித்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள் பீதியின் காரணமாக மாலை நேரங்களில் தங்கள் குடியிருப்பை விட்டு வெளியேறி பாதுகாப்பை தேடி தங்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு சென்று காலையில் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், நோயாளர்கள் போன்றோர் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு நேரங்களில் கிராமங்களுக்குள் உட்புகும் யானைகள் கூட்டம் வீட்டுத் தோட்டங்களையும், சேனைப் பயிர்களையும் சேதப்படுத்தி வருவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகரித்துக் காணப்படும் காட்டு யானைத் தொல்லையை கட்டுப்படுத்துவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பாம்பு தீண்டியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

மாளிகைக்காடு குறூப் நிருபர்

வயற்காணியில் வேலையில் செய்து கொண்டிருந்த வேளையில் பாம்பு தீண்டி வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி ஓட்டமாவடியைச் சேர்ந்த நபரொருவர் உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி சூடுபத்தின சேன பிரதேசத்தில் வசித்து வந்த 61 வயதான சேகு இஸ்மாயில் முஹம்மட் உஸனார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலருணவு

முள்ளிப்பொத்தானை குறூப் நிருபர்



அம்பாறை மாவட்டத்தில் கடந்த 4 தினங்களாக தொடராக பெய்துவரும் அடைமழை காரணமாக அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பல பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளன.

இதனால் ஒலுவில், பாலமுனை, திராய்க்கேணி போன்ற பிரதேசங்கள் வெள்ளத்தினால் மூழ்கியுள்ளதுடன், பல குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலைமையை அவதானித்த OUROWN CHARITY நிறுவனத்தின் தவிசாளர் நஷாட் சம்சுடீன் அப்பிரதேசங்களுக்குச் சென்று பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வீடுகளை பார்வையிட்டத்துடன் அவர்களுக்குத் தேவையான உலருணவுப் பொதிகளை வீடு வீடாகச் சென்று இன, மத, மொழியின்றி அனைவருக்கும் வழங்கி வைத்தார்.

## கல்முனை பிரதேச செயலக சன் குளோமிங் ஒன்றுகூடலும் கௌரவிப்பு நிகழ்வும்

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



கல்முனை பிரதேச செயலகத்தில் பிரமாண்டமான முறையில் ஏற்பாடு செய்யப்பட்ட 2023ஆம் ஆண்டிற்கான ஒன்றுகூடல் நிகழ்வு கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் மருதமுனை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் ஓய்வு பெற்று சென்ற மற்றும் இடமாற்றலாகிச் சென்ற உத்தியோகத்தர்களை கௌரவித்து நினைவு சின்னங்களும் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாரை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

அத்தோடு கௌரவ அதிதியாக கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளரும், கல்முனை பிரதேச செயலகத்தின் முன்னாள் பிரதேச செயலாருமான ஏ.எச்.அன்சார் கலந்து கொண்டு சிறப்பித்தார்.



பாலமுனை அல் ஹிதாயா மகளிர் கல்லூரியில் இரவு நேர கற்றல் செயற்பாடுகளுக்காக பெற்றோர் ஒருவரினால் மின் பிறப்பாக்கி ஒன்றை கையளிக்கும் நிகழ்வு பாடசாலையில் இடம்பெற்றது. நிகழ்வில் பெற்றோரில் ஒருவரான சட்டத்தரணி எம்.எச்.ஹஸான் றுஸ்தி மின் பிறப்பாக்கியினை பாடசாலையின் அதிபர் பி.முஹாஜிரின் மற்றும் உதவி அதிபர்களிடம் கையளிப்பதை காணலாம். (படம்: பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்)

## மருதமுனையில் கடையை உடைத்து திருட்டு

பெரியநீலாவணை விசேட நிருபர்

மருதமுனை பிரதான வீதியில் உள்ள பழங்கள் விற்பனை செய்யப்படும் கடை ஒன்றில் (20) இரவு கடையை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்த திருடர்கள் கடைக்குள் இருந்த பணம் மற்றும் பெறுமதியான பால்மா வகைகள் உட்பட அங்கிருந்த சில பொருட்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

குறித்த கடைக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து சி.சி.ரீ.வி கமரா உதிரிபாகங்களையும் எடுத்துச் சென்றுள்ளனர். பெரியநீலாவணை பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.ஜீ. துஸார திலங்க ஜெயலால் தலைமையிலான பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு மற்றும் அம்பாறை விசேட குற்ற தடுப்பு பிரிவினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

## சாகாமம் பகுதியில் யானையின் சடலம் மீட்பு

வாச்சிக்குடா விசேட நிருபர்



அம்பாரை மாவட்டத்தின் சாகாமம் பிரதேசத்தை அண்மித்த மொட்டையாகல் மலை எனும் மலைப்பகுதியின் பின்பாக நேற்று (21) உயிரிழந்த நிலையில் யானை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் சின்னப்பனங்காடு கிராம உத்தியோகத்தர் பிரிவின் கீழ் வரும் இப்பிரதேசத்தில் யானை ஒன்று இறந்து கிடப்பதாக விவசாயிகளால் வழங்கப்பட்ட தகவலை அடுத்து குறித்த பகுதிக்கு சென்ற சாகாமம் வன விலங்கு பாதுகாப்பு காரியாலய உதவி சுற்றுவட்ட காப்பாளர் ஞா.பிரசாந்தன் மற்றும் கிராம உத்தியோகத்தர் அ.சுபராஜ் உள்ளிட்ட அரச அதிகாரிகள் யானையை மீட்டதுடன் மேலதிக உடற்கூற்று பரிசோதனைகளுக்காக அம்பாறை மாவட்ட வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்திற்கு தகவலை வழங்கியுள்ளனர்.

யானையின் உடலில் குறிப்பிடத்தக்க காயங்கள் எதுவும் காணப்படாத நிலையில் உடற்கூற்றாய்வின் பின்னரே மரணத்திற்கு காரணம் தெரியவரலாம் என அங்கு கடமையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இதேநேரம் நீண்ட நாட்களாக யானைகளின் அட்டகாசம் இப்பகுதிகளில் அதிகரித்து வரும் நிலையில் உயிரிழப்புகளும் உடமைச் சேதங்களும் இடம்பெற்று வருவதுடன் விவசாய நிலங்களையும் யானைகள் அழித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவுக்கு மருத்துவ பொருட்கள்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் IMHO நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய் பிரிவுக்கு மருத்துவ பொருட்கள் அண்மையில் கையளிக்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார பிரச்சினை காரணமாக மருந்துவ தட்டுப்பாடுகள் பல்வேறு வைத்தியசாலைகளில் நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய் பிரிவினால் வன்னி ஹோப் நிறுவனத்துக்கு விடுத்த விசேட வேண்டுகோளின் அடிப்படையில் மருத்துவம் மற்றும் மருத்துவ சாரா பொருட்கள் ஒரு தொகை வன்னி ஹோப் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் M.T.M. பாரிஸ் அவர்களினால் வைத்தியாசாலையின் பணிப்பாளர் கலா ரஞ்சனி கணேசலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்க நாட்டில் உள்ள நல்லைய்யா பவுண்டேசனின் நிதி அனுசரணையில் இவ்மருத்துவ மற்றும் மருத்துவ சாரா பொருட்கள் முதல் கட்டமாக வழங்கி வைக்கப்பட்டது.

## மட்டக்களப்பில் கடந்த வருடம் தொழுநோய் பரவல் அதிகரிப்பு

### பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

வெல்லாவெளி தினகரன் நிருபர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோயை வைத்தியர்களின் ஒருங்கிணைந்த முறையில் விரைவில் கட்டுப்படுத்துவோம் என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம்சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொழுநோய் கருத்தரங்கு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, கிழக்கு பல்கலைக்கழக மருத்துவ பீடம், தொழு நோய்க்கான இலங்கையிலுள்ள அமைப்புகள், பிரித்தானிய தொழுநோய் அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் பணிமனையில் திங்கட்கிழமை(20) நடைபெற்றது. இங்கு கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்...

மட்டக்களப்பில் கடந்த வருடம் மிக அதிகமாக கண்டுபிடிக்கப்பட்ட பெரியவர், சிறுவர்களின் தொழுநோய் எண்ணிக்கையைத் தொடர்ந்து மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் ஒரு மிகப்பெரிய பாய்ச்சலை முன்னெடுத்திருந்தது டன் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இந்தியா சென்று பயிற்சியொன்றை பூர்த்தி செய்ததுடன் அங்கு பிரசன்னமாகியிருந்த பிரித்தானிய The Leprosy Mission ஐயும் மட்டக்களப்பிற்கு வருமாறும் அழைப்பு விடுத்திருந்தோம்.

இன்றைய கருத்தரங்கில் மட்டக்களப்பில் அதிகரித்துவரும் தொழுநோயை கட்டுப்படுத்துவதில் இணைந்துகொண்ட அனைவரும் தமது பங்களிப்பை வழங்குவதாக உறுதியளித்திருந்தனர்.

விரைவில் நாம் ஒருங்கிணைந்த முறையில் தொழுநோயை மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டுப்படுத்துவோம் என பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

## மட்டுநகர் வாவியில் வெளிநாட்டுப் பறவைகள்



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு அழகு சேர்க்கின்றது மட்டக்களப்பு வாவியாகும். சுமார் 103 கிலோ மீற்றர் நீளம் கொண்ட இந்த வாவியைப் பயன்படுத்தி ஆயிரக்கணக்கான மக்கள் தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வருகின்ற இந்நிலையிலும், பல உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் கவனத்தையும் இந்த வாவி ஈர்த்துள்ளது.

இந்நிலையில் மட்டக்களப்பு வாவியில் பல வெளிநாட்டுப் பறவைகள் மிகவும் குதூகலத்துடன் இரையுண்டு வாழ்ந்து வருவருவதையும், வாவியை இரசிக்க வருபவர்களை இக்காட்சிகள் மிகவும் கொள்ளை கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 பெப்ரவரி 22 புதன்கிழமை

தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 05.11
லுஹர் - 12.26
அஸர் - 03.47
மஃரிப் - 06.22
இஷா - 07.33

இன்றைய சுபதினம்
சுபகிருது வருடம் மாசி 10
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



உள்நாட்டு, வெளிநாட்டு முதலீடுகள் உள்ளீர்ப்பு

# முதலீடுகளுக்கான அனுமதியைத் துரிதப்படுத்த பொருளாதார ஆணைக்குழு நியமிக்கப்படும்

## பறவைகள் பூங்கா திறப்பு நிகழ்வில் ஜனாதிபதி தெரிவிப்பு

உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு அதிக வாய்ப்புக்களை வழங்கும் நோக்கில் முதலீடுகளுக்கான அனுமதியை துரிதமாக பெற்றுக்கொடுக்க, பொருளாதார ஆணைக்குழுவொன்று நியமிக்கப்படுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.



கண்டி, ஹந்தானையில் நிர்மாணிக்கப்பட்ட நாட்டின் முதலாவது புலம்பெயர் பறவைகள் பூங்கா மற்றும் சூழல் சுற்றுலா வலயத்தை (20) திறந்து வைக்கும் நிகழ்விலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை தெரிவித்தார். இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்ததாவது,

இலங்கைக்கு வரும் முதலீட்டாளர்கள், தமது வர்த்தக நடவடிக்கைகளுக்கு அனுமதி பெறுவதற்கு நீண்ட காலம் தேவைப்படுகிறது. இதனால் நாடு பாரியளவு வருமானத்தை இழக்கிறது. இந்தச் சிக்கல்களைப் போக்குவதற்கு பொருளாதார ஆணைக்குழுவை நியமித்து அனுமதி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இன்று இந்த இடத்திற்கு வந்தபோது எனக்கு இன்னுமொரு பறவைகள் பூங்கா நினைவுக்கு வந்தது. ஆறாம் பராக்கிரமபாகு மன்னன் காலத்தில், இவ்வாறான பறவைகள் பூங்காவொன்று அமைக்கப்பட்டதாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பறவைகள் தீவிலேயே,முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன பாராளுமன்றத்தை நிறுவியுள்ளார். இப்போது அன்றிருந்த பறவைகள் அங்கு இல்லை.எனினும் வெவ்வேறு வகையான பறவைகள் உள்ளன.

இந்தப் பறவைகள் பூங்காவை நிர்மாணிப்பதில் சுமார் 20 வருட காலங்கள் கஷ்டங்களுக்கு முகங்கொடுத்ததாக கோட்டேகொட குறிப்பிட்டுள்ளார். எது, எப்படியோ, கோட்டேகொட இந்த சர்வதேச பறவைகள் பூங்காவை இன்று நாட்டுக்கு சமர்ப்பித்துள்ளார். சிங்கப்பூரின் ஜூரோன் பறவைகள் பூங்காவை மாதிரியாகக் கொண்டு இந்த சர்வதேச பறவைகள் பூங்காவை உருவாக்கியதாக அவர் கூறினார். புதிய பொருளாதாரப் பயணத்துடன் இலங்கை முன்னோக்கிச் செல்ல வேண்டுமாயின் முதலீட்டு வாய்ப்புகள் அதிகரிக்கப்பட வேண்டும்.

முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்த பின்னர், அவர்களது வர்த்தகங்களுக்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்கு 10 வருடங்கள் செல்கிறது. இந்தநிலையை மாற்ற வேண்டும்.

புதிய பொருளாதார திட்டத்தின் கீழ் உற்பத்தி, ஏற்றுமதி பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்பத் துறைகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அதிக வாய்ப்புகள் வழங்கப்படுவது அவசியம்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன மூன்று மாத குறுகிய காலப்பகுதியில் பாரிய கொழும்பு பொருளாதார திட்டத்தை நிறைவேற்றினார். பொருளாதார நன்மை இலங்கைக்கு கிடைத்தது. ஜனாதிபதி பிரேமதாசவின் 200 ஆடைக் கைத்தொழில் வேலைத்திட்டம் மூன்று வாரங்களில் அங்கீகரிக்கப்பட்டது.

இவ்வாறு முதலீட்டு வாய்ப்புக்களை அதிகரிக்காவிட்டால் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியாது. இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொறுப்பு அமைச்சர் திலும் அமுனுகமவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நமது நாட்டின் சுற்றுலாத் துறைக்கு மதிப்பை வழங்கி, இந்த பறவைகள் பூங்காவை நாட்டிற்கு வழங்கியதற்கு நன்றி தெரிவிக்கிறேன்." என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

புலம்பெயர்ந்த பறவைகள் பூங்கா மற்றும்

06

பொருளாதார உறுதிப்படுத்தல் குழு

# அமைச்சர் ஜீவன், ஸ்ரீதரன் உட்பட 15 பேர் நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொருளாதார உறுதிப்படுத்தல் குழுவின் உறுப்பினர்களாக அமைச்சர் ஜீவன் தொண்டமான், சிவஞானம் ஸ்ரீதரன் உட்பட 15 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 123 ன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த (10) பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றிற்கு அமைவாக, பொருளாதார உறுதிப்படுத்தல் தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று சபையில் அறிவித்தார்.

அதற்கிணங்க அமைச்சர்களான பவித்ரா வன்னியாரச்சி,ஹரீன் பெர்னாண்டோ, ஜீவன் தொண்டமான், இராஜாங்க அமைச்சர்களான செஹான் சேமசிங்க,தாரக பாலசூரிய பாராளுமன்ற உறுப்பினர்களான சி.பி.ரத்நாயக்க,விமல் வீரவன்ச,நாமல் ராஜபக்ஷ,நாலக கொடஹேவா, சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே,அலவதுவெல,சிவஞானம் ஸ்ரீ தரன், ஹெக்டர் அப்புஹாமி,அகில எல்லாவல, வருண லியனகே ஆகியோர் பொருளாதார உறுதிப்படுத்தல் குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற அலுவல்கள் குழு

# மனோ, ஹக்கீம், சுமந்திரன், ரிசாட் உறுப்பினர்களாக நியமனம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் உறுப்பினர்களாக எம்பிக்களான மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், ரிசாட் பதியுதீன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.ஏ சுமந்திரன் ஆகியோர் உட்பட 10 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 115 ன் ஏற்பாடுகள் மற்றும் கடந்த (10) பாராளுமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பவற்றுக்கு அமைவாக, பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் பெயர்களை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன சபையில் அறிவித்தார்.

அதற்கிணங்க பாராளுமன்ற உறுப்பினர்களான கயந்த கருணாதிலக,

06

# கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் சர்வதேச தாய் மொழித் தினம்

## பிரதமர் தலைமையில் அனுஷ்டிப்பு



சர்வதேச தாய் மொழித் தினம் (International Mother Language Day) பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில், இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயத்தின் ஏற்பாட்டில் நேற்று (21) கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடத்தப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் பெப்ரவரி (21) இல், இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

சர்வதேச தாய் மொழித் தினமானது அமைதியை ஏற்படுத்துதல், பன்மொழி பயன்பாட்டை மேம்படுத்துதல், உலகளாவிய ரீதியில் காணப்படும் தாய் மொழிகளைப் பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை மையப்படுத்தியதாக நடாத்தப்படுகிறது. இலங்கைக்கான பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயம், கல்வி அமைச்சு, இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மற்றும் இலங்கையின் சாரணர் இயக்கம் என்பன இணைந்து இம்முறை சர்வதேச தாய் மொழித் தினத்தை ஒழுங்கு செய்திருந்தன.

இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் டரேக் அரிபுல் இஸ்லாம் (Tareq Ariful Islam) உள்ளிட்ட பல நாடுகளது தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள், ஐக்கிய நாடுகள் சபையின் நிரந்தர பிரதிநிதி சரத் தாஸ், இராஜாங்க அமைச்சர்களான சுரேன் இராகவன், தாரக பாலசூரிய, பிரதமரது செயலாளர் அநுர திசாநாயக்க, கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரணசிங்க ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்த உரிய நடவடிக்கை எடுங்கள்

## கிரியெல்ல எம்பி, சபாநாயகரிடம் கோரிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சி பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல எம்பி, பாராளுமன்றத்தில் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவைக் கேட்டுக் கொண்டார்.

உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் விசேட கூற்றொன்றை முன்வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்காக வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்டதால், நிதியும் செலவிடப்பட்டது. ஆனால், தற்போது உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் நம்பிக்கையற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சர்வதேச ரீதியில் பெரும் பிரச்சினைகளை எதிர்கொள்ள நேர்வதுடன், ஜி.எஸ்.பி. வரிச்சலுகையையும் இழக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அவர்:

06

# உள்ளூராட்சி சபைத் தேர்தல் கட்டுப்பணத்தை மீள வழங்க முடியாது

## ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



உள்ளூராட்சித் தேர்தலை மார்ச் (09) நடத்த முடியாதென உயர் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும், கட்டுப்பணத்தை மீள வழங்க முடியாதென தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா தெரிவித்தார்.

வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கு அரசாங்கம் பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் எல்லை நிர்ணயம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டால் மட்டுமே வேட்புமனுக்கள் இரத்து செய்யப்படும்.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட

06






நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 247.01 | 258.31 |
| கனடியன் டொலர் | 266.36 | 277.87 |
| யூரோ | 384.45 | 399.49 |
| ஜப்பான் யென் | 2.7062 | 2.8094 |
| சிங்கப்பூர் டொலர் | 269.78 | 280.64 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 431.81 | 447.74 |
| சுவிஸ் பிராங்க் | 384.84 | 402.89 |
| அமெரிக்க டொலர் | 360.09 | 370.26 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹறின் டினார் | 960.04 | கட்டார் ரியால் | 99.31 |
| குவைத் டினார் | 1,183.80 | சவூதி ரியால் | 96.47 |
| ஓமான் ரியால் | 940.10 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 98.54 |

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் மாசி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரஜப் பிறை 30

### குறள் தரும் சிந்தனை



உலகத்தார் உண்டென்பது இல்லென்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்

உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்ற ஒருவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகக் கருதி விலக்கப்படுவான்.

## திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பதால் மக்கள் மத்தியில் அவதானம் தேவை

நாட்டில் திருட்டு, வழிப்பறி கொள்ளை, களவு என்பன கடந்த சில வாரங்களாக நாளாந்தம் பதிவாகி வருகின்றன. இதனை பொலிஸாரின் தரவுகளும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கின்றன.

பொதுப்போக்குவரத்து பஸ்வண்டிகள், ரயில்கள் என்பனவற்றில் மாத்திரமல்லாமல் நடைபாதைகளிலும் கூட இவ்வித துரதிர்ஷ்ட சம்பவங்கள் இடம்பெறவே செய்கின்றன. அத்தோடு வீடுகளில் புகுந்து கொள்ளையடிக்கும் சம்பவங்களும் திருட்டுக்களும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு நாட்டில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவது குறித்தும் அவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்தும் சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினர் தீவிர கவனம் செலுத்தியுள்ளனர். இது தொடர்பிலான விஷேட நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். இந்நிலையில் இவ்விதமான குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன்ஆஜர்படுத்தப்பட்டு சட்ட ரீதியில் தண்டனையும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

ஆனாலும் இவ்வாறான குற்றச்செயல்களுக்கும் அவை அதிகரிப்பதற்கும் மக்கள் துணைபோவதாக சமூக ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர். நாடு கடந்த வருடம் மிகவும் மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. அந்நெருக்கடியின் விளைவாக அன்றாட வாழ்வாதார வருவாயையும் தொழில்வாய்ப்புகளையும் பெரும்பாலானவர்கள் இழந்துள்ளமை இவ்வாறான குற்றச்செயல்களுக்கு வழிவகுக்க முடியும். இது இலங்கைக்கு ஒரு புதிய விடயமான போதிலும், பொருளாதார நெருக்கடிக்கு உள்ளான பல நாடுகள் இவ்வாறான அனுபவங்களை ஏற்கனவே பெற்றுள்ளன.

அதனால் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாடு கட்டம் கட்டமாக மீட்சி பெற்று வருகின்ற போதிலும், இந்நெருக்கடிக்கு முன்னரான இயல்புநிலையை இன்னும் அடையவில்லை. அதேநேரம் தற்போதைய காலசூழ்நிலையைக் கருத்தில் கொண்டு பாதுகாப்பு தொடர்பில் முன்னெச்சரிக்கையுடனும் விழிப்புணர்வுடனும் செயற்பட வேண்டிய தேவையும் பரவலாக உணரப்பட்டுள்ளது.

தற்போதைய சூழலில் பொதுப்போக்குவரத்தில் பயணங்களை மேற்கொள்ளும் போது மக்கள் விழிப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்பட வேண்டும். குறிப்பாக தங்க நகைகளை வெளியே காட்சிப்படுத்தும் வகையில் பயணங்களை அமைத்துக் கொள்ளக்கூடாது. அண்மையில் இரண்டு பவுண் தங்கச் சங்கிலியை கழுத்தில் அணிந்தபடி பஸ்ஸில் உறங்கிக் கொண்டு பயணித்த பயணியொருவரின் சங்கிலி திருடன் ஒருவரால் பறித்து செல்லப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவியொருவர் தமது பல்கலைக்கழகப் புத்தகப் பொதியில் கையடக்கத் தொலைபேசியை வைத்துவிட்டு ரயிலில் ஏறிப்பார்த்த போது, கையடக்கத் தொலைபேசி களவாடப்பட்டிருப்பது மாணவியை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

மற்றொரு ரயில் பயணி முகநூலில் மூழ்கி இருந்த சமயம், ஒரு தரிப்பிடத்தில் வைத்து திடீரென அங்கு தோன்றிய இனம் தெரியாத நபர் அந்நபரின் கையடக்கத் தொலைபேசியைப் பறித்து சென்ற சம்பவமும் அண்மையில் பதிவாகியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, மோட்டார் பைசிக்கிளை தரித்து நிறுத்தி விட்டு கைப்பிடியைப் பூட்டி வைக்காமல் கடையொன்றுக்கு பொருள் வாங்கச் சென்ற நபர் பொருட்களை வாங்கிக்கொண்டு திரும்பி வந்து பார்த்த போது, மோட்டார் பைசிக்கிள் திருடப்பட்டிருப்பதை அறிந்து அந்நபர் அதிர்ச்சியடைந்துள்ளார். இது தொடர்பில் பொலிஸில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸார் சி.சி.ரி.வி. கமெராவைப் பரீட்சித்த போது, குறித்த மோட்டார் பைசிக்கிளை திருடன் தமது மோட்டார் பைசிக்கிள் போன்று உருட்டிச் செல்வதை கண்டறிந்தனர்.

இவ்வாறு பல்வேறு விதமான நுணுக்கமான திருட்டுகளும் கொள்ளைச் சம்பவங்களும் நாளாந்தம் பதிவாகிய வண்ணமுள்ளன. அதனால் தற்போதைய சூழலில் மக்கள் விழிப்புடனும் முன்னெச்சரிக்கையுடனும் செயற்படுவது இன்றியமையாததாகும். குறிப்பாக வீட்டுக்கு வெளியே செல்லும் போது தங்க ஆபரணங்களை அணிந்து செல்வதை காட்சிப்படுத்தாமல் மிகுந்த பாதுகாப்போடு பயன்படுத்த வேண்டும்.

அத்தோடு பஸ், ரயில் உள்ளிட்ட பொதுப்போக்குவரத்துக்களில் பயணம் செய்யும் போது திருட்டு குறித்து விழிப்பாக இருக்கத் தவறலாகாது. முகநூல் போன்ற போன்ற சமூக ஊடகங்களில் மூழ்கி இருப்பதை தவிர்த்துக் கொள்வது நல்லது. தங்க நகைகளை அணிந்தபடி பொதுப்போக்குவரத்தில் பயணிக்கும் போது ஜன்னல்களுக்கு அருகில் அமர்ந்து பயணிக்கும் போது கூடுதல் விழிப்புடன் இருப்பது அவசியம் என்று பொலிஸாரும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆகவே திருட்டு, வழிப்பறிக் கொள்ளைகளுக்கு துணைபுரியக் கூடிய வகையில் தமது செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதை ஒவ்வொருவரும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இவ்விதமான குற்றச்செயல்கள், அது தொடர்பிலான சந்தேக நபர்கள் குறித்து சட்டத்தை அமுல்படுத்தும் தரப்பினருக்கு உடனுக்குடன் புகாரளிக்கவும் தவறக்கூடாது. இவ்வாறான நடவடிக்கைகளின் ஊடாக இவ்விதமான குற்றச்செயல்களைத் தவிர்த்துக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

editor.tkn@lakehouse.lk

### உத்தரவாத விலையில் நெல் கொள்வனவு;

# ஜனாதிபதியின் அறிவிப்பினால் மகிழ்வுற்ற அம்பாறை மாவட்ட நெற்செய்கையாளர்கள்

பெரும்போக விவசாயிகளின் அறுவடைநெல் ஒரு கிலோகிராம் 100 ரூபா உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்படும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவிப்பு தொடர்பில் அம்பாறை மாவட்ட பெரும்போக விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக நெல்அறுவடைப் பணிகள் தற்போது மும்முரமாக

இடம்பெற்று வருகின்றன. இம்முறை 2022/2023 பெரும்போகத்தில் மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் சுமார் 01 இலட்சத்து 10 ஆயிரம் ஏக்கர் காணிகளில் நெல் செய்கை பண்ணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நெல் சந்தைப்படுத்தும் சபை உத்தரவாத விலையில் நெல்லை கொள்வனவு செய்யும் பணிகள் இம்முறை தாமதமடைந்ததனால், அம்பாறை மாவட்ட விவசாயிகள் தங்களது அறுவடை நெல்லை அரிசி ஆலை உரிமையாளர்கள், தனியார் வர்த்தகர்கள், இடைத்தரகர்கள் ஆகியோருக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வந்தனர்.

இதனால் விவசாயிகள் அதிகம் சிரமங்களையும், பெருமளவு நஷ்டத்தையும் எதிர்கொண்டு வருவதாக கவலை தெரிவித்திருந்தனர். இச்சந்தர்ப்பத்திலேயே ஜனாதிபதியின் உத்தரவாத விலை நெல் கொள்வனவு அறிவிப்பு வெளியானது. அதனைத் தொடர்ந்து தனியார் நெல் கொள்வனவாளர்களும் தங்களது நெல் விலையில் அதிகரிப்பை மேற்கொண்டுள்ளனர். இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

கடந்த சிறுபோகத்தில் சுமார் 8200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்பனை செய்யப்பட்டு வந்த, 65 கிலோகிராம் நிறையுடைய நெல் மூடையொன்று, இம்முறை 4700 ரூபா வரை வீழ்ச்சி கண்டது. ஜனாதிபதியின் பணிப்பைத் தொடர்ந்து, தற்பொழுது நெல் விலை மீண்டும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இம்முறை விவசாயிகளுக்கு சுமாரான விளைச்சல் கிடைத்து வருகின்றது. ஏக்கரொன்றுக்கு 100 புசல் முதல் 120 புசல் வரையே பரவலான விளைச்சல் கிடைத்து வருவதாக விவசாயிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.





நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, நெற்செய்கைக்கான உற்பத்திச் செலவு கணிசமானளவு அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் நெல்விலை வீழ்ச்சியானது, விவசாயிகளை வெகுவாகப் பாதித்துள்ளது. அதிகரித்த உற்பத்திச் செலவுக்கு மத்தியில் குறைந்தளவு விளைச்சல், கணிசமானளவு விலைக் குறைவு என்பன விவசாயிகளின் நஷ்டத்திற்கு பிரதான காரணங்களாக குறிப்பிடப்படுகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் அரசின் உத்தரவாத நெல் கொள்வனவுத் திட்டம் தாமதமடையும் சந்தர்ப்பங்களில் விவசாயிகள் அதிகம் சிரமங்களை எதிர்கொள்வது வழமை. தனியார் வர்த்தகர்கள் மிகக்குறைந்த விலையில் நெல் கொள்வனவில் ஈடுபட்ட கசப்பான சம்பவங்களும் கடந்த போகங்களில் இடம்பெற்றமை தெரிந்ததே. இவ்வாறான சந்தர்ப்பங்களில் ஏழை விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு, வீண்நஷ்டத்தை எதிர்கொள்கின்றனர்.

நாட்டின் மொத்த தேசிய நெல் உற்பத்திக்கு அம்பாறை மாவட்ட விவசாயிகள் காத்திரமான பங்களிப்பு நல்கி வருகின்றமை தெரிந்ததே. அம்பாறை மாவட்டத்திலுள்ள மூவின மக்களில் அதிகமானவர்கள் விவசாயத்துடன் நேரடித் தொடர்பினையும், மறைமுகத் தொடர்பினையும் கொண்டுள்ளனர். தற்காலத்தில் நெற்செய்கைக்கு பாரியளவு முதலீடு தேவையாக உள்ளது. இதன் காரணமாக, அம்பாறை மாவட்டத்தில் பரம்பரை, பரம்பரையாக விவசாயத்தை தங்களது ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டுவரும் விவசாயிகள், அத்தொழிலை கைவிடும் நிலைக்கு இன்று தள்ளப்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி வெளியிட்டுள்ள உத்தரவாத விலை நெல் கொள்வனவு அறிவிப்பானது விசாயிகளின் மனங்களில் பால் வார்த்துள்ளது. அதுமாத்திரமன்றி நெற்செய்கையின் எதிர்காலம் குறித்த நம்பிக்கையையும் ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

நெல் கொள்வனவுடன் சம்பந்தப்பட்டவர்கள் ஜனாதிபிதியின் உத்தரவை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதிலயே இதன் வெற்றி தங்கியுள்ளது.

**முகம்மட் றிஸான்...**
(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)

# துருக்கி, சிரியாவுக்கு நிவாரண உதவி சேகரிப்பில் ஈடுபடும் சவூதி அரேபியா

துருக்கி மற்றும் சிரியாவில் நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக நாடுகள் அனைத்தும் உதவியளித்துக் கொண்டிருக்கின்றன. சவூதி அரேபியா அனர்த்த நிவாரண முகாமைத்துவத்தை வித்தியாசமான முறையில் கையாள்கிறது.

ஏனைய நாடுகளைப் போன்றே பாதிக்கப்பட்டவர்களது உணவுத் தேவையை நிறைவேற்றுவதற்காக ஆரம்ப கட்டமாக 35 தொன் உணவுப் பொருட்கள் கொண்ட விமானத்தை சவூதி அரேபியா சிரியாவுக்கு அனுப்பி வைத்தது. ஏனைய இரண்டு விமானங்கள் செல்லத் தயார் நிலையில் நின்றிருந்தன. தரைமார்க்கமாகவும் 105 தொன் உணவுப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

சவூதி அரேபியாவின் தேடல் மற்றும் மீட்புப் பணிகளுக்கான விசேட குழு துருக்கி மற்றும் சிரியாவை சென்றடைந்து அங்குள்ள இதர குழுக்களுடன் இணைந்து சேவையை வழங்க ஆரம்பித்தது.

சவூதி அரேபியாவின் அரசும் அந்நாட்டு பிரஜைகளும் இணைந்து, நன்கொடைகளை சேகரிப்பதில் ஈடுபாடு காட்டுவது அனைவரையும் திரும்பிப் பார்க்க வைக்கக் கூடிய ஒரு செயலாக மாறியுள்ளது. மனிதாபிமான உதவிகள் மற்றும் நிவாரணத்திற்கான மன்னர் ஸல்மான் மையத்தினால் உருவாக்கப்பட்ட (ஸாஹிம் பிலட்போம்) எனும் விண்ணப்பப்பத்திரத்தின் ஊடாக சிரியா மற்றும் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நன்கொடைகளை சேகரிப்பதற்கான பணிகள் தொடங்கியுள்ளன.

அதன் மூலமாக பெருமளவு பணமும் சேகரிக்கப்பட்டு வருகின்றது. உதவிகள் அனைத்தும் குறித்த இரண்டு நாடுகளிலும் பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக அவ்வரசாங்கங்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன.





கலாநிதி **அஸ்ஹர்...**
(மதனி)

# அநுராதபுரத்துக்கு சுற்றுலாப்பயணிகள் வருகை ஊக்குவிக்கப்பட வேண்டும்



இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பிரயாணிகளில் நூற்றுக்கு மூன்று வீதத்தினர் மட்டுமே அநுராதபுரம் நகருக்கு வருகின்றனர். இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பிரயாணிகள் கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து நேரடியாக தெற்குப் பிரதேசத்திற்கும் கொழும்பில் உள்ள கடற்கரையோரங்களில் உள்ள உல்லாச ஹோட்டல்களுக்குமே செல்கின்றனர். அவர்களை சுற்றுலா வழிகாட்டிகளும் பிரயாண முகவர்களுமே அழைத்துச் செல்கின்றனர்.

இத்துறையிலும் சில மாபியாக்கள் உள்ளனர். இலங்கை சுற்றுலா அதிகார சபையில் உள்ள பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் சிலர் 5 நட்சத்திர ஹோட்டல்களின் உரிமையாளர்களாக உள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. அவர்களது சொந்த ஹோட்டல்களுக்கே அதிகமான உல்லாசப் பிரயாணிகள் அழைத்துச் செல்லப்படுவதாகக் கூறப்படுகிறது.

ஆனால் இலங்கையில் மிகப் பழைமை வாய்ந்த புராதன உலக பராம்பரிய நகரமான அநுராதபுரம் நகருக்குச் செல்லுமாறு சுற்றுலாப்பிரயணிகளுக்கு வழிகாட்டிகள் அறிவுறுத்துவதில்லை என வடமத்திய மாகாண சுற்றுலாத்துறை ஹோட்டல்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களமும் இலங்கை சுற்றுலா அதிகார சபையும் வடமத்திய மாகாண சுற்றுலாத்துறை அமைச்சும் இணைந்து கொழும்பிலிருந்து 60 இற்கும் மேற்பட்ட ஊடகவியலாளர்களை அநுராதபுரத்திற்கு கடந்த வாரம் அழைத்துச் சென்றிருந்தன. அங்கு ஊடகவியலாளர்கள் இரண்டு நாட்கள் தங்கியிருந்து அநுராதபுரத்தில் உள்ள சில முக்கிய சுற்றுலாத் தலங்களையும் பண்டைய காலத்து ஹோட்டல்களையும் பார்வையிட்டதுடன் அத்துறை சார்ந்தவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் கேட்டறிந்தனர்.

அத்துடன் இந்நகரில் உள்ள இயற்கை வளங்களையும் பாரம்பரிய சுற்றுலாத்தலங்களையும் ஊடகவியலாளர்கள் அவதானித்தனர். அவர்களிடம் சுற்றுலாப் பிரயாணிகளைக் கவருவதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு பயணிகளுக்கும் பொதுமக்களுக்கும் அறிவுறுத்துமாறு அப்பிரதேசத்திலுள்ள சுற்றுலாத்துறை சார்ந்தவர்கள் வேண்டிக் கொண்டனர்.

அத்துடன் சமூகவலைத்தளங்களில் இப்பிரதேசத்தின் முக்கியத்துவத்தை ஆவணப்படுத்துமாறும் வடமத்திய மாகாணசபையின் பிரதம செயலாளர் அறிவுறுத்தினார்.

அங்கு கருத்துத் தெரிவித்த சுற்றுலா ஹோட்டல்கள் உரிமையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் "அநுராதபுரத்திற்கு வரும் சில உல்லாசப் பிரயாணிகள் திருகோணமலை, கண்டி, நுவரெலியா போன்ற இடங்களுக்கு போக்குவரத்து செய்யும் போது வாகனத்திலிருந்தவாறே சில புரதான நகரங்களைக் கண்டுகளித்துச் செல்கின்றனர். ஆனால் ஆசிய நாடுகளாலான சீனா, நேபாளம், தாய்லாந்து, ஜப்பான், பூட்டான் போன்ற நாடுகளிலிருந்து வரும் உல்லாசப் பிரயாணிகளும் சிறிய அளவிலானவர்களும் வெளிமாவட்டங்களிலிருந்து வரும் உள்ளூர்வாசிகளுமே அநுராதபுரம் புனித நகரத்தினை தரிசிக்க வருகின்றனர்.

அவர்களில் உள்ளூர்வாசிகள் காலையில் தங்களது வாகனத்தில் வந்து அன்றே தமது வீடுகளுக்கு திரும்பி விடுகின்றனர். ஆனால் இங்குள்ள ஹோட்டல்களில் இருந்து இங்குள்ள ஆயுர்வேத பரம்பரை வைத்தியம், இங்குள்ள சுவாத்தியமான மரங்கள், கற்பாறைகள், பாரம்பரிய உணவுமுறைகள், உடற்பயிற்சிகள், பௌத்த முறை ஆராதனை, மௌன விரதம், யோகாசனம், இங்குள்ள வாவிகளில் இயந்திரப் படகு சுற்றுலா, வில்பத்து வனப்பிரதேசங்களில் மிருகங்கள் பறவைகளை பார்வையிடல், வாவிகளில் வந்து நீர் அருந்தும் யானைகளை பார்வையிடல் போன்றவற்றில் பலர் ஈடுபடுவதில்லை" எனக் குறிப்பிட்டார்.





இதற்கான வழிவகைகளை அரசாங்கமும் தனியார் முகவர்கள் நிலையங்களும் ஏற்படுத்த வேண்டும். அநுராதபுரம் ஒரு புனித பூமியாகும். இங்கு மனஆறுதல் தேடுபவர்கள் வரமுடியும் என வடமத்திய மாகாண சுற்றுலா பணிப்பாளர் கருத்துத் தெரிவித்தார்

கடந்த காலத்தில் ஏற்பட்ட கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடியினால் அநுராதபுரம் உல்லாசப் பிரயாணத்துறை சார்ந்த தொழிலாளார்கள் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் 10 இற்கும் மேற்பட்ட உல்லாச ஹோட்டல்கள் மூடப்பட்டுள்ளன. இத்துறை சார்ந்தவர்கள் வருமானங்களை இழந்துள்ளனர்.

அநுராதபுரத்திற்கு ஊடகவியலாளாகளை அழைத்துச் சென்று காண்பித்த இடங்களில் திசாவாவி, ரண்மசு பூங்கா, இசுருமுனிய, சந்திரவட்டக்கல்,பங்குவிய, இரட்டைப் பொய்கை (குட்டம்பொகுன), கற்பாலம், மிகிந்தலை போன்ற 50க்கும் மேற்பட்ட புரதான சின்னங்கள் உள்ளன.

**அஷ்ரப். ஏ. சமத்...**

# திருகோணமலை துறைமுகத்தில் இரவுநேர கருமங்கள் ஆரம்பம்




உலகில் உள்ள இயற்கைத் துறைமுகங்களில் ஐந்தாவது பாரிய துறைமுகம் திருகோணமலை துறைமுகமாகும். வரலாற்றுத் தகவல்களின் படி 'ஸோகன்ன' எனக் குறிப்பிடப்பட்டது திருகோணமலை துறைமுகம் என அறியப் பட்டுள்ளது.

1815 மார்ச் 02ஆம் திகதி இலங்கை ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்டது. திருகோணமலை துறைமுகத்தில் உள்ள பாதுகாப்பு அமைவிட தன்மையை அறிந்து பிரித்தானியர்களால் அரச கடற்படை மற்றும் விமானப்படை முகாமொன்று அங்கு அமைக்கப்பட்டது. 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த பின்னர் 1967ஆம் ஆண்டில் திருகோணமலை துறைமுகம் அரசுடைமையாக்கப்பட்டது. 1979 ஆம் ஆண்டு இலங்கை துறைமுக அதிகார சபை அமைக்கப்பட்டதன் பின்னர் திருகோணமலை துறைமுகம் அதன் கீழ் கொண்டுவரப்பட்டது.

கடற் போக்குவரத்து மற்றும் வர்த்தக போக்குவரத்து வளர்ச்சியடைந்ததன் பின்னர் கொழும்பு துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவாக இடம்பெற்றதன் காரணமாக திருகோணமலை துறைமுகத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. ஆனால் உலகின் கைத்தொழில் மற்றும் சுற்றுலா துறைமுகங்களிடையே திருகோணமலை துறைமுகம் வெளிநாட்டவர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

வர்த்தக கடற் போக்குவரத்து நடவடிக்கைகளை விரிவுபடுத்தியதன் பின்னர் திருகோணமலையின் முக்கிய பிரச்சினையாக இரவுநேர நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமலிருந்தது. அதன் காரணமாக இரவு வேளைகளில் வரும் கப்பல்கள் துறைமுகத்துக்கு வெளியே நங்கூரம் இடப்பட்டு பகல் நேரங்களிலேயே துறைமுகத்திற்குள் கொண்டுவரப்பட்டன. அதன் காரணமாக துறைமுக இயங்குதிறன் தொடர்பாக பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்காக 2017 ஆம் ஆண்டு இலங்கை அரசு மற்றும் ஜப்பான் அரசுக்கு இடையே நடைபெற்ற கலந்துரையாடலின் பலனாக ஜப்பான் திட்டமல்லாத வழங்கல் திட்டத்தின் கீழ் (Under The Non Project Grant Aid) மற்றும் 2017 பொருளாதார மற்றும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் (Economic and Social Development Program) கீழ் சர்வதேசத் திருகோணமலை துறைமுகத்தின் இரவு நேர நடவடிக்கைகள் திட்டத்திற்காக ஜப்பான் 01 பில்லியன் ரூபாவை வழங்க நடவடிக்கை எடுத்தது.







இதன் கீழ் கடற் போக்குவரத்து நெரிசல் முகாமைத்துவ தொகுதி, ரேடார் உபகரணம், கலங்கரை விளக்குக்கான உபகரணங்கள், 400 கிலோ வாற் உடைய 2 மின் உற்பத்தி இயந்திரங்கள் , 14 தீயணைப்பு இயந்திரங்கள், 16 கடற்படை மிதவைகள் மற்றும் கட்டளை படகொன்றும் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

நவீன உபகரணங்களுடன் கூடிய 'திருகோணமலை துறைமுக இரவு நேர கடற்படை நடவடிக்கைகள் திட்டம்' (Trinco Night Navigation Operations Project) கடற்படை நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கும் நிகழ்வு அண்மையில் துறைமுக கடற்படை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் விமல் சிறிபால டி சில்வா மற்றும் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் மிசுகோஷி ஹிடெகி மற்றும் துறைமுக கடற்படை மற்றும் விமான சேவைகள் அமைச்சு மற்றும் துறைமுக அதிகார சபை அதிகாரிகளின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

## வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரும் நடவடிக்கைகள்

இந்த இரவுநேர கடற்படை நடவடிக்கைகளை ஆரம்பித்ததன் பின்னர் திருகோணமலை துறைமுகத்தின் அன்றாட நடவடிக்கைகளின் கொள்ளளவை அதிகரிக்க முடியுமென இலங்கை துறைமுக அதிகார சபை நம்பிக்கை தெரிவித்துள்ளது.

தற்போது திருகோணமலை துறைமுகம் சீமெந்து,கனியவள மணல் போன்று எரிபொருள் ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கான வசதிகளை வழங்கும் துறைமுகமாக அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதோடு, துறைமுகத்தை அண்டிய காணிகளில் துறைமுகத்துக்குரிய கைத்தொழில் திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அண்மைக்காலம் வரை நட்டத்தில் இயங்கி வந்த திருகோணமலை துறைமுகம் கடந்த ஆறு மாதங்களில் குறிப்பிட்டளவு இலாபத்தைப் பெற்றுள்ளது. புதிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விசேடமாக துறைமுக மற்றும் கடற்படை கைத்தொழில்களுக்குரிய பல பிரிவுகளுக்கு சந்தர்ப்பம் உள்ளதோடு எண்ணெய், LNG வாயு களஞ்சியப்படுத்தல் போன்ற விசேட கைத்தொழில்களுக்காக இந்த துறைமுகத்தை அண்டிய காணிகளை பயன்படுத்த முடியும் என இலங்கை துறைமுக அதிகார சபை சுட்டிக் காட்டுகின்றது. அதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்ப்பதற்காக துறைமுக அதிகார சபை தற்போது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது.

தமிழில்: ஆர். வயலட்...

# கடல்சார் பாரம்பரியமற்ற குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவதில் பாகிஸ்தான் தீவிர கரிசனை

பாகிஸ்தான் கடற்படையினர் எட்டாவது தடவையாக ஏற்பாடு செய்த ஐந்து நாட்கள் அமான் பன்னாட்டு கடற்படைகளின் பயிற்சியின் நிறைவுநாள் நிகழ்வுகள் வடக்கு அரபுக் கடலில் கடந்த 14 ஆம் திகதி இடம்பெற்றன. இப்பன்னாட்டு பயிற்சியில் ஐம்பது நாடுகள் பங்குபற்றியதோடு, 73 நாடுகள் பார்வையாளர்களாகக் கலந்து கொண்டிருந்தன.

'அமைதிக்காக ஒன்றிணைவோம்'என்ற தொனிப்பொருளிலான இப்பன்னாட்டுப் பயிற்சியில் கடற்படைகளின் விஷேட படைப்பிரிவுகளும் பாகிஸ்தான் உடபட பல நாடுகளது கடற்படைக் கப்பல்கள், யுத்த விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள் மற்றும் அதிவேகப் படகுகளும் பங்குபற்றின.

கடல் மற்றும் கடல்சார் பரப்புகளில் இடம்பெறும் பாரம்பரியமற்ற குற்றச் செயல்களாக விளங்கும் பயங்கரவாத செயற்பாடுகள், போதைப்பொருள் மற்றும் ஆயுதக் கடத்தல், கடற்கொள்ளையர் அச்சுறுத்தல், மனிதக் கடத்தல் என்பன அதிகரித்து வருகின்றன. இக்குற்றச் செயல்களை முறியடித்து கட்டுப்படுத்துவதற்கு பன்னாட்டு அணுகுமுறை மிகவும் அவசியமானது. அவ்வாறான சவால்களைத் தனித்து எதிர்கொள்ளும் திறன் எந்தவொரு நாட்டிடமும் இல்லை.

அதனைக் கருத்தில் கொண்டு பாகிஸ்தான் கடற்படையினர் கடல்சார் பாதுகாப்பு சவால்களைக் கையாள்வதற்கும் பிராந்திய மற்றும் பிராந்தியத்திற்கு அப்பாலான கடற்படைகளுக்கு இடையில் பல்வேறு தொழில்நுட்பத் திறன்களில் இயங்குதன்மையை மேம்படுத்தவும் அமான் பன்னாட்டு பயிற்சியை ஏற்பாடு செய்து நடத்துவதாகக் குறிப்பிட்டுள்ள பாகிஸ்தான் கடற்படைத் தளபதி அட்மிரல் எம். அம்ஜத் கான் நியாஸி, 'இதன் ஊடாக இப்பயிற்சியில் பங்குபற்றும் பிரிவுகளுக்கு இடையில் ஒருங்கிணைப்பைக் கட்டியெழுப்ப எதிர்பார்ப்பதோடு இப்பயிற்சியில் பங்கேற்பதன் மூலம் நம்பிக்கையின் வளர்ச்சிக்கு பங்களிக்கவும் வாய்ப்பு கிடைக்கப் பெறும். பாரம்பரியமற்ற அச்சுறுத்தல்களுக்கு எதிராகப் பிராந்தியத்திலும் பிராந்தியத்திற்கு அப்பாலுள்ள கடற்படைகளுக்கு இடையிலும் ஒத்துழைப்பை ஊக்குவிக்கவும் முடியும்' என்று தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் ஒழுங்கு செய்து நடத்தப்பட்ட இப்பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வுகளில் பாகிஸ்தான் பிரதமர் ஷெஹ்பாஸ் ஷெரிப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். பிரதமர், கடற்படை தளபதி மற்றும் இப்பயிற்சியில் பங்குபற்றிய ஏனைய நாடுகளின் தளபதிகள் ஹெலிக்கொப்டர்கள் மூலம் மொஆவின் கப்பலுக்கு வந்து சேர்ந்ததும், நிறைவுநாள் பயிற்சிகள் ஆரம்பமாகின. மொஆவின் கப்பலில் அமைக்கப்பட்டிருந்த விஷேட மேடையில் அமர்ந்திருந்தபடி பிரதமரும் கடற்படைத் தளபதி உள்ளிட்ட ஏனைய முக்கியஸ்தர்களும் நிறைவுநாள் பயிற்சிகளை பார்வையிட்டனர்.







'அமைதிக்காக ஒன்றிணைவோம்' தொனிப்பொருளில் அரபுக்கடலில் அமான் பன்னாட்டு கடற்படைகள் பயிற்சி

இப்பயிற்சியின் முதல் அங்கமாக ஆழ்கடலில் பயணித்துக் கொண்டிருக்கும் கப்பலொன்றுக்கு எரிபொருள் தேவைப்படும் போது அதனை ஏனைய கப்பல்களில் இருந்து வழங்கும் முறைமை இடம்பெற்றது. அதேநேரம் கடல் கடல்சார் பரப்புக்களில் இடம்பெறும் பாரம்பரியமற்ற குற்றச்செயல்களை முறியடிப்பதற்கும் அதிவேகப் படகுகளும் கப்பல்களும் மேற்கொள்ளக் கூடிய பங்களிப்பை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிகள் இடம்பெற்றன.

அத்தோடு எதிரி இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கி அழிக்கும் பயிற்சிகளும் முன்னெடுக்கப்பட்டன.

சுமார் 20 கப்பல்கள் பங்குபற்றிய இப்பயிற்சியில் யுத்த விமானங்கள், ஹெலிக்கொப்டர்கள், மிக் விமானங்கள் என்பனவும் பங்கு கொண்டன.

இச்சமயம் கருத்துத் தெரிவித்த பிரதமர் ஷெஹ்பாஸ், 'பிராந்தியத்தில் அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக அமான் 2023 பயிற்சியை வெற்றிகரமாக நடத்தியமைக்கு பாகிஸ்தான் கடற்படையினரைப் பெரிதும் பாராட்டி நன்றி தெரிவிப்பதாகவும், கூட்டு கடல்சார் பாதுகாப்புக்கும் அமைதியான சகவாழ்வின் நிமித்தம் கைகோர்த்து பங்குபற்றிய பிராந்திய மற்றும் பிராந்தியத்திற்கு அப்பாலுள்ள நாடுகளின் கடற்படைகளுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார்.

அத்தோடு 'அனைத்து பங்குதாரர்களின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் ஊடாகப் பிராந்தியத்தை மிகவும் அமைதியானதாகவும் பாதுகாப்பானதாகவும் மாற்ற அமான் 2023 வகுக்கும்' என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் பிரதமஅதிதியாகக் கலந்து கொண்ட பிரதமருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்ட கடற்படைத்தளபதி, பிராந்தியத்தின் கடல் பாதுகாப்பை தனித்தனியாகவும் நட்பு நாடுகளின் கடற்படைகளுடன் இணைந்தும் மேம்படுத்துவதில் பாகிஸ்தான் கடற்படையினர் தொடர்ந்தும் தம் ஆற்றல்மிக்க பங்கை வழங்குவார்கள் என்று உறுதிபடக் கூறியுள்ளார்.

இந்தப் பன்னாட்டு பயிற்சியில் பங்குபற்றிய கப்பல்கள் பயிற்சியின் நிறைவில் பிரதம அதிதிக்கு மரியாதை செலுத்திய வண்ணம் மொஆவின் கப்பலை அணிவகுத்து கடந்து செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அச்சமயம் பிரதமர், கடற்படைத்தளபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் எழுந்து நின்று கையசைத்த வண்ணம் ஒவ்வொரு கப்பலுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். ஐந்து நாட்கள் நடைபெற்ற இப்பயிற்சியின் நிறைவைக் குறிக்கும் வண்ணம் இவ்வேறபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



மர்லின் மரிக்கார்...

# அக்கரைப்பற்று பள்ளிவாசலில் மாபெரும் இரத்ததான முகாம்

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு அன்பளிப்புச் செய்யும் நோக்கிலும், இவ்வைத்தியசாலையில் காணப்படும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாகவும் அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆப் பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட 2023ஆம் ஆண்டுக்கான மாபெரும் இரத்ததான முகாம், பள்ளிவாசல் நிர்வாகசபைத் தலைவர் எம்.எம். றியாத் தலைமையில் அண்மையில் பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

இரத்ததான முகாமின் ஆரம்ப நிகழ்வில், தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவரும், திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா, சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரும், இலங்கை இராணுவத்தின் 24ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தளபதியுமான மேஜர் ஜெனரல் விபுல சந்தரசிறி, மேல்நீதிமன்ற நீதிபதி அல்ஹாபீழ் என்.எம்.அப்துல்லாஹ், அக்கரைப்பற்று பிரதேச செயலக உதவிப்பிரதேச செயலாளர் அஷ்ஷேக் றாசீத் யஹ்யா, பள்ளிவாசல் நிர்வாக செயலாளர் அஷ்ஷேக் ஜே.எம்.சியாப் (ஸலபி) மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்கள், உறுப்பினர்கள், பாதுகாப்புப் படையின் உயரதிகாரிகள், மும்மதத் தலைவர்கள், உலமாக்கள், வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்தியர்கள், தாதி உத்தியோகத்தர்கள், பள்ளிவாயல் நிர்வாக சபை பிரதிநிதிகள், சமூக சேவை அமைப்புக்களின் உறுப்பினர்கள், தொண்டர் அமைப்புகள், சமூக சேவையாளர்கள் மற்றும் இரத்த நன்கொடையாளர்கள் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டார்கள்.

இப்பள்ளிவாசல் நிர்வாகசபை மற்றும் உறுப்பினர்களின் முயற்சியினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்ததான முகாமில் ஆண்கள், பெண்கள், இஸ்லாமிய மார்க்க கல்வி பயிலும் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு உதிரத்தை தானமாக வழங்கி இந்நிகழ்வின் வெற்றிக்கு பெரிதும் உதவினார்கள். இந்த இரத்ததான முகாமில் 288 இரத்த நன்கொடையாளர்கள் கலந்து கொண்டு இரத்தம் வழங்கிய போதிலும், அதில் 248 பேரின் இரத்த சேகரிப்புகளை மாத்திரமே பாவனைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை பெற்றுக் கொண்டது.



அதாஉல்லா எம்.பியும் பங்கேற்பு

இப்பள்ளிவாசலானது மதசார்பான நிகழ்வுகளுக்கு அப்பால், சமூக சேவை விடயங்களான இரத்தானம் வழங்கல், சிரமதான நிகழ்வில் பங்குகொள்ளல் மற்றும் வசதி குறைந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான அத்தியாவசிய உபகரணங்கள் வழங்கல், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் மற்றும் இன நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் வகையிலான மும்மதங்களையும் சேர்ந்தவர்களுக்கான பொருளாதார உதவிகளையும் மேற்கொண்டு வருகின்றது.

"இம்முறை நடைபெற்ற இரத்தானம் முகாம் மூலம் கிடைக்கப்பெற்ற 248 பேரின் குருதி எமது வைத்தியசாலையில் நோயாளிகளுக்கான உதிரத்தை வழங்குவதற்கு பெரும் உதவியாக இருந்ததோடு, இதனை ஏற்பாடு செய்து தந்த அக்கரைப்பற்று தக்வா ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகத்திற்கு நன்றி தெரிவிக்கிறோம்" என்று அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பதில் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.எச்.எம்.சனூபர் தெரிவித்தார்.



எம்.எஸ்.எம். றிஸ்வான்...
(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

# காரைதீவு விபுலானந்தா கல்லூரியின் வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் வைரவிழா சிறப்பு மலர் வெளியீடு விபுலானந்தா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் எம். சுந்தரராஜன் தலைமையிலும், தலைவர் முன்னாள் அதிபர் தி. வித்யாராஜன் ஒருங்கிணைப்பிலும் விழா இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக மேனாள் கல்வித்துறை பேராசிரியர் கலாநிதி செல்லையா அருள்மொழி கலந்து சிறப்பித்தார். கிழக்கு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எந்திரி.என்.சிவலிங்கம், காரைதீவு பிரதேச செயலாளர் சிவ ஜெகராஜன் உள்ளிட்ட பல அதிதிகள் கலந்து சிறப்பித்தனர்.

வைரவிழா சிறப்பு மலர் காரைதீவின் மூத்த சேவையாளர்களான முன்னாள் தவிசாளர்கள் இ. விநாயகமூர்த்தி, டொக்டர் எம். பரசுராமன் ஆகியோருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டது.

சமர்ப்பண உரையை கல்லூரியின் பழைய மாணவர் சங்க ஆலோசகரும் உதவி கல்விப் பணிப்பாளருமான விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்த, நூல் நயவுரையை ஆசிரியை விபுல இளவல் திருமதி அருந்தவவாணி சசிகுமார் நிகழ்த்தினார்.





முன்னாள் பொன்விழா அதிபரும் கல்வித்துறைத் தலைவருமான பேராசிரியர் கலாநிதி செல்லையா அருள்மொழி, கிழக்கு மாகாண மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எந்திரி என்.சிவலிங்கம், முன்னாள் வைரவிழா அதிபர் தி.வித்யாராஜன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

விவேகானந்தாவில் பயின்று வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, கல்வியாளர்களாக நிர்வாகிகளாக பிரகாசித்துக் கொண்டிருக்கின்ற பலர் அழைக்கப்பட்டு இருந்தார்கள். 1950 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மத்திய கல்லூரி எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் பவளவிழாவை கொண்டாட ஏற்பாடு செய்து வருகிறது.

காரைதீவு குறூப் நிருபர்...

## வீழ்ந்த...

இலங்கை வர்த்தக சம்மேளனம் தவிர்ந்த எந்தவொரு கட்சியோ, நபரோ அல்லது நிறுவனமோ சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்மொழிவுகளையோ மாற்று வழிகளையோ சமர்ப்பிக்கவில்லை எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டவுடன் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் அதனை நிறைவேற்றவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, அதனை நிராகரிப்பதாக இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர் சர்வதேச நாணய நிதியத்திற்கு மாற்று யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். எமது நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களான பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு செயற்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி , இலங்கைக்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்கு பாரிஸ் கிளப் உத்தரவாதம் அளித்துள்ளதாகவும், இந்தியா தமக்கு தனித்துவமான முறையை பின்பற்றுகிறது. எவ்வாறாயினும், எதிர்வரும் 23ஆம் திகதி இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ள ஜி20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் அவர்களின் நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். 2023 வரி மாநாட்டை இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் (SLIM) ஏற்பாடு செய்திருந்தது. வரிக் கொள்கை தொடர்பான நிபுணர் மட்டக் கலந்துரையாடலில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர் வட்டவல, இலங்கை பட்டய ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் கென் விஜயகுமார், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன தலைவர் (வரி விதிப்பு ) திஷான் சுபசிங்க மற்றும் வரிக் கொள்கை மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி ஆணையாளர் நாயகம் என்.எம். எம். மிப்லி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் காலநிலை மாற்றம் தொடர்பான சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜயவர்தனவும் கலந்துகொண்டார்.

### நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பில்:

# எதிரணி கோரிய ஒத்திவைப்பு விவாதம் நேற்று நிராகரிப்பு

### கட்சித்தலைவர் கூட்டத்தில் தீர்மானம்

லோரன்ஸ் செல்வநாயகம்

நாட்டின் நெருக்கடி நிலை தொடர்பில் எதிர்க்கட்சியினர் கோரிய சபை ஒத்திவைப்பு வேளை விவாதம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின் போது ஆளும் கட்சியினரால் நேற்று நிராகரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நெருக்கடி நிலை தொடர்பில் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை நடத்துமாறு எதிர்க்கட்சிகள் இரண்டாவது தடவையாகவும் நேற்று வலியுறுத்திய நிலையில் ஆளும் கட்சியினர் அதனை நிராகரித்துள்ளனர்.

எதிர்க்கட்சியின் கோரிக்கை கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று நிராகரிக்கப்பட்டதால் கட்சித் தலைவர்கள் கூட்டம் வாதப் பிரதிவாதங்களுடன் முடிவடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பான பிரச்சனை மற்றும் நெருக்கடியான சூழ்நிலைகள் தொடர்பில் நேற்று எதிர்க்கட்சிகள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தை கோரியிருந்த நிலையில் அதனை நிராகரித்த ஆளும் கட்சி ஏற்கனவே ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கியிருந்த பிரேரணைகளை மட்டுமே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும் என பதிலளித்தது. அதனையடுத்து அது தொடர்பில் ஆராய்வதற்காக உடனடியாக கட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டுமாறு நேற்றுக்காலை எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் வலியுறுத்தினர். எதிர்க்கட்சிகளின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சபாநாயகர் நேற்று பிற்பகல் 2.00 மணியளவில் கட்சித் தலைவர் கூட்டத்தை கூட்டுவதாக கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பை விடுத்தார். அதனையடுத்து சபாநாயகர் தலைமையில் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நேற்று பிற்பகல் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் இடம்பெற்ற இக் கட்சித் தலைவர் கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல,ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, தமிழ் தேசிய கூட்டமைப்பு எம்பி எம்.ஏ.சுமந்திரன்,தமிழ் தேசிய மக்கள் முன்னணி எம். பி கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி எம்.பி தயாசிறி ஜயசேகர,தேசிய சுதந்திர முன்னணி எம். பி.விமல் வீரவன்ச மற்றும் பிவிதுறு ஹெல உறுமய கட்சி எம்.பி உதய கம்மம்பில ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## மனோ, ஹக்கீம்,... (03ஆம் பக்கத் தொடர்)

அநுர குமார திஸாநாயக்க,ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியுதீன்,ரஞ்சித் மத்தும பண்டார,தலதா அதுகோரள மனோ கணேசன், எரான் விக்ரமரட்ன, கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

## உள்ளூராட்சித்... (03ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர் அரச நிறுவனங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இல்லாவிட்டால், மூன்று வருட சிறைத் தண்டனையை அந்நிறுவனத்தின் தலைவர் அனுபவிக்க நேரிடும். தற்போதைய நிலையில் நிதி அமைச்சு நிதி இல்லையெனக் கூறுகிறது. அதேவேளை, அச்சகக் கூட்டு தாபனம் தேர்தலுக்கான ஆவணங்களை அச்சிட முடியாதென கூறுகின்றது. இத்தகைய நிலையில் காலை வாரி விடாமல் தேர்தலை நடத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு உள்ளது. அதற்கான நடவடிக்கைகளை சபாநாயகர் மேற்கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுத் தாக்கல் இடம்பெற்று நிதியும் செலவிடப்பட்டுள்ளது. அந்நிலையிலேயே இன்று தேர்தல் நம்பிக்கையற்றதாகக் காணப்படுகிறது.

இதனால் சர்வதேச ரீதியில் பெரும் பிரச்சனையை எதிர்நோக்க நேரிடும். இப்போது ஜப்பான், ஜெர்மன் போன்ற நாடுகள் எம்மிடமிருந்து விலகிச் செல்ல முற்படுகின்றன. இவ்வாறான நிலையில் அரசாங்கம் என்ன செய்கிறது என்றும் அவர் சபையில் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த சபாநாயகர், அதற்கான விவாதத்தில் அது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க முடியும் எனக் குறிப்பிட்டார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் ரமேஷ் பத்திரண கட்டளை சட்டம் ஒன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்ற முற்படுகையிலேயே, எதிர்க்கட்சியினர், சபா பீடத்தின் நடுவில் அமர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

## உள்ளூராட்சி சபைத்... (03ஆம் பக்கத் தொடர்)

மாட்டாதென இதுவரை குறிப்பிட்ட அறிக்கை எதுவும் வெளியிடப்படவில்லையெனவும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள திகதியில் அதனை நடத்துவதிலுள்ள சிரமம் குறித்து மாத்திரமே, உயர் நீதிமன்றத்துக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் ஜி. புஞ்சிஹேவா மேலும் தெரிவித்தார்.

## முதலீடுகளுக்கான அனுமதியை... (03ஆம் பக்கத் தொடர்)

சுற்றுச்சூழல் சுற்றுலா சபையின் தலைவர் நிஷாந்த கோட்டேகொட இங்கு உரையாற்றுகையில்,

“இதில் வெளிநாட்டை பூர்வீகமாக கொண்ட பறவைகள், புலம்பெயர்ந்த பறவைகள் உள்ளன. இந்தப் பூங்காவில் காயமடைந்த பறவைகளுக்கு சிகிச்சை அளித்து, விடுவிப்பதற்கான ஒரு பிரிவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பறவைகளை இனப்பெருக்கம் செய்து ஏற்றுமதி செய்யும் பிரிவும் இங்கு பராமரிக்கப்படுகிறது. இந்த இடத்தில் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி மற்றும் பொழுதுபோக்கு மையம் மற்றும் இயற்கை பறவைகள் ஆய்வு கூடம் என்பனவும் உள்ளன.

பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலும் இந்த ஆண்டு இதன் முதல் கட்டத்தை நிறைவு செய்ய முடிந்துள்ளது. இத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்காக கொழும்பு, கண்டிக்கிடையில் இயங்கக்கூடிய அதி சொகுசு பஸ் ஒன்று சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஹந்தானை தேயிலை அருங்காட்சியக வளாகத்திற்கு அருகில் அமைந்துள்ள இந்த 27 ஏக்கர் பரப்பிலான, சர்வதேச பறவை பூங்கா மற்றும் சுற்றுச்சூழல் சுற்றுலா வலயம், நூற்றுக்கும் மேற்பட்ட புலம்பெயர்ந்த பறவைகளின் இருப்பிடமாக உள்ளது.

490 மில்லியன் ரூபா செலவில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இப்பறவைகள் பூங்காவில், வெளிநாட்டுப் பறவைகள் பெரிய கூடுகளில் பராமரிக்கப்படுவதுடன், அவற்றைப் பராமரிப்பதற்கு சுமார் நூறு பணியாளர்களும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

"இலங்கையை பூர்வீகமாகக் கொண்டிராத பறவைகள் பற்றிய ஆய்வின்" அடிப்படையில் இந்த பூங்கா நிறுவப்பட்டுள்ளது. பல வெளிநாட்டுப் பறவைகள் இலங்கையில் இனப்பெருக்கம் செய்ய முடிந்திருப்பது விசேட அம்சமாகும்.

முதற்கட்டமாக, உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு புலம்பெயர்ந்த பறவைகளைப் பார்ப்பதற்கான வசதிகள், விலங்கியல் மாணவர்களுக்கான கல்விப் பயிற்சி மையம், பறவைகள் சரணாலயம், பறவைகள் இல்லம் மற்றும் தனிமைப்படுத்தல் பிரிவு என்பன ஏற்படுத்தப்பட்டுள்ளன.

## இராஜாங்க அமைச்சர்களுக்காக...

அம்பியூலன்ஸ் மற்றும் வனவிலங்கு பாதுகாப்புக்காக டபிள் கெப் வாகனங்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

அவ்வருடத்தின் பின்னர் இதுவரை எந்த ஒரு வாகனத்தையும் இறக்குமதி செய்வதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கலந்துரையாடப்படவில்லை எனவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார். இருந்தாலும், இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கடுமையான நிதி முகாமத்துவத்தை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேர்தலொன்றை நடத்துவதற்கு நிதி இல்லையெனக் கூறப்படும் சந்தர்ப்பத்தில், இவ்வாறு வாகனங்களை இறக்குமதி செய்துள்ளதாகவும், அவ்வாகனங்கள் துறைமுகத்தில் தரித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் விசேடமாக பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுமத்தும் குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் இதனை தெரிவித்தார்.

## வீழ்ச்சியடைந்துள்ள நாட்டுக்கு...

மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை தெளிவுபடுத்துவதற்கும், இந்நிலையிலிருந்து மீள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உங்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காகவும் இன்று இச்சந்திப்பு இடம்பெறுகின்றது. நாம், இன்று கடினமான காலங்களை கடந்து கொண்டிருக்கிறோம். ஒரு வீட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போது வீட்டிலுள்ளவர்கள் அதை உணர்கிறார்கள். ஒரு வணிகம் வீழ்ச்சியடைந்தால், வர்த்தகர்கள் அதை உணர்கிறார்கள். ஆனால் ஒரு நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தால் அதை ஒட்டுமொத்த மக்களும் உணருவார்கள்.

பதினொரு மாதங்களுக்கு முன்னர் நாம் இந்த நிலையை எதிர்கொண்டோம். எங்களிடம் எரிபொருள், மின்சாரம், மருந்து எதுவும் இல்லை. நாடு என்ற வகையில், நாம் மிகவும் கடினமான சூழ்நிலையை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் முற்றிலும் முடங்கியது.

நான், ஜனாதிபதியாக பதவியேற்கும் போது இவ்வாறானதொரு பிரச்சினைக்குரிய சூழல் நாட்டில் இருந்தது. ஆனால், முறையான திட்டத்தின் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தினோம். மேலும், விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் வழங்கப்பட்டன. சரியான நேரத்தில் உரங்களை வழங்கியதால், இந்த முறை பெரும்போகத்தில் வெற்றிகரமான அறுவடை கிடைத்துள்ளது.

இப்போது எரிபொருள் வரிசைகள் இல்லை. மின்சாரம் உள்ளது. அதன்படி, நாட்டின் பொருளாதாரத்தை முந்தைய நிலையை விட படிப்படியாக சிறந்த நிலைக்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இன்று பணவீக்கம் உயர்ந்துள்ளது. வட்டி விகிதம் மிக அதிகம். அதனால், வர்த்தக சமூகம் சிரமங்களை எதிர்நோக்குவதை நாம் அறிவோம். சட்டத்தரணிகளும் தங்கள் பணியை மேற்கொள்வதில் சிக்கல்களை சந்திக்க வேண்டியுள்ளது. நாட்டின் பல அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கியுள்ளோம் என்றே கூற வேண்டும். மேலும் பல பிரச்சினைகள் நமக்கு முன்னால் உள்ளன.

ஒரு நாடு வங்குரோத்தடையும் போது, சர்வதேச நாணய நிதியத்திடம் தான் செல்ல வேண்டும். அதைத் தவிர, ஒரு நாடு வங்குரோத்தடையும் போது உதவி செய்யும் வேறு எந்த அமைப்பும் உலகில் இல்லை. பொருளாதார ரீதியில் வீழ்ச்சியடைந்த ஒவ்வொரு நாடும் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியே மீண்டு வந்துள்ளது. சரிந்த பொருளாதாரத்தில் இருந்து கிரீஸ் மீண்டுவர 13 ஆண்டுகள் சென்றது. பதின்மூன்று ஆண்டுகள் ஜனாதிபதி பதவியில் இருக்கும் எதிர்பார்ப்பு எனக்கில்லை.

இந்த வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப ஒரே ஒரு ஏணிதான் உள்ளது. அதுதான் சர்வதேச நாணய நிதியம். பல்வேறு அரசியல் கட்சிகள் பல்வேறு கதைகளை கூறி வருகின்றன. சரிந்த பொருளாதாரத்திலிருந்து மீள்வதற்கு வேறு ஏணி இருந்தால்,அதைச் சொல்லுமாறும் அவர் தெரிவித்தார்.

## மார்ச் மாதத்தில் அரசுக்கு...

ஓய்வூதியம், சமுர்த்தி நிவாரணம் என்பவற்றுக்காக அரசாங்கம் 196 பில்லியனை செலவுசெய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாகவே அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்கத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் நேற்று (21) இதனை தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அன்றாட அத்தியாவசிய செலவுக்காக மேலும் 23 பில்லியன் ரூபா தேவையென சுட்டிக்காட்டிய நிதி அமைச்சின் செயலாளர், அதற்கு மேலதிகமாக மார்ச் மாதத்தில் உள்ளூர், வெளிநாட்டு கடன் சேவைகளுக்காக 508 பில்லியன் ரூபா தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கப்படும் அரசின் வருமானம், செலவுகள் பற்றிய சுருக்கம்.

## எரிபொருள் QR முறைமை...

குறிப்பிடுகையில், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலை வழமைக்குத் திரும்பியதும் தேவையானளவு எரிபொருளைக் கொள்வனவு செய்து விநியோகிக்க வாய்ப்புக் கிட்டும். சுமார் மூன்று மாதங்களுக்குள் அந்த முறைமையை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பொருளாதார நிலைமை இயல்பு நிலைக்குத் திரும்பியதும், முன்னர் நடைமுறையிலிருந்தவாறு சாதாரணமாக, அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் போதியளவு எரிபொருளை எந்த நேரத்திலும் பெற்றுக்கொ ள்ள முடியுமென்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத கடைகளுக்கு...

இவ்வாறான வர்த்தக நடவடிக்கைகளுக்கு எதிராக, வீதி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்திற்கிணங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச நேற்று சபையில் எழுப்பிய கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். விமல் வீரவன்ச எம்பி தமது கேள்வியின் போது,

பாராளுமன்றத்தை அண்மித்த கிம்புலா எல பகுதியில் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், தங்களின் வாழ்வாதாரத்துக்காக உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இப்பகுதியில், வாகன நெரிசல் காணப்படுமாயின் அதற்கு மாற்று நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். அதனை விடுத்து பொருளாதார பாதிப்பிலிருந்து மீள்வதற்காக கடினமாக உழைக்கும் அந்த தரப்பினருக்கு நெருக்கடிகளை ஏற்படுத்த முற்பட வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதன் போது குறிப்பிட்ட ஹர்ஷ சில்வா எம்பி,

பாராளுமன்றத்தை அண்மித்த கிம்புலாஎல பகுதியில் பொருளாதார பாதிப்புக்குள்ளான ஒரு தரப்பினர், வீதியின் இருமருங்கிலும் கடைகளை நடத்தி வருகின்றனர். இதனை அகற்றுமாறு வீதி அதிகார சபை அறிவுறுத்தியுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. இவ்விடயத்தை உணர்வுபூர்வமாக ஆராய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து பதிலளித்த அமைச்சர் பந்துல குணவர்தன, பொய்யான கருத்துக்களுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டாம்.வீதி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் படி பயணிகள் மற்றும் வாகனங்களின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை,பொது வீதிகளின் இரு மருங்கிலும் சட்டத்திற்கு முரணான வகையில், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அந்த வகையில் மேற்படி பகுதியில் இடம்பெறும் வர்த்தக நடவடிக்கைகளினால் பயணிகள் மற்றும் வாகன சாரதிகள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளதாக வீதி அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இதனைக் கருத்திற் கொண்டு இவ்விடயம் தொடர்பில் உரிய தரப்பினருடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கையை சபைக்கு அறிவிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். இதன்போது குறுக்கிட்ட வீடமைப்பு, நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாராளுமன்றத்தை அண்மித்த கிம்புலாஎல பகுதியில், வார இறுதி நாட்களில் மாத்திரமே வர்த்தக நடவடிக்கைகள் இடம்பெற்றன.

ஆனால், தற்போது தினந்தோறும் அவர்கள் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்தப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள உணவகங்களால், சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பு தொடர்பில் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதனைக் கருத்திற் கொண்டு, இவ்விடயம் தொடர்பில் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அரசாங்க நிதி குழுவுக்கு நியமிக்கப்பட்ட...

அரசாங்க நிதி தொடர்பான தெரிவு குழுவின் தலைவர் பதவி ஆளும் தரப்பின் உறுப்பினருக்கு வழங்கப்பட்டது.

ஆகவே தற்போதைய புதிய நியமனத்தின் போது தலைவர் பதவி எதிர்க்கட்சிக்கு வழங்கப்பட வேண்டும் என, எதிர்க்கட்சியின் பிரதம கொறடா சபாநாயகரிடம் வலியுறுத்தினார். அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக் குழுத் தலைவர் பதவி தொடர்பில், கட்சித் தலைவர்கள் ஒன்றிணைந்து தீர்மானம் எடுக்க வேண்டும். அதற்கிணங்க நிலையியற் கட்டளையின் படி நியமனங்கள் இடம்பெறும் என இதன்போது சபாநாயகர் பதிலளித்தார்.

## ஐ.நா அமைதி காக்கும்...

கார்ப்ஸில் பணிபுரிந்த இரண்டு குழந்தைகளின் தந்தையாவார்.

அமைதிப்படையில் பணியாற்றுவதற்காக 2022 இல் இவர், நாட்டை விட்டு வெளியேறியதாகவும், ஓகஸ்ட் 2023 இல் நாடு திரும்பத் திட்டமிட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லான்ஸ் கோப்ரல் தேசப்பிரிய கடந்த (11) ஐக்கிய நாடுகள் சபையினால் நடத்தப்படும் மாலியிலுள்ள பனாகோவிலுள்ள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் திடீர் மாரடைப்பால் உயிரிழந்துள்ளார். மாலியின் மனிதாபிமான நடவடிக்கைகளின் தலைவரான டேனிலா க்ரோஸ்லாக் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபை கடந்த (16) மரபுவழியாக இறுதிச் சடங்குகளை நடத்தியது. இந்நிலையில், லான்ஸ் கோப்ரலின் சடலம் இன்று(22) இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது.இறுதிக் கிரியைகள் இலங்கை இராணுவ முறைப்படி அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சித் தேர்தலை...

பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இதனைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில், சபை நடவடிக்கைகளை இன்றைய தினம் வரை சபாநாயகர் ஒத்தி வைத்தார். அரசாங்கத்துக்கு எதிரான இந்த கடும் ஆர்ப்பாட்டத்தால், நேற்று 47 நிமிடங்களே சபை நடவடிக்கைகள் இடம்பெற்றன.

பாராளுமன்றம் நேற்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவின் தலைமையில் கூடியது. பிரதான நடவடிக்கையாக பாராளுமன்ற குழுக்களுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்கள் தொடர்பில், சபாநாயகர் சபைக்கு அறிவித்தார். அதனைத் தொடர்ந்து நேற்றைய தினத்துக்கான விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதன்போது எதிர்க்கட்சியின் பிரதம கொரடா லக்ஷ்மன் கிரியெல்ல ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை எழுப்பி, உள்ளூராட்சி சபை தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

அவ்வாறு வழங்காவிட்டால் அது சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகுமெனத் தெரிவித்தார்.

அதற்கு ஆதரவாக எதிர்க்கட்சி எம்பிக்கள் சமிந்த விஜேசிறி, ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் கருத்து தெரித்தனர். அதனைத்தொடர்ந்து விமல் வீரவன்சவும் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலிறுத்தி கடுமையாக அரசாங்கத்தை விமர்சித்தார். இடைநடுவில் அவரது ஒலிவாங்கி நிறுத்தப்பட்டது.

அதனைத்தொடர்ந்து அவருடன் இணைந்து அவரது கட்சி ஆதரவாளர்கள் சபையில் கூச்சலிடத் தொடங்கினர்.

இதன்போது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களான நளின் பண்டார, ஜே.சி. அலவத்துவல, துஷார இந்துனில். சமந்த விஜேசிறி ஆகியோர் தேர்தலை நடத்தக்கோரும் பதாகைகளை கையில் ஏந்தியவாறு சபை நடுவில் பிரவேசித்தனர்.

அதனையடுத்து தயாசிறி ஜயசேக்கர, இம்ரான் மஹ்ரூப், எஸ்.எம்.மரிக்கார், அசோக்க அபேசிங்க மொஹமட் முஸம்மில்,எம். உதயகுமார், வேலுகுமார், ப.திகாம்பரம்,வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் பதாதைகளை ஏந்தியவாறு சபை நடுவில் பிரவேசித்து 'தேர்தலை வழங்கு' என கோஷம் எழுப்பினர்.

இதன்போது ஆளும் தரப்பின் பின்வரிசை உறுப்பினர்கள், ஆசனங்களில் எழுந்து நின்று சபை நடுவில் இடம்பெறும் எதிர்ப்பு நடவடிக்கையை அமைதியாக பார்த்துக் கொண்டிருந்தனர்.

சபையிலிருந்த பிரதமர் தினேஷ் குணவர்தனவும் இடம்பெறுவதை அவதானித்துக்கொண்டிருந்தார். தயாசிறி ஜயசேக்கர பதாகையுடன் அவருக்கருகில் சென்று ஏதோ தெரிவித்தார்.

அதன்போது சபை நடுவில் இருந்த ஏனைய உறுப்பினர்கள் சிலரும் பிரதமருக்கருகில் சென்று 'தேர்தலைத் தாருங்கள்' என கோஷம் எழுப்பினர்.

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபையில் சமூகமளித்திருக்கவில்லை. அதேநேரம் மக்கள் விடுதலை முன்னணி மற்றும் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் எவரும் சபைக்கு வந்திருக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, கயந்த கருணாதிலக்க, ஹர்ஷ டி சில்வா, மனோகணேசன் ஆகியோர் தங்களது ஆசனங்களில் இருந்தவாறே பதாதைகளை ஏந்திக்கொண்டிருந்தனர்.

எதிர்க்கட்சிகள் சபைக்கு நடுவில் எதிர்ப்பு ஆர்ப்பட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், சபாநாயகர், சபை நடவடிக்கையை தொடர்ந்து காண்டு செல்லும் வகையில் தினத்துக்குரிய பிரேரணைகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சர் ரமேஷ் பத்திரணவுக்கு ஒலிவாங்கியை வழங்க நடவடிக்கை எடுத்தார்.

இதன்போது சபை நடுவிலிருந்த விமல் வீரவன்ச எம்.பி, அந்த இடத்துக்கு சென்று ஒலிவாங்கியை தனது பக்கம் திருப்பி, தேர்லைத் தாருங்கள் என கோஷம் எழுப்ப ஆரம்பித்தார். அதன்போது உடனடியாக ஒலிவாங்கி முடக்கிவிடப்பட்டது.

சபை நடுவில் எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்த உறுப்பினர்கள் மெல்ல செங்கோலுக்கு அருகில் செல்வதை அவதானித்த படைக்கல சேவிதர் மற்றும் உதவி சேவிதர் ஆகியோர், செங்கோலுக்கு அருகில் சென்று அதனை பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

பின்னர் துஷார இந்துனில், நளின் பண்டார மற்றும் சில உறுப்பினர்கள் சபாபீடத்தில் சபாநாயகரின் ஆசனத்துக்கு எதிரே இருந்து பதாதைகளை ஏந்தி எதிர்ப்பு கோஷங்களை எழுப்பினர்.

இதன்போது ஆளும் கட்சியின் பிரதம கொரடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க சபாநாகருக்கு அருகில் வந்து ஏதோ தெரிவித்து விட்டு, தனது ஆசனத்துக்குச் சென்றதும் அமைச்சர் ரமேஷ் பத்திரனவுக்கு ஒலிவாங்கி முடுக்கிவிடப்பட்டது.

இதன்போது கடும் சத்தத்துக்கு மத்தியில் தேயிலைச் சபை சட்டத்தின் 05 பிரேரணைகளையும் சமர்ப்பித்து சபையின் அனுமதியையும் பெற்றுக் கொண்டார்.

இப் பிரேரணைகளுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் ஹர்ஷ சில்வா வாக்கெடுப்பு கோரிய போது, சபாநாயகர் ஒலிவாங்கியை ஹர்ஷ டி சில்வாவுக்கு முடுக்கிவிடுமாறு தெரிவித்தார். என்றாலும் ஒலிவாங்கி முடுக்கிவிடப்படவில்லை.

இதற்கு மத்தியில் ஆளும் கட்சியின் பிரதமகொரடா பிரசன்ன ரணதுங்க எழுந்து, சபை நடவடிக்கையை இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணி வரை ஒத்திவைக்குமாறு சபாநாயகரைக் கேட்டுக்கொண்டார்.

அதன் படி பாராளுமன்றத்தை இன்று காலை 9.30 மணி வரை ஒத்திவைப்பதாக தெரிவித்து சபையை அவர் ஒத்திவைத்தார்.

## நீதிமன்றில் மன்னிப்பும் கோரிய...

செய்யப்பட்டுள்ளார். இவ்வாறான குற்றங்களை மீண்டும் செய்யப்போவதில்லை என நீதிமன்றத்தில்,நீதிமன்றத்தில் அவர்,பகிரங்க மன்னிப்பும் கேட்டுள்ளார்.

நாட்டின், பிரபல யூடியூப் பயனாளர் சேபால் அமரசிங்க தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த குற்றச்சாட்டிலிருந்து, அவரை விடுவிக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் நேற்று (21) உத்தரவிட்டார்.

ஸ்ரீ தலதா மாளிகை தொடர்பில் அவதூறான கருத்துக்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரிலேயே, இவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சிரேஷ்ட பிரதி சொலிசிட்டர் ஜெனரல் தீலிபா பீரிஸ், சிரேஷ்ட சட்டத்தரணி தர்ஷன குருப்பு தனது தரப்பினர் மெய்நிகர் முறைப்பாடுகளுக்கு மன்னிப்புக் கோர விரும்புவதாக நீதிமன்றில் தெரிவித்தார்.

இதனை பரிசீலித்த சட்ட மாஅதிபர், சேபால் அமரசிங்கவுக்கு எதிரான வழக்கை தொடர்வதில்லையென தீர்மானித்திருந்தார்.

## தேசிய பாதுகாப்புச் சபையை...

ஸ்தாபிக்கப்பட்ட அடிப்படையின் கீழ், தெளிவான முறையில் அதனை நிலைப்படுத்துவதற்கு தேவையான விடயங்களை கடந்த ஜனவரி மாதம் (12) உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் மூலம் இது,பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்த தீர்ப்புக்கு இணங்கவே ஜனாதிபதியால் மேற்படி யோசனை, அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். 1999 ஆம் ஆண்டு முதல் நாட்டின் தேசிய பாதுகாப்பு சபை, தேசிய பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கி வந்துள்ளது. தேசிய பாதுகாப்புடன் சம்பந்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச பொருளாதார மற்றும் இராணுவ கொள்கைகளை இணைப்புச் செய்வதற்கான முதன்மை நிறைவேற்று நிறுவனமாகவும் இது, செயற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு நேற்றைய தினம், தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.




# பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி தேர்தலை நடத்துவதே சிறந்தது

எம்.ஏ.அமீனுல்லா

தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருந்திருந்தால், வெளியேறிய உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களை நியமிக்காமல் ஆணைக்குழுவை செயலிழக்கச் செய்திருக்கலாம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் (20) ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர், தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்ற கருத்தையும் கொண்டுள்ள போதிலும் நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்திற் கொண்டு தேர்தலுக்கான செலவுகளை நிதி அமைச்சினால் ஏற்க முடியவில்லை எனவும் தெரிவித்தார்.



பொருளாதார நெருக்கடிக்கு முகங் கொடுத்து சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலை நடத்த முடியுமா என ஏனையோர் கேள்வி எழுப்பியுள்ளனர். பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி தேர்தலை நடத்துவதே பொருத்தமானது என்பதே பெரும்பான்மையானவர்களின் கருத்து என அவர் தெரிவித்துள்ளார்.

வீழ்ச்சியடைந்த பொருளாதாரம் மிகவும் சிரமத்துடன் மீளப்பெற்று வருகின்றது. இந்நேரத்தில் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடைந்தால், மக்கள் மீண்டும் அவதியுறுவார்கள் என அவர் அறிவித்தார்.

# மடவளை 'ஹைரா' தனியார் கூட்டு நிறுவன தலைவருக்கு கலாநிதிப்பட்டம்

அக்குறணை குறூப் நிருபர்



கண்டி, மடவளை பஸார் 'ஹைரா' தனியார் கூட்டு நிறுவனத்தின் தலைவர் அல்ஹாஜ் யூ.எம். பாசில் கௌரவ கலாநிதிப்பட்டம் பெற்றார்.

அகில இலங்கை சமூக கலாசார சுற்றுச்சூழல் அதிகார சபை அவரது சேவைக்காக கௌரவ விருதை வழங்கியுள்ளது. மத்திய மாகாணத்தில் சுமார் 50ற்கும் மேற்பட்ட ஹைரா உற்பத்திகள், ஹைரா விற்பனைக் கூடங்கள் மற்றும் ஹைரா பண்ணைகள் என்பவற்றைக்கொண்ட கூட்டு நிறுவனமாகும். இதனூடாக ஆயிரக்கணக்கானவர்கள் தொழில் வாய்ப்பை பெற்று வருகின்றனர். மத்திய மாகாண முதலீட்டாளர்கள் விருது விழா மற்றும் வடமேல் மாகாண கைத்தொழில் விருது விழா என்பவற்றில் பல்வேறு விருதுகளை இந்நிறுவனம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நிறுவனம் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தமது வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ள வழிகாட்டியமைக்காக கௌரவ விருது கிடைக்கப்பெற்றுள்ளது.

# குகுலேகங்க நீர்மின் உற்பத்தி தற்காலிகமாக இடைநிறுத்தம்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

குகுலேகங்க மின் உற்பத்தி நிலையத்தின் உற்பத்திகள் எதிர்வரும் மூன்று மாத காலத்துக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பொறியியலாளர்கள் தெரிவித்தனர்.

மின்உற்பத்தி நிலையத்துக்கு நீரைக் கொண்டுவரும் குழாய்த் தொகுதியில் பழுது பார்த்தல்களை மேற்கொள்ளவே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

பொதுவாக நீர்மின் உற்பத்தி நிலையம் பத்து வருடங்களுக்கு ஒரு முறையும் ஒரு வருடத்துக்கு ஒரு முறை கட்டாய பழுது பார்த்தலுக்கு உட்படுத்தப்படுவதால் இவை அனைத்து பழுதுபார்த்தல்களையும் ஒரே தடவையில் நிறைவேற்ற இதன் நீர்மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

# கினிகத்தேனையில் தொடர் லயன் குடியிருப்பில் தீ பரவல்

## நான்கு வீடுகள் சேதம்; 28 பேர் பாதிப்பு

கினிகத்தேனை, ஹற்றன் விசேட, தலவாக்கலை நிருபர்கள்

கினிகத்தேனை கெனில்வத்த தோட்டத்தில் தொழிலாளர்களின் தொடர் குடியிருப்பொன்றில் நேற்று ஏற்பட்ட திடீர் தீ விபத்தினால் நான்கு வீடுகள் சேதமடைந்துள்ளதுடன் 28 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் கினிகத்தேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெனிவத்த இலக்கம் ஒன்று தோட்டத்திலுள்ள தொழிலாளர்களின் குடியிருப்பில் நேற்றுமுன்தினம் காலை 10.00 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பிரதேசவாசிகள் நடவடிக்கை எடுத்ததன் காரணமாக ஏனைய வீடுகளுக்கு தீ பரவுவது கட்டுப்படுத்தப்பட்டது.



எனினும் தீ காரணமாக நான்கு வீடுகளிலிருந்த தளபாடங்கள், அத்தியாவசிய ஆவணங்கள், உடுதுணிகள் உட்பட அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

தீயினால் பாதிக்கப்பட்ட ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 28 பேர் அயலவர்களின் வீடுகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.



தீ ஏற்படுவதற்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படாத போதிலும் மின்சார ஒழுக்கு காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

சம்பவத்தில் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பாகவும் தீ ஏற்பட்டதற்கான காரணத்தினை கண்டறிவது தொடர்பிலும் கினிகத்தேனை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா மாவட்ட தமிழ் பிரிவின் தலைவராக பிரபல தொழில் அதிபரும் சமூக சேவையாளருமான சதானந்தன் திருமுருகன் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேனவினால் நியமிக்கப்பட்டுள்ளார். நியமன கடிதத்தை ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன சதானந்தன் திருமுருகனிடம் உத்தியோகபூர்வமாக நேற்று (21) வழங்கியதை படத்தில் காணலாம். படம்: தலவாக்கலை குறூப் நிருபர்

## பரீட்சையில் சித்தி

படம் லுணுகல நிருபர்



பசறை கல்வி வலயத்துக்குட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவி பிரபு வித்யாஷினி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி158 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

## சர்வதேச தாய்மொழி தினம்

சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு தலவாக்கலை பாரதி மகா வித்தியாலயத்தில் விசேட நிகழ்வொன்று நடைபெற்றது. பாடசாலையின் உயர்தர மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தாய் மொழி தின நிகழ்வு அதிபர் ந.விஜயகுமாரன் தலைமையில் நேற்று (21) நண்பகல் 12 மணிக்கு பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

இதன்போது மாணவர்களின் ஆக்கங்களை கொண்ட சுவர் சஞ்சிகையொன்றும் வெளியிடப்பட்டது. அத்தோடு தாய்மொழி தொடர்பான கவிதைகள், கருத்துரைகள் மாணவர்களால் அரங்கேற்றப்பட்டன. இந்நிகழ்வில் நுவரெலியா கல்வி கோட்டம் 2 இன் கோட்டக் கல்விப்பணிப்பாளர் திரு. ஜெகதீஸ்வரன், ஆசிரியர் ஆலோசகர்கள் வளவாளர்கள் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## வாகன விபத்தில் ஒருவர் மரணம்

### நாவலப்பிட்டியில் சம்பவம்

அக்குறணை குறூப் நிருபர்

நாவலப்பிட்டியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். நாலப்பிட்டிய வைத்தியசாலைக்கு முன்பாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நாவலப்பிட்டியிலிருந்து கொத்மலை நோக்கிச் சென்ற வான் ஒன்று மோதியதில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் 59 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவர் மரணித்துள்ளார். உயிரிழந்தவர் நாவலப்பிட்டி பவ்வாகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வான் சாரதியை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.





கண்டி பன்விலை ஸ்ரீ செல்வவிநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா உற்சவம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதன்போது எடுக்கப்பட்ட படங்கள்

படம்: புசல்லாவை தினகரன் நிருபர்

# வீதியை புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

வலப்பனை பிரதேச சபைக்குட்பட்ட கொட்டம்ப திக்கல கிராம சேவகப்பிரிவில் வசிப்பவர்கள் பயன்படுத்தும் பிரதான வீதியை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்தும் வீதியை புனரமைப்பதற்கு அக்கறை காட்டவில்லையென பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

வலப்பனை தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொட்டம்பவெளிகெட்டிய, உடுகம, திக்கல, உஸ்பனாஎல்ல, மெதிகந்த என ஐந்து கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர், திக்கல கிராமத்தில் சுமார் 18 கோடி ரூபாய் செலவில் குடிநீர் அபிவிருத்தி திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது இத்திட்டத்தை மேற்கொண்டவர்கள் கொட்டம்ப சந்தியிலிருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்திலுள்ள திக்கல கிராம பாடசாலை வரையான பிரதான வீதியை பயன்படுத்தியுள்ளனர்.

# லெதன்டி தோட்டப்பகுதியில் குட்டிகளுடன் சிறுத்தைப்புலி மீட்பு



நோட்டன் பிரிட்ஜ் நிருபர்

ஹற்றன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லெதன்டி தோட்டப் பகுதியில் சிறுத்தைப்புலி வர்க்கத்தைச்சேர்ந்த (Fishing cat) தாயுடன் குட்டிகளும் நேற்று (21.02.2023) காலை மீட்கப்பட்டுள்ளன. லெதன்டி தோட்ட தொழிற்சாலைக்கு தொலைவில் கற்பாறையொன்றுக்கு அருகிலேயே மூன்று குட்டிகளுடன் சிறுத்தை இருப்பதை கண்ட தோட்டத் தொழிலாளர்கள் தோட்ட நிர்வாகத்திற்கு அறிவித்துள்ளனர். இதனையடுத்து, தோட்ட நிர்வாகம் ஹற்றன் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து சிறுத்தையை குட்டிகளுடன் பாதுகாப்பாக மீட்க நடவடிக்கை எடுத்துள்ளனர். அதன்படி, மஸ்கெலியா நல்ல தண்ணி வன விலங்கு பாதுகாப்பு நிலைய அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.



பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலை மாணவி தென்னரசு சஜிவனி தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றி 145 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.

படம்: லுணுகல நிருபர்

# மலையகத்தில் சீரற்ற காலநிலை

ஊவா சுழற்சி நிருபர்

மலையகத்தில் மீண்டும் சீரற்ற காலநிலை நிலவுவதால் அதிக பனிப்பொழிவும் மழையும் பெய்து வருகின்றது. கடந்த சில நாட்களாக மலையகத்தில் மீண்டும் சீரற்ற காலநிலை ஏற்பட்டுள்ளது.

பனிப்பொழிவும், ஆங்காங்கு மழையும் பெய்து வருகிறது. மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை அவதான மையம் எதிர்வு கூறியுள்ளதால் பொது மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் பனிப்பொழிவுடன் கூடிய காலநிலை நீடித்து வருவதாலும் ஆங்காங்கு இடியுடன் கூடிய மழை பெய்யுமென எதிர்வு கூறியுள்ளதால் வெட்டை வெளிகளிலும், மலை உச்சிகள் மற்றும் மலைச் சாரல்களிலும் வேலை செய்பவர்கள் மாத்திரமின்றி மரங்களின் கீழ் நடமாடுபவர்கள் இடியுடன் கூடிய மழை பெய்தால் மிக அவதானமாக நடந்து கொள்ளுமாறும் அல்லது தவிர்த்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.


COLLEGE OF ADVANCED STUDIES SRI LANKA

COLLEGE OF ADVANCED STUDIES

Services;
Model Exam Papers for Students (Grade.8, 9,10 & 11)

Consultant Services for ;
Pensions | EPF, ETF | Student Visa | Visitor Visa | Business Visa.
Australia, Canada, UK & USA.

Regd. No : FIN/BUSRE/07/1009
T.Phone No : +94 67 22 79066
Fax No : +94 67 22 79066
Mobile No : +94 77 30 21075
Email : casakkaraipattu@yahoo.com

NO: 182, GRAND MOSQUE ROAD, AKKARAIPATTU-19, POSTAL CODE : 32400, SRI LANKA.


ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board

திங்கட்கிழமை 2023.02.20 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

| | | |
|---|---|---|
| மஹஜன சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 5037 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.36,046,063.00 |
| ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் | 8 8 0 5 5 0 |
| தன நிதானய | சீட்டிழுப்பு இலக்கம் 1067 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 84,371,694.80 |
| ஆங்கில எழுத்து R | வெற்றி இலக்கங்கள் | 29 40 48 65 |
| ராசி சுப பலன் (Handahana) | சீட்டிழுப்பு இலக்கம் 346 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,604,711.20 |
| வெற்றி இலக்கினம் சிம்மம் | வெற்றி இலக்கங்கள் 04 31 40 56 | விசேட இலக்கினம் சிம்மம் |
| ஜாதிக சம்பத | சீட்டிழுப்பு இலக்கம் 1492 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,048,983.20 |
| வெற்றி இலக்கினம் | வெற்றி இலக்கங்கள் | 3 8 3 9 9 0 |
| மெகா பவர் | சீட்டிழுப்பு இலக்கம் 1385 | அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 302,104,534.00 |
| ஆங்கில எழுத்து J, சுப்பர் இலக்கம் 11 | வெற்றி இலக்கங்கள் 12 21 58 70 | அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00; அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 |
| கொவிசெத (Govisetha) | சீட்டிழுப்பு இலக்கம் 3279 | அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 80,285,568.80 |
| ஆங்கில எழுத்து T | வெற்றி இலக்கங்கள் | 31 38 40 47 |




# நற்பிரஜைகளை உருவாக்கும் அடித்தளம் ஆரம்பக் கல்வி

ஆரம்பக்கல்வி என்பது எதிர்காலத் தலைவர்களை சிறந்த முறையில் உருவாக்குவதில் அச்சாணியாகத் திகழ்கிறது. அது சிறப்பாக அமைந்தால்தான் எதிர்கால இலக்குகளும் வெற்றிவாகை சூடும் என்று கூறுவதில் ஐயமில்லை.

இதை அடிப்படையாகக் கொண்டே திட்டங்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. முன்பள்ளிக்குச் சென்ற குழந்தைகள் 5 வயதானதும் ஆரம்பப் பாடசாலைக்குள் நுழைகின்றனர். இவர்கள் உள்ளத்திலும் உடலிலும் சிறுவர்களாவர். ஆதலால் இவர்களுடன் உரையாடுவதும், பழகுவதும் மென்மையானதாகக் காணப்பட வேண்டும். அப்போதுதான் பிள்ளைகள் அச்சமடையாமல் கல்வி கற்க முன்வருவார்கள்.

பிள்ளையைப் பார்த்து அதட்டாமல் ஆசிரியர்களும், பெற்றோரும் நல்ல முறையில் அணுக வேண்டும். சிறார்கள் பாடசாலைகளில் குறைந்தளவு நேரமே கல்வி கற்பர். அதிகளவான நேரத்தை வீட்டில் பெற்றோருடனேயே கழிப்பர். இந்நிலையில் பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர் அதிக செல்வாக்குடையவர்களாகக் காணப்படுவதை நாம் அறியலாம்.

சிறுபிள்ளைகளை பெற்றோர் ஏனைய பிள்ளைகளுடன் பழகுவதற்கு விட வேண்டும். இதனை பாரதியார் மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

"ஓடி விளையாடு பாப்பா_ நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா, ஒரு
குழந்தையை வையாதே பாப்பா
காலை எழுந்தவுடன் படிப்பு
பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுவதும் விளையாட்டு
இதை வழக்கப்படுத்திக் கொள்ளு
பாப்பா"



இவ்வாறு பிள்ளைகள் சுதந்திரமாக இருக்கும் பட்சத்திலேயே உடல் அபிவிருத்தி, சமூக மனவெழுச்சி அபிவிருத்தி என்பன பிள்ளைகளிடத்தில் தோன்றும். தாய் தந்தையர் பிள்ளையுடன் அன்புடனும் அரவணைப்புடனும் இருத்தல் வேண்டும். அப்போதே அவர்களும் அவ்வாறான மனநிலையைப் பெறுவர். நல்ல கதைகளையும் கருத்துக்களையும் கூறுவதனால் அகமகிழ்ந்து அதனூடாக பல எண்ணக்கருக்களை வளர்த்துக் கொள்வர்.

குழந்தைப் பருவத்திலிருந்து பிள்ளைப் பருவத்தில் பாடசாலைக்கு வரும் மாணவர்களுக்கு சமூக மனவெழுச்சிசார் விருத்தி, அறிவாற்றல் விருத்தி, ஆக்கத்திறன் விருத்தி போன்ற பல விருத்திகளை மேம்படுத்துவதில் ஆசிரியர்கள் கவனமெடுத்தல் வேண்டும்.

"இளமையிற் கல்வி சிலையில் எழுத்து" என்பதற்கிணங்க சிறுவயதிலேயே பிள்ளைகள் ஆர்வமாய் இருக்கும் துறைகளை இனங்கண்டு அத்துறையினூடாக அவர்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

பாடசாலைக் காலத்தில் மைற்கல்லாக திகழும் ஆரம்பக்கல்வியானது வாசிப்பு, எழுத்து, கணிதம் ஆகியவற்றை கற்பிப்பதோடு கீழ்ப்படிதல், ஒழுக்கவிதிமுறைகள், பிள்ளைகளிடம் அடங்கியுள்ள விசேட சமர்த்தியம், உள்ளார்ந்த ஆற்றல் ஆகியவற்றை இனங்கண்டு அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டும்.

பிள்ளையின் அறிவை மேலும் விருத்தி, செய்வதற்காக சிந்தித்து வினாக்களைப் பிறப்பித்து அவற்றுக்கான பதில்களை கண்டுபிடிக்கும் ஆற்றலை வளர்க்க வேண்டும். மனதைக் கொண்டும் கரத்தைக் கொண்டும் கற்பனையால் உருவாகும் ஆற்றலை விருத்தி செய்தல் வேண்டும். தானாகவே அறிவைப் பெற்று அவ்வறிவை பிரயோகம் செய்யும் முறையைக் கற்றுக்கொள்ள வழிப்படுத்தல் அவசியம்.

முதியோர், ஆசிரியர் மற்றும் பிள்ளைகள் ஆகியோருக்கு ஆதரவளித்து கனம்பண்ணும் வழக்கத்தை வளர்த்தல், வேறுபட்ட கலாசாரங்களையும் மற்றவர்களின் கருத்துக்களையும் புரிந்துணர்ந்து அவற்றுக்கு மதிப்பளித்து நடக்கும் பண்பை வளர்த்தல் மற்றும் மனிதர்கள் தாவரங்கள், விலங்கினங்கள் உட்பட சுற்றாடலைப் பாதுகாக்கும் பண்பை ஓங்கச் செய்தல்...

இவ்வாறாக அடிப்படை இலட்சியங்களை உள்ளடக்கியதாகவே ஆரம்பக்கல்வி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கல்வியாளர் மரியா மொண்டிசோரி "பிள்ளைகளுக்கு சூழலுடன் பொருந்தி வாழக்கூடிய தனி ஆற்றல்களை வளர்க்கும் விளையாட்டு மூலமான தொடர் செயற்பாட்டுக் கல்வி அவசியம்" எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே நாமும் இதனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டியவர்களாகின்றோம். அறிஞர் ஜோன் ரூசோ குறிப்பிடுகையில் "பிள்ளையை இயற்கையுடன் சங்கமிக்க விட வேண்டும்" என்கிறார். அதனூடாக நாம் பிள்ளையை கற்பிக்க முயல வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றார். விளையாட்டு மூலமான கல்வி முதனிலைப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆரம்பக் கல்வியின் போது மாணவர்கள் பலர் பின்வரும் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.

பயிற்சிபெற்ற ஆசிரியர்களின்மை, பாடசாலைகளில் பௌதிகவளப் பற்றாக்குறை மற்றும் மேசை, தளபாடங்கள் இல்லை, கட்டட வசதியின்மை, போசாக்குக் குறைபாடு, சுகாதாரப் பிரச்சினைகள்,

மனித வளப் பற்றாக்குறை, சூழல் பிரச்சினைகள், பெற்றோரின் அக்கறையின்மை, சமூக ஒத்துழைப்பு இல்லாமை.

எமது சமூகத்திலுள்ள இவ்வாறான பல விடயங்களைக் கருத்திற் கொண்டு பிரச்சினைகள் காணப்படும் இடத்து அவற்றை நிவர்த்தி செய்து கல்வியை விருத்தி செய்யக்கூடியதாக இருத்தல் வேண்டும். அப்போதே திறனுடைய எதிர்கால நல்லவர்களை எமது சமூகம் காணும். ஆரம்பக் கல்வியின் அத்திவாரம் ஒழுங்காகவும் கரிசனையோடும் செப்பனிடப்பட்டால்தான் உயர்நிலைக்கல்வியின் வளர்ச்சி சீராகக் காணப்படும். 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்றார் திருவள்ளுவர். இதனால் பெற்றோரின் நீண்டநாள் கனவும் கூட நிறைவேறும் தருணம் உருவாகிறது. இவற்றினால் சிறந்த ஆளுமைமிக்க தலைவர்களும் மிளிர்கின்றனர்.

ஏ.எல்.நஸீஹா பேகம்...



# இலங்கையில் கல்வி வழங்கும் பல்வேறு நிறுவனங்கள் ஓர் பார்வை

இலங்கையில் கல்வியை வழங்கும் கல்வி நிறுவனங்கள் பல உள்ளன. உலகின் ஏனைய நாடுகளில் உள்ள பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலான கட்டமைப்பை விட இலங்கையின் கல்விக் கட்டமைப்பு வேறுபட்டது.

இலங்கையின் கல்வி வழங்கும் நிறுவனங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

ஆரம்ப நிலைக்கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்கள்:

தரம் 1 தொடக்கம் 5 வரை கல்வியை வழங்கும் பாடசாலைகளே 'ஆரம்பப் பாடசாலைகள்' எனப்படும்.

இடைநிலைக் கல்வி/இரண்டாம் நிலைக் கல்வி வழங்கும் கல்வி நிறுவனங்கள்:

தரம் 6 தொடக்கம் 13 வரை கல்வியை வழங்கும் பாடசாலைகள் 'இடைநிலை பாடசாலைகள்' எனப்படும்.

மூன்றாம் நிலைக்கல்வி:

உயர்கல்வி மற்றும் தொழில்சார் கல்வியை வழங்கும் கல்வி நிறுவனங்களே 'மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்கள்' எனப்படும். இவை தொழில்நுட்பக் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள், தேசிய கல்வியியல் கல்லூரிகள், உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் என்பனவாகும்.

இலங்கையில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலைகள் உள்ளன. அத்தகைய பாடசாலைகளை பலவகைகளில் வகைப்படுத்தலாம்.

(1) வகைப்படுத்தல் 1

பாடசாலைகளின் கல்வி நிர்வாக அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. தேசிய பாடசாலைகள்_ கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் அனைத்தும் இதனுள் அடங்கும். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 384 தேசிய பாடசாலைகள் உள்ளன.

2. மாகாணப் பாடசாலைகள்_ மாகாணக்கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் அனைத்தும் இதனுள் அடங்கும். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 9,771 மாகாணப் பாடசாலைகள் உள்ளன.

3. பிரிவேனாக்கள்_ புத்தசாசன மற்றும் கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள் அனைத்தும் இதனுள் அடங்கும். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 736 பிரிவேனாக்கள் உள்ளன.

4. அரச உதவி பெறும் பாடசாலைகள்_ ஆசிரியர்கள் சம்பளம் மற்றும் இலவச பாடநூல் போன்ற உதவியுடன் தனியாரினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள்.

5. தனியார் பாடசாலைகள்_ கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட, தனியாரினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள். இப்பாடசாலைகளில் அரச பாடத்திட்டமும், வெளிநாட்டு பாடத்திட்டமும் கற்பிக்கப்படுகின்றன.

6. சர்வதேச பாடசாலைகள்_ இலங்கையில் வர்த்தகச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட, வெளிநாட்டு பாடத்திட்டத்தை கற்பிக்கும், தனியாரினால் நிர்வகிக்கப்படும் பாடசாலைகள். இப்பாடசாலையில் கற்கும் மாணவர்களை அரச பாடசாலைகளில் அனுமதிக்க முடியாது.

(2) வகைப்படுத்தல் 2

பாடசாலைகளிலுள்ள வகுப்புகள், உயர்தர பிரிவுகள் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. வகை III(Type III) பாடசாலைகள்_ தரம் 15 அல்லது தரம் 18 வரையுள்ள இவ்வகைப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 3,999 உள்ளன.

2. வகை II(Type II) பாடசாலைகள்_ தரம் 1_11 அல்லது தரம் 6_11 வரையுள்ள பாடசாலைகள். இவ்வகைப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 3,224 உள்ளன.

3. 1C பாடசாலைகள்_ உயர்தரத்தில் கலை+ வர்த்தகப் பிரிவு அல்லது கலைப் பிரிவு மட்டும் அல்லது வர்த்தகப் பிரிவு மட்டும் கொண்ட பாடசாலைகள். இவ்வகைப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 1,932 உள்ளன.

4. 1AB பாடசாலைகள்_ உயர்தரத்தில் கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, உயிரியல் விஞ்ஞானப் பிரிவு, பௌதீக விஞ்ஞானப் பிரிவு, உயிர் முறைமைகள் தொழில்நுட்ப பிரிவு, பொறியியல் தொழில்நுட்ப பிரிவு போன்ற வற்றைக் கொண்ட பாடசாலைகள்.இந்த வகைப் பாடசாலைகள் கல்வி அமைச்சின் 2021ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 1,000 உள்ளன.

(3) வகைப்படுத்தல் 3

பாடசாலையில் கற்பிக்கப்படும் மொழி அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.சிங்கள மொழி பாடசாலைகள்_ சிங்கள மொழி மூலம் மட்டும் கற்பித்தல் நிகழும் பாடசாலைகள்.

2.தமிழ் மொழி பாடசாலைகள்_ தமிழ் மொழி மூலம் மட்டும் கற்பித்தல் நிகழும் பாடசாலைகள்.

3.இரு மொழி பாடசாலைகள் தமிழ் மொழி+ சிங்கள மொழி பாடசாலைகள் (42), தமிழ் மொழி+ ஆங்கில மொழி பாடசாலைகள் (157), சிங்கள மொழி+ஆங்கில மொழி பாடசாலைகள் (524)

4. மும்மொழி பாடசாலைகள்_ சிங்கள மொழி, ஆங்கில மொழி, தமிழ் மொழி மூலம் கற்பித்தல் நிகழும் பாடசாலைகள். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 33 மும்மொழி பாடசாலைகள் உள்ளன.

(4)வகைப்படுத்தல் 4

பாடசாலை அமைவிடம், புவியியல் பின்னணி, போக்குவரத்து வசதிகள், பாடசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள், அரச அலுவலகங்கள், வலயக் கல்வி அலுவலகத்திற்கும் பாடசாலைக்கும் இடையிலான தூரம் போன்ற அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. மிக விருப்பமான பாடசாலை/மிகவும் வசதியான பாடசாலைகள்_ பிரபல நகர்ப்புற தேசிய மற்றும் மாகாண முன்னணிப் பாடசாலைகள் அனைத்தும் இதனுள் அடங்கும்.

2. விருப்புக்குரிய பாடசாலைகள்/ வசதியான பாடசாலைகள்_ நகர்ப்புறங்களை அண்டியுள்ள தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகள் இதனுள் அடங்கும்.

3.கஷ்டப் பிரதேச பாடசாலைகள்_ நகரில் இருந்து தூரத்தில் அமைந்துள்ள, வசதிகள் இல்லாத, ஆசிரியர்களுக்கு விருப்பமில்லாத பாடசாலைகள் இதனுள் அடங்கும்.

★அதிகஷ்டப் பிரதேச பாடசாலைகள்_ போக்குவரத்து வசதிகள், போதியளவு உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாத நகரில் இருந்து மிகவும் தொலைவில் உள்ள பாடசாலைகள் இதனுள் அடங்கும்.

(5)வகைப்படுத்தல் 5

மாணவர்களின் பாலின வகைக்கு அமைய பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1.ஆண்கள் பாடசாலைகள்_ ஆண் பிள்ளைகள் மட்டும் கற்கும் பாடசாலைகள். 2021 இன் படி 145 ஆண்கள் பாடசாலைகள்உள்ளன.

2.பெண்கள் பாடசாலைகள்_ மாணவிகள் மட்டும் கல்வி கற்கும் பாடசாலைகள்,2021 இன் படி 241 பெண்கள் பாடசாலைகள் உள்ளன.

3.கலவன் பாடசாலைகள்_ ஆண் மாணவர்களும், மாணவிகளும் ஒன்றாக கற்கும் பாடசாலைகள், 2021 இன் படி 9,769 கலவன் பாடசாலைகள் உள்ளன.

6)வகைப்படுத்தல் 6

இன அடிப்படையில் (Ethics Based) பின்வருமாறு பாடசாலைகளை வகைப்படுத்தலாம்.

1. சிங்களப் பாடசாலைகள்_ பெரும்பான்மை சிங்கள மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி 6,915 சிங்களப் பாடசாலைகள் உள்ளன.

2.தமிழ்ப் பாடசாலைகள்_ பெரும்பான்மை தமிழ் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள்.கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிகரப்படி 2,301 தமிழ் பாடசாலைகள் உள்ளன.

3.முஸ்லிம் பாடசாலைகள்_ பெரும்பாலான முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கும் பாடசாலைகள். கல்வி அமைச்சின் 2021 ஆம் ஆண்டின் புள்ளிவிபரப்படி 939 முஸ்லிம் பாடசாலைகள் உள்ளன.



வி.ரி.சகாதேவராஜா
(Sp.Sc.Trd.,BA.,PGDE(Merit), M.Ed.)
உதவிக்கல்விப் பணிப்பாளர்
சம்மாந்துறை

# பொருளாதார நெருக்கடியினால் கல்வி வீழ்ச்சியடைவதற்கு இடமளிக்கலாகாது!

## மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பின்னடைவைத் தவிர்ப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக் கைகள் எவை?

கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் உளவியலின் தாக்கம் தவிர்க்கவே முடியாதது. 'கல்வி உளவியல்' என்றும் 'கற்றல் உளவியல்' என்றும் 'கல்வியும் உளவியலும்' என்றும் வேவ்வேறாக பிரித்து தனித்தனியாக நோக்கப்படுமளவு அது பிரதான பேசுபொருளாக உள்ளது. அடிப்படை உளவியல் தெரியாமல் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க முனைவதே படுதோல்வியின் ஆரம்பம்தான்.

"படி... படி" என்று போதிக்கத் தெரிந்த பலருக்கும் பொறுமையாக இருந்து எப்படி படிப்பது என்று சொல்லித்தரும் மூலாபாயங்கள் குறித்து தெளிவு இல்லை.

தற்பொழுது எமது நாட்டில் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக கல்வியிலும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. அதாவது கல்விக் கட்டமைப்பில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.



இது குறித்து ஆயிரக்கணக்கான வாதப்பிரதிவாதங்கள், ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டாலும் அவற்றை அமுலாக்குவதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை. உலகளாவிய கொவிட் பெருந்தொற்றும் நிலைமையை இன்னும் மோசமாக்கியுள்ளது. கல்விக்கட்டமைப்பும், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளும் வீழ்ச்சியடைவதில் சாதகமான காரணிகளை அது தீவிரமாக துரிதப்படுத்தியது.

இப்பொழுது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலைமை காரணமாக மீண்டும் பாதிக்கப்பட்டிருப்பது எதிர்கால சந்ததிகளின் கல்விதான். கல்வி அடித்தளமே இல்லாமல் மாணவர்கள் குறுகிய காலத்துக்குள் தரம் 1 இல் இணைகின்றனர். எந்த ஒரு தேர்ச்சியையும் முழுமையாக முடிக்காமல், பரீட்சைகள் இல்லாமல் மாணவர்கள் அடுத்தடுத்த வகுப்புகளுக்கு நகர்த்தப்படுகின்றனர். உரிய கல்விசார் செயற்பாடுகள் பெரும்பாலும் உரிய காலப்பகுதியில் நிறைவு செய்யப்படுவதில்லை. மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகளும் அடைவுகளும் இடையில் விடப்படுகின்றன. தேசிய பரீட்சைகள் பிற்போடப்படுவதால் இயல்பான கட்டமைப்பு சிதைந்து அது ஏனைய சகல தரப்பையும் பாதிக்கின்றது.

அதிபர், ஆசிரியர்களும் போராட்டங்களையும் வேலைநிறுத்தங்களையும் முன்னெடுப்பதால் கல்விசார் நடவடிக்கைகள் இன்னும் பின்னடைகின்றன. வீட்டுச் சூழலில் பிள்ளைகளது இயல்பான கல்விக்கும் சுயமான கல்விக்கும் போதிய வசதிகளை செய்து கொள்ளும் அவகாசமோ, செய்து கொடுக்கும் அவகாசமோ, மனோநிலையோ எல்லோருக்கும் வருவதில்லை.

ஒரு நாட்டின் பொருளாதார பாதிப்பு தற்காலிகமானது. ஆனால் அந்தப் பாதிப்பு கல்வியில் பாதிப்பை ஏற்படுத்து இடமளிக்கலாகாது.

**மாணவர்களின் கல்விப் பாதிப்பைத் தடுக்க பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.**

☞ மாணவர்களிடம் கல்வி கற்க வேண்டும் என்ற உளவியல்சார் ஆர்வத்தை ஊட்டுதல், அதற்காக ஊக்குவிப்பு நிபுணர்களின் உதவியை நாடி தொடர்ச்சியாக நிகழ்ச்சிகளை நடத்தல்.

☞ வகுப்பாசிரியர்கள் மற்றும் பாட ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெறவும் கற்றலை கொண்டு செல்லவும் தேவையான ஏற்பாடுகளை செய்து கொள்ளல்.

☞ மாணவர்கள் வேறுபட்ட ஆர்வங்களுக்கும் ஆற்றல்களுக்கும் ஏற்ற வகையில் கற்றுக் கொள்ளும் மூலோபாயங்களை தெளிவுபடுத்தி அறிமுகம் செய்தல்.

☞ கிராம மட்டங்களில் மாணவர்களது கற்றலை தூண்டி விடும் போட்டி நிகழ்ச்சிகளை நடத்தல்.

☞ மாணவர்களின் திறன்களை, ஆற்றல்களை, கலையாற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அவற்றுக்கான சந்தர்ப்பம் வழங்கல்.

☞ வீட்டுச் சூழலில் கல்வி கற்பதற்கு வசதி உள்ளவர்கள் அதனைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.

☞ கிராம மட்டங்களில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை சமயம் சார்ந்த நோக்கில் ஊக்குவித்தலும், அறிவூட்டலும் விழிப்புணர்வை ஏற்படுத்தலும்.

☞ கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஆர்வமுள்ள ஆசிரியர்கள் அல்லாதவர்களின் உதவியை பெற்றுக்கொள்ள அவர்களை ஒன்றிணைத்தலும் ஒருங்கிணைத்தலும்.

☞ துரித செயற்றிட்டங்களை குறுங்காலத்தில் நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் முன்கொண்டு செல்லல்.

☞ கிராமங்களில் உள்ள பொதுஇடங்களை மையப்படுத்தி மேலதிக கற்றலுக்கு சாதகமான ஏற்பாடுகளைச் செய்தல்.

☞ மாணவர்களை தொடர்ந்தும் உற்சாகப்படுத்தி, எதிர்கால தலைமைக்கு அவசியமான திறன்களை விருத்தியாக்க வழிகாட்டல்.

☞ கற்றலை இடையில் கைவிடாமல் தொடராக அதனை பெற்றுக் கொள்ளும் வகையில் வழிகாட்டல்.



M.M.A. BISTHAMY
B.A., PGDE, M.Ed




## கச்சதீவு ஆலய திருவிழா மார்ச் 03, 04

# குறிக்காட்டுவானிலிருந்து அரச, தனியார் பஸ்கள் சேவையில்




**படகுக் கட்டணம் ரூ.2,000 என நிர்ணயம்**

**சொந்த படகுகளில் செல்பவர்கள் கடற்படை அனுமதி பெறுவது அவசியம்**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா, எதிர்வரும் மார்ச் 03 மற்றும் 04 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதையடுத்து யாழ். பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் அரச தனியார் பஸ்சேவைகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் குறிக்கட்டுவானிலிருந்து படகுச் சேவைகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபால சுந்தரம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் ஒருங்கிணைப்பின் கீழ் யாழ்ப்பாண ஆயர் இல்லம் , இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் மற்றும் சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களினதும் முழுமையான ஒத்துழைப்புடன் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவிழா தொடர்பான தகவல்களை பொதுமக்களுக்கு யாழ்.மாவட்ட செயலாளர் சிவபாலசுந்தரம் அறிக்கையொன்றின் ஊடாக அறிவித்துள்ளார். அந்த அறிக்கையில், மேலும் தெரிவித்துள்ளதாவது,

எதிர்வரும் 03ஆம் திகதி காலை 5 மணி தொடக்கம் மு.ப 10 மணி வரை அரச மற்றும் தனியார் பஸ்கள் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து குறிக்கட்டுவான் வரை சேவையில் ஈடுபடும். கச்சதீவுக்கான படகுச்சேவையானது குறிக்கட்டுவானிலிருந்து காலை 6 மணி முதல் மு.ப 11மணி வரை சேவையில் ஈடுபடுத்தப்படும்.

குறிகட்டுவானிலிருந்து பயணிக்கும் ஒரு நபருக்கான படகுக்குரிய இரு வழிப் பயணக் கட்டணம் 2,000 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வெளி மாவட்டங்களிலிருந்து தமது சொந்தப்படகுகளில் திருவிழாவுக்கு செல்வோர் தமது வசிப்பிடங்களுக்கு அருகிலுள்ள கடற்படை முகாம்களை தொடர்புகொண்டு உரிய கடற்பயணப் பாதுகாப்பு அனுமதியை பெற்றுக்கொள்வதுடன் 03 ஆம் திகதி பி.ப 06 மணிக்கு முன்னதாக கச்சதீவை வந்தடைவதற்கேற்றவாறு தங்களது பயணங்களை ஆரம்பிக்க வேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். 04 ஆம் திகதி கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான காலை உணவானது இலங்கை கடற்படையினரால் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயமானது யாத்திரிகர்களின் புனித தலமாகவுள்ளதால் மது பாவனைப்பொருட்கள் கொண்டு செல்லுதல் மற்றும் பாவித்தல் என்பன முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உதயசூரியன் சனசமூக நிலைய ஆண்டு விழாவும் கலையரங்க திறப்பு விழாவும்



*சாவகச்சேரி விசேட நிருபர்*

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 44ஆவது ஆண்டு விழாவும் கலையரங்கத் திறப்பு விழா வைபவமும் நேற்று பிற்பகல் சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெற்றது.

உதயசூரியன் சனசமூக நிலையத் தலைவர் வேலாயுதம் குகன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் கலந்து சிறப்பித்திருந்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரிப் பிரதேசசபைத் தவிசாளர் க.வாமதேவனும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன், உதயசூரியன் சனசமூக நிலைய லண்டன் நிர்வாக உறுப்பினர் க.சந்திரகுமார், சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் தி.தங்கவேலு மற்றும் சுதந்திரக்கட்சியின் கைதடி 7ஆம் வட்டார அமைப்பாளர் நா.பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து சிறப்பித்திருந்தனர். இதன்போது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு, விருந்தினர்கள் கௌரவிப்பு மற்றும் நடனப் போட்டிகள் ஆகியன இடம்பெற்றிருந்தன.

## கொக்குத்தொடுவாயில் கால்நடை வளர்ப்பாளர் மீது திருடர்கள் தாக்குதல்

**புதுக்குடியிருப்பு விசேட, மாங்குளம் குறூப் நிருபர்கள்**



முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய், சிவந்தாமுறிப்பு பகுதியில், தமிழ் கால்நடை வளர்ப்பாளரொருவர் கடுமையாக தாக்கப்பட்டுள்ளார்.

கால்நடைகளைத் திருட முற்பட்ட வேளை அதனை தடுக்க முயற்சித்த போது உரிமையாளர் தாக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

கொக்குத்தொடுவாய் பிரதேசத்தைச் சேர்ந்த சிவக்கொழுந்து கந்தசாமி என்ற கால்நடை வளர்ப்பாளரே இவ்வாறு தாக்கப்பட்டு முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார். முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்று பார்வையிட்டதுடன், நிலமைகள் தொடர்பில் கேட்டறிந்தார். அதேவேளை கொக்குத்தொடுவாய் பகுதியில் கால்நடைகளை வெலிஓயா பகுதியைச்சேர்ந்த திருடர்கள் தொடர்ச்சியாக திருடிவருவதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அவ்வாறு திருடப்படும்போது தாக்கப்படுகின்ற சம்பவங்களும் தொடர்சியாக இடம்பெற்று வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

## பூட்டியிருந்த வீட்டை உடைத்து திருட்டு

*யாழ்.விசேட நிருபர்*

யாழ்ப்பாணம், கோப்பாய் கட்டப்பிராய் பகுதியில் பூட்டியிருந்த வீட்டின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள் 16 பவுண் தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

ஒய்வு பெற்ற ஆசிரியையான தான் வீட்டை பூட்டிவிட்டு வெளியூர் சென்றிருந்ததாகவும், மீண்டும் வீட்டுக்கு திரும்பிய போது, வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டு வீட்டினுள் இருந்த 16 பவுண் தங்க நகைகள் களவாடப்பட்டுள்ளதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வீட்டின் உரிமையாளர் முறைப்பாட்டை பதிவு செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் தடயவியல் மற்றும் புலன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

## மின் கட்டண அதிகரிப்பில் பாதிப்புறும் உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு நிவாரணம் வழங்குமாறு கோரிக்கை

*யாழ்.விசேட நிருபர்*

உற்பத்தித்துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டுமென யாழ்ப்பாண வணிக கழகத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார் யாழ்ப்பாண வணிகர் கழகத்தில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை நடத்திய ஊடகசந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் மின்சார கட்டணங்கள் 66% அதிகரிக்கப்பட்டுள்ளமையால் பல்வேறு துறைகளில் பல பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. எனவே உற்பத்தித் துறை சார்ந்தோருக்கு அரசாங்கம் கட்டாயமாக நிவாரணம் வழங்க வேண்டும்.

குறிப்பாக வர்த்தகத்துறை சார்ந்தோருக்கும் இந்த மின்கட்டண அதிகரிப்பானது பாரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் புதிய நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில், பொருட்களின் விலை அதிகரிப்பானது மேலும் அதிகரித்து சாதாரண பொது மக்கள் அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதில் இடர்பாடுகளை எதிர்நோக்க வேண்டி வரும்.

குறிப்பாக அரிசி ஆலைகள் அரிசி விலையை அதிகரிக்கவிருப்பதாக சொல்லி இருக்கின்றனர்.

அதேபோல பல விடயங்கள் குறிப்பாக மின்சாரத்தில் தங்கி இருந்து உற்பத்தியில் மேற்கொள்ள சகலத் துறைகளும் விலை அதிகரிப்பினை மேற்கொள்வதற்குரிய சாத்தியக்கூறு காணப்படுகின்றன. ஆகையால் இது சம்பந்தமான உற்பத்தி துறை சார்ந்தவர்களுக்கு அரசாங்கம் ஏதாவது ஒரு வகையில் அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் அல்லது உற்பத்தி துறை சார்ந்த விடயங்களுக்கு மின் கட்டணத்தை குறைக்க வேண்டும் இது சம்பந்தமாக அரசாங்கம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனென்றால் ஏற்கனவே பல பொருளாதார சோதனைகளை தாங்க முடியாத இருக்கும் மக்கள் வர்த்தகத்துறை கைத்தொழிற்துறை அனைத்தும் மேலும் மின்சாரகட்டண அதிகரிப்பால் மிக மோசமாக பாதிப்படைந்துள்ளது. ஆகவே விரைவில் அரசு நிவாரணம் கொடுக்க வேண்டும் தவறும் பட்சத்தில் பொருட்களின் விலை அதிகரிப்பினை தடுக்க முடியாத நிலை ஏற்படும் என தெரிவித்தார்.

## கரவெட்டி பிரதேச வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணம் அன்பளிப்பு

கனடாவில் வாழும் கரவெட்டியைச் சேர்ந்த குடும்பமொன்று தங்கள் சொந்த ஊரிலுள்ள பிரதேச வைத்தியசாலைக்கு 12 இலட்சம் ரூபா பெறுமதியான 'டென்ரல் செயார் ' அன்பளிப்பு செய்துள்ளனர். சாம் அரசரட்னம், சரோஜா அரசரட்னம் தம்பதியரின் நினைவாக அன்பளிப்பு செய்யப்பட்ட உபகரணம் அண்மையில் வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் சூர்யா மற்றும் கண் வைத்தியர் டாக்டர் காருண்யா ஆகியோரிடம் கையளிக்கப்பட்டது.

கடந்த வருட இறுதியில் வைத்தியசாலைக்கு விஜயம் செய்து தேவைகளைக் கேட்டறிந்த அமெரிக்காவில் வாழும் கரவெட்டி சாமியன் அரசடியைச் சேர்ந்த பொறியியலாளர் முத்துத்தம்பி சிறீதரன் இதற்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.அவருக்கும் அரசரட்னம் குடும்பத்துக்கும் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் நன்றி தெரிவித்தது.

## வவுனியா சிறைச்சாலையிலிருந்து தப்பிய கைதி இந்திய அகதி முகாமில் தஞ்சம்

*(மன்னார் குறூப் நிருபர்)*

மன்னார் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணைக்காக வவுனியா சிறைச்சாலையிலிருந்து அழைத்துச்செல்லப்பட்ட கைதிகள் இருவர் நேற்றைய தினம் திரும்பிவரும் வழியில் தப்பிச் சென்றுள்ளனர்.

தப்பிச் சென்றவர்களில் ஒருவர் மன்னார் தோட்டவெளி ஜோசப்வாஸ் நகர் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான செல்வராஜ் சிந்துஜன் என தெரியவந்துள்ளது.

வவுனியா சிறைச்சாலையிலிருந்து மன்னார் நீதிமன்றத்துக்கு கைதிகள் இருவர் அழைத்துச் செல்லப்பட்டு வழக்கு விசாரணைகள் முடிவடைந்த பின்னர் மீண்டும் சிறைச்சாலைக்கு திரும்பிவரும் வழியில் தப்பிச் சென்றுள்ளனர். இவர்களில் ஒருவர் மண்டபம் அகதி முகாமில் தஞ்சமடைந்துள்ளதாக தெரியவருகிறது.

குற்றமொன்றின் காரணமாக இருவர் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச்சாலை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் ஒருவர் கடல் மார்க்கமாக மண்டபம் அகதி முகாமில் நேற்று அதிகாலை தஞ்சமடைந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மற்றவர் சிந்துஜன் தந்தை செல்வராஜ் கடந்த ஞாயிற்றுக்கிழமை ராமேஸ்வரம் நகர் காவல் நிலையத்தில் தஞ்சமடைந்து மண்டபம் அகதி முகாமில் தஞ்சம் அடைந்துள்ளதால் உளவுத்துறை அதிகாரிகள் தீவிர விசாரணை நடத்தி வந்தனர்.

இந்நிலையில் இந்நபர் மண்டபம் அகதி முகாமில் உள்ளமை தெரிய வருகிறது.

சந்தேகநபர்கள் இருவரும் வவுனியா சிறைச்சாலையில் குற்றமொன்றுக்காக தடுத்து வைக்கப்பட்டு மன்னார் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு மீண்டும் வவுனியா சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதே கை விலங்குடன் தப்பிச் சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் சந்தேகநபர்களில் ஒருவர் தலைமன்னாரிலிருந்து படகு மூலம் இந்தியாவுக்கு தப்பிச் சென்றுள்ளதாக தெரியவருகிறது. தப்பிய மற்றைய கைதியை பொலிஸார் தேடி வருகின்றனர்.

## துருக்கி, சிரியா நிலநடுக்கத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி

*(மன்னார் குறூப் நிருபர்)*



துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த மக்களுக்கான துயர் பகிர்வு நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை (20) காலை 10 மணியளவில் மன்னார் பஸார் பகுதியில் இடம்பெற்றது. மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில்,அதன் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது துருக்கி மற்றும் சிரியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்த மக்களுக்காக சர்வமத பிரார்த்தனையொன்றும் முன்னெடுக்கப்பட்டதோடு, உயிரிழந்த மக்களை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சர்வமத தலைவர்கள் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மன்னார் முச்சக்கர வண்டி சங்க நிர்வாகத்தினர், உறுப்பினர்கள், இளைஞர், யுவதிகள்,மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் என பலரும் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.



வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு பல்வேறு நிகழ்வுகள் கல்லூரி அதிபர் ருஷிரா குலசிங்கம் தலைமையில் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

# நகர்வலம்



## ரூ. 2 இலட்சம் இலஞ்சம் பெறுவதற்கு முயற்சி

### வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரி கைது

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்



லுனுகம்வெஹெர கதிர்காமம் வீதியில் சட்டவிரோதமான முறையில் வசித்துவந்த ஒரு குடும்பத்திற்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யாமல் அக் குடும்பத்தினரிடமிருந்து இரண்டு இலட்சம் ரூபாயினை இலஞ்சமாக பெற முயற்சி செய்த வன சீவராசிகள் திணைக்கள காணி அதிகாரி ஒருவரை இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் (20) கைது செய்துள்ளனர்.

குறித்த நபர் குடும்பப் பெண்ணிடம் இருந்து இரண்டு இலட்சம் ரூபா கோரி அதில் 185,000 ரூபாவினை பெற முயற்சி செய்தபோதே கைது செய்யப்பட்டுள்ளார். கதிர்காமம் வன ஜீவராசிகள் திணைக்கள காணி அதிகாரியாக இருந்த நபர் ஒருவரே இவ்வாறு இலஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பில் கதிர்காம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அநுராதபுரம் மாவட்டத்தில்;

# 40,000 மெட்ரிக் தொன் நெல் கொள்வனவுக்கு நடவடிக்கை

### மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவிப்பு

அநுராதபுரம் தினகரன் நிருபர்

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள விவசாயிகளது 40,000 மெட்ரிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர தெரிவித்தார்.

மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலக கேட்போர் கூடத்தில் அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள நடுத்தர மற்றும் சிறிய அரிசி ஆலை உரிமையாளர்களுடனான சந்திப்பொன்று நேற்று முன்தினம் (20) இடம் பெற்ற போதே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.



அதற்கமைவாக மாவட்டத்தின் 22 பிரதேச செயலாளர் பிரிவுகளையும் மையப்படுத்தி நெல் கொள்வனவு செய்யும் மத்திய நிலையங்களை தாபிப்பதற்கு நெல் சந்தைப்படுத்தும் சபையின் மாவட்ட அலுவலகம் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைவாக இம்முறை பெரும் போக நெற்செய்கையின் போது அறுவடை செய்யப்படும் விவசாயிகளிடமிருந்து 40,000 மெட்ரிக் தொன் நெல்லினை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதெனவும் மாவட்ட அரசாங்க அதிபர் ஜனக்க ஜயசுந்தர மேலும் தெரிவித்தார்.

## சட்டவிரோத பீடி இலைகள் கற்பிட்டியில் கண்டுபிடிப்பு



கற்பிட்டி தினகரன் விசேட நிருபர்

கற்பிட்டி சம்மட்டிவாடி பகுதியில் சட்டவிரோதமாக கடல்மார்க்கமாக கொண்டுவரப்பட்ட ஒரு கோடிக்கும் அதிக பெறுமதியுடைய பீடி இலைகள் நேற்று முன்தினம் (20) கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தியாவிலிருந்து கடல் மார்க்கமாக கேரளா கஞ்சா கொண்டுவரப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவிற்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, கற்பிட்டி சம்மட்டவாடி கடற்கரைப் பகுதியில் தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்த போதே குறித்த பீடி இலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதன்போது, 19 உரைப்பைகளில் அடைக்கப்பட்ட சுமார் 760 கிலோகிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கற்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்த சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

## கொட்டராமுல்ல அல் ஹிரா அதிபராக சப்ராஸ் நியமனம்

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

சிலாபம் கல்வி வலய பிரிவிலுள்ள கொட்டராமுல்ல அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக எஸ். சப்ராஸ் நேற்று (21) நியமனம் பெற்றார். சிலாபம் வலயக் கல்விப் பணிப்பாளர் டப்ளியூ . பீ .எஸ் . கே .விஜேசிங்க, சிலாபம் வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜே.ஹனீதா, நாத்தாண்டிய கோட்டக் கல்விப் பணிப்பாளர் கே.பீ.சேனாதீர. அல் ஹிரா முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபர் எம். எச். எம். பஸ்ரி, கொட்டராமுல்ல ஜும்ஆப் பள்ளிவாசலின் தலைவர் எம்.எஸ். எம். நஜீம், கொட்டராமுல்ல கல்வி அபிவிருத்திக் குழுத் தலைவர் ஏ. எஸ். எம். றில்வான் உட்பட பிரதேச உலமாக்கள், மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் புத்திஜீவிகள் ஆகியோர் புதிய அதிபரை வரவேற்றனர்.



கொழும்பு கங்காராம விகாரையில் அமைந்துள்ளது ஆதி சிவன் ஆலயத்தில் மஹா சிவராத்திரியின் சிறப்பு சனி பிரதோஷ பூஜை அகில இலங்கை ஸ்ரீ சாந்தஸ்ரூபன் யாத்திரை குழுவின் தலைவரும் குருசாமியுமான ஜெயமுருகன் வீரமூர்த்தி தலைமையில சனிக்கிழமை மாலை நடைபெற்றது. பூஜை வழிபாட்டில் தொழிலதிபர் ரமேஷ் கலந்து கொண்டிருப்பதையும் பூஜை இடம்பெறுவதையும், பக்தர்களையும் படங்களில் காணலாம்.

### மாற்றுத்திறனாளி மாணவன்

## ரிபாத் எழுதிய பொது அறிவு வினா விடை நூல் வெளியீடு

### முக்கிய பிரமுகர்கள் விழாவில் பங்கேற்பு




தெல்தோட்டை ஊடக மன்றத்தின் கீழ் இயங்கும் அருள்வாக்கி அப்துல் காதிர் கலை இலக்கிய கழகத்தின் ஏற்பாட்டில் மாற்றுத் திறனாளி மாணவன் ஆ.சு.ஆ. ரிபாத் எழுதிய பொது அறிவு வினாவிடை எனும் நூல் எதிர்வரும் சனிக்கிழமை (25) காலை 9.00 மணிக்கு தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) யில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம அதிதியாக கலாநிதி அஷ்ஷெய்க் முனீர் சாதிக் மற்றும் Kandy Farook Brothers உரிமையாளர் பாரூக் மற்றும் முன்னாள் கோட்டக் கல்விப்பணிப்பாளர் S.M. ஹம்ஸா லெப்பை, பிரதேச பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்க உள்ளனர்.

இம்மாணவன் முன்பு தெல்தோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரியில் கல்வி கற்று பின்பு தற்போது கண்டி சித்திலெப்பை ஆண்கள் கல்லூரியில் தரம் 08ல் கல்வி பயின்று வருகின்றார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் மாற்றுத்திறனாளி மாணவனாக தோற்றி வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளையும் பெற்றார்.

அத்துடன் சிறப்பாக ஓவியமும் வரையக் கூடிய இம்மாணவன் அடிக்கடி தான் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக இருக்கும் நேரங்களில் பத்திரிகை நூல்களை வாசித்து இந்த நூலை எழுதி புத்தகமாகவும் கொண்டு வந்துள்ளமை விசேட அம்சமாகும்.

இந்த மாணவனை ஊக்குவிக்கும் வகையில் ஒரு சில ஆசிரியர்கள் சேர்ந்து இந்நூலை வெளியிட்டு இம்மாணவனை சந்தோஷப்படுத்த முன் வந்துள்ளமையை அனைவரும் வரவேற்றுள்ளனர்.

## நீண்ட கியூ வரிசை யுகத்துக்கு முடிவுகட்டியவர் ஜனாதிபதி ரணில்

### ஹபராதுவையில் பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன

(வெலிகம தினகரன் நிருபர்)



கடந்த காலங்களில் பெற்றோல், டீசல், கேஸ் எரிவாயு மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றிற்கு நீண்ட வரிசைகள் காணப்பட்ட நிலையில் அதனை சுமுகமாக முடிவுக்கு கொண்டு வந்தவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவாகுமென காலி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஹபராதுவ தேர்தல் தொகுதியில் (18) நடைபெற்ற கூட்டமொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், ஐ.தே.கட்சி நாட்டுக்குப் பல்வேறு அர்ப்பணிப்புகளை செய்துள்ளன. நாட்டின் முன்னேற்றத்துக்கு பல்வேறு திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுகடந்தகாலங்களில்அதன் மூலம் பிரயோசனங்கள் அடையப்பெற்றுள்ளன. நாட்டுக்கு எதிர்காலம் ஒன்று தேவையெனின் சர்வதேச மட்டத்தில் நாடு பிரபல்யம் அடைய வேண்டும். அதேபோன்று பொருத்தமான தலைவர் ஒருவரும் தேவை. அவ்வாறான தலைவர் ஒருவர் தான் இன்று நாட்டை ஆட்சி செய்து வருகிறார் எனவும் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர், நாட்டு மக்கள் அனைவரும் கட்சி பேதமின்றி ஒத்துழைப்பு வழங்குவது அவசியமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## நீரில் மூழ்கி மூன்று மாணவர்கள் பலி

(வெலிகம தினகரன் நிருபர்)

மாத்தறை வெல்லமட கடலில் நீராடச் சென்ற மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி பலியாகியுள்ளனர். இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (17) மாலை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கம்புறுப்பிட்டிய தேசிய பாடசாலையில் தரம் 12ல் வர்த்தக பிரிவில் கல்வி கற்கும் மூன்று மாணவர்களே இவ்வாறு நீரில் மூழ்கி மரணமாகியுள்ளனர். கம்புறுப்பிடிய, மாபலான பகுதியைச் சேர்ந்த தனுஷ்க ஸத்ஸர(18) மாகந்துர பகுதியைச் சேர்ந்தவர்களான ஷமிந்துகயேஷான் (17) மற்றும் அர்ஜுன உத்பல (18) ஆகிய மூவருமே இவர்களாவர்.

நீராடச் சென்ற இடத்திலிருந்து 4 கிலோ மீற்றர் தூரத்திலிருந்தே மூன்று மாணவர்களின் சடலங்களும் மீட்டெடுக்கப்பட்டன. மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

### தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை

## மாதம்பை, அல் மிஸ்பாஹ் சிலாபம் வலயத்தில் முதலிடம்



2022 ஆம் ஆண்டு தரம் 05 புலமை பரிசில் பரீட்சையில் சிலாபம், மாதம்பை அல்மிஸ்பா ஹ் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்ற ஐந்து மாணவர்கள் சித்தி அடைந்துள்ளனர்.

இது தவிர 100 க்கு அதிகமான புள்ளிகளை 23 மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

எம்.ஆர்.எப்.ரிதா (163), எம். எப்.ஹூதைப் அஹமட் (156),எம். எஸ்.எப்.சிப்னா (146), எம்.எஸ். எப். சாரா (145),ஏ.சி மன்ஹா (143) ஆகியோர் புலமை பரிசுகளுக்கு தகுதி பெற்றுள்ளனர். அதிக சித்தி வீதம் பதிவாகிய தமிழ் மொழி மூல பாடசாலைகளுள் சிலாபம் கல்வி வலயத்தில் முதலிடத்தையும் இப் பாடசாலை பெற்றுக்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



வத்தளை Little Pearl Pre School மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் அண்மையில் லேக்ஹவுஸ் நிறுவனத்தை பார்வையிட்ட பின்னர் எடுத்துக் கொண்ட படம்.

(படம் ருக்மல் கமகே)

# சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினம்

## சவூதியின் நீயூம் வேலைத்திட்டம் உலகளாவிய மட்டத்தில் முதல்தர வேலைவாய்ப்புச் சந்தைகளில் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது



**சவூதி அரேபியாவின் ஸ்தாபக தினத்தினை முன்னிட்டு சவூதி அரேபிய ஆய்வுகளுக்கான ஆர்வலரும், சவூதி மதீனா இஸ்லாமியப் பல்கலையின் முதலாவது இலங்கைக்கான கலாநிதிப் பட்டதாரியுமான கலாநிதி அம்ஜத் ராசிக் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**சவூதி ஆரேபியாவின் முதலாவது பல்கலைக்கழக கலாநிதி பட்டம் பெற்றவர் என்ற வகையில் சவூதி அரேபியாவுடனான தொடர்பு மற்றும் சவூதி அரேபியா சம்பந்தப்பட்ட ஆய்வு குறித்து ஈடுபட உங்களுக்கு ஆர்வம் ஏற்படுவதற்கான காரணம் என்ன?**

நான் இலங்கையில் 1997 ஆம் ஆண்டு க. பொ. த உயர் தரக் கல்வியில் சிறந்த பெறுபேற்றைப் பெற்று பேராதனை பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தேன். இந்நிலையில் சவூதி அரேபியாவின் புனித மதீன மா நகரில் அமைந்துள்ள சர்வதேச இஸ்லாமியப் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பம் கோரியிருந்தார்கள். இதன் பிரகாரம் விண்ணப்பம் செய்தேன். க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு இருந்தமையால் மதீனா பல்கலைக்கழக அனுமதி இலகுவாக கிடைக்கப்பெற்றது.

இலங்கையில் இருந்து 1999 ஆகஸ்ட் மாதம் புனித மதீனா பல்கலைக்கழகம் சென்றடைந்தேன். பின்னர் அங்கே தொடராக சுமார் 15 வருடங்கள் கல்வி கற்று இளம் கலைமாணி, முதுமாணி மற்றும் கலாநிதிப் பட்டங்களுக்கான கற்கை நெறிகளை முடித்துக் கொண்டேன். இதில் விசேடமாக மதீனாப் பல்கலைக்கழகத்தில் இலங்கையில் இருந்து சென்ற பல எண்ணிக்கையிலான மாணவர்கள் கல்வி கற்று தத்தமது பட்டங்களைப் பெற்று வெளியேறியிருந்த போதிலும் இப்பல்கலைக்கழகத்தில் கலாநிதிப் பட்டத்தை முடித்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் முதன் முதலில் எனக்குத்தான் கிடைக்கப்பெற்றது என்று ஈண்டு குறிப்பிடலாம்.

இந்த வகையில் 1999 தொடக்கம் 2015 வரையிலான காலப்பகுதியில் எனது கற்கை நெறிகளை மேற்கொண்டதுடன் சவூதி அரேபியாவில் இடம்பெறும் பற்பல சன்மார்க்க, கலாசார நிகழ்ச்சிகளிலும் குறிப்பாக அந்நாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கையுடனும் இரண்டறக் கலந்து பல அனுபவங்களைப் பெரும் வாய்ப்பு கிடைத்தது. இதன் விளைவாக சவூதி அரேபியா சம்பந்தப்பட்ட ஆய்வுகளில் ஈடுபட இயல்பாகவே ஓர் ஆர்வம் ஏற்பட்டது எனலாம்.

**இன்று 22 ஆம் திகதி பெப்ரவரி மாதம் சவூதியின் ஸ்தாப தினம். புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த 'ஸ்தாபக தினம்' எதைக் குறிக்கின்றது? அதற்கும் சவூதியின் 'தேசியத் தினத்திற்கும் இடையிலே உள்ள வித்தியாசம் என்ன?**

சவூதியின் தேசிய தினம் செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி என்பது யாவரும் அறிந்த விடயம். ஆனால் சவூதியின் 'ஸ்தாபக தினம்' பெப்ரவரி 22 ஆம் திகதி ஆகிய இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது. தேசிய தினம் ஆனது 1932 செப்டெம்பர் 23 அன்று இன்றைய (மூன்றாவது) சவூதி அரசினை நிறுவிய மன்னர் அப்துல் அஸீஸ் ஆல் ஸுஊத் (ரஹ்) அவர்களால் சவூதி அரேபியாவின் அனைத்து பிரேதசங்களும் ஒரு குடையின் கீழ் ஒன்று சேர்க்கப்பட்டு 'சவூதி அரேபிய இராய்ச்சியம்' (Kingdom of Saudi Arebia) என்ற பெயரில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளாகும். அதேவேளை நாம் 'ஸ்தாபக தினம்' என்பதன் வரலாற்றினை பார்க்கும் பொழுது, அது சுமார் மூன்று நூற்றாண்டுகளுக்கு முன் நிகழ்ந்த இன்னறய சவூதி அரசின் மூலவித்தாகிய (முதலாவது) சவூதி அரசின் ஸ்தாபகத்தினை நினனவுகூரும் ஒரு நாளாகவே இருக்கின்றது. அதாவது கி.பி. 1727 பெப்ரவரி மாதம் 22 ஆம் நாளன்று இமாம் முஹம்மத் பின் ஸுஊத் (ரஹ்) என்பவரால் முதலாவது சவூதி அரசு நிறுவப்பட்டது. இதை தற்காலத்து சந்ததிகள் மறந்துவிடக் கூடாது என்பதற்காகவும் சவூதி அரேபியாவின் பண்டைய ஆட்சியாளர்களின் சேவைகள் இக்கால சந்ததிகளுக்கு நினைவுபடுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் இத்தினத்தினை பெப்ரவரி 22 அன்று அனுஷ்டிக்குமாறு சவூதியின் மன்னர் இரண்டு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்களால் சென்ற 2022 ஆம் வருடம் உத்தியோகபூர்வமாக பணிப்புரை விடுக்கப்பட்டது.

**இவ் ஸ்தாபகத் தினம் எப்பொழுதிருந்து அனுஷ்டிக்கப்படுகின்றது?**

இத்தினத்தினை அனுஷ்டிக்குமாறு வெளிந்த மன்னரின் பணிப்புரை 2022 ஜனவரி 27 அன்று விடுக்கப்பட்டது. பணிப்புரையின் இலக்கம் (A 371) ஆகும். அதன்படி சென்ற வருடம் 2022 இல் இருந்த இந்த ஸ்தாபக தினம் அனுஷடிக்கப்படுகின்றது.

**ஸ்தாபக தினம் மூலம் நினனவூட்டவியலும் சவூதியின் தொன்மை வரலாற்றின் சில பக்கங்களைக் கூற முடியுமா?**

கி. பி 16, 17 ஆம் நூற்றாண்டுகளில் அரேபிய தீபகற்பத்தில் கிழக்கு மற்றும் வடகிழக்குப் பிரேதசங்களில் இருந்த மக்களிடம் செல்வாக்குப் பெற்றிருந்கோத்திரங்களில் ஒன்றான பனூ ஹனீபா கோத்திரத்தைச் சேர்ந்த இமாம் முஹம்மத் பின் ஸுஊத் என்பவரால் கி. பி 1727 இல் பெப்வரி 22 ஆம் நாள் முதலாவது சவூதிய அரசு திர்இய்யா என்ற நகரத்தினை தலைநகராகக் கொண்டு நிறுவப்பட்டது. அக்காலத்தில் அப்பிரேதச மக்களிடையே சன்மார்க்கச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டிருந்த அழைப்பாளர் இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்) அவர்களின் ஒத்துழைப்பும் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் அவர்களுக்குக் கிடைத்தது.

தற்போதைய மன்னர் சல்மான் அவர்கள் இமாம் முஹம்மத் பின் ஸுஊத் என்ற ஸ்தாபகரின் ஆறாவது தலைமுறையில் பிறந்தவராவார். இமாம் முஹம்மத் பின் ஸுஊதின் தந்தையான ஸுஊத் என்பவரின் பெயரைத் தாங்கிய சவூதி (அல்லது ஸுஊதி) என்ற பதமே 'சவூதி அரேபியா' என்று அந்நாட்டின் பெயரிலும் காணப்படுகின்றது. அதனை ஆளும் ஆட்சியாளர்கள் 'ஆள் ஸுஊத்' என்ற சிறப்பான பெரும் குடும்பத்தினைச் சேர்ந்தவர்கள். 1727 இல் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது சவூதி அரசு 1818 இல் முற்றுப்பெற்றது. பின்னர் அதன் வழித்தோன்றல்களில் ஒருவரான துர்கீ

பின் அப்துல்லாஹ் என்பவரால் மீண்டும் குறுகிய காலத்தில் சுமார் ஆறே வருடங்களுக்குள் 1,824 இல் மீளுருப்பெற்றது. இது இரண்டாவது சவூதி அரசு என்று வரலாற்றில் அறியப்படும். இந்த இரண்டாவது சவூதி அரசு பலகாலம் நீடித்து 1891 இல் மீளுருப்பெற்றது. அதன் கடைசி ஆட்சியாளராக அப்துர் ரஹ்மான் பின் பைசல் ஆள் ஸுஊத் (ரஹ்) அவர்கள் இருந்தார்கள். மீண்டும் சுமார் ஒரு தசாப்த காலத்தின் பின்னர் இரண்டாவது சவூதி அரசின் கடைசி ஆட்சியாளர் அப்துர் ரஹ்மான் என்பவரின் மகனான அப்துல் அஸீஸ் ஆள் ஸுஊத் அவர்களால் தற்போதைய சவூதி அரசு ரியாத் நகரைத் தலைநகராகக் கொண்டு 1902 இல் நிறுவப்பட்டது.அன்று தொடக்கம் 1932 ஆம் ஆண்டு வரை சுமார் 30 வருடகாலமாக மன்னர் அப்துல் அஸீஸ் அவர்கள் அரேபியத் தீபகற்பத்தில் இருந்த அனைத்து வகுப்பறையும் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைக்கும் பாரிய முயற்சியில் ஈடுபட்டு அதில் அபார வெற்றியும் கண்டார். அதன் விளைவாக 1932 ஆம் ஆண்டு சவூதி அரேபிய அரசு என்ற பெயரில் ஒரு பரந்த நாடு உருவானது.

**சவூதி அரேபியாவின் தற்போதைய ஆட்சி மற்றும் அரசியல் சமுதாய நிலை பற்றிக் கூற முடியுமா?**

தற்போது சவூதி அரேபியாவின் அரசராக மன்னர் சல்மான் அவர்கள் திகழ்கின்றார். அதுவே தந்தையான மன்னர் அப்துல் அஸீஸ் ஆள் ஸுஊத் அவர்களால் அத்திவாரமிடப்பட்ட இந்த ஸ்திரமான ஆட்சி இன்று வரை சிறப்பாக அந்நாட்டு மக்களால் மட்டுமல்லாமல் அனைத்து உலக மக்களாலும் போற்றப்படும் அளவுக்கு சிறந்த ஆட்சியாகத் திகழ்கின்றது. மன்னர் அப்துல் அஸீஸ் அவர்களுக்குப் பின்னர் அவர்களது புதல்வர்களான மன்னர் ஸுஊத், ஊபசல், காலித், பஹத், அப்துல்லாஹ் என்போர் நல்லாட்சி புரிந்தனர். அதன் தற்போதைய ஆட்சியாளர்கள் இரு புனிதஸ்தலங்களின் சேவகர் மன்னர் சல்மான் அவர்கள் நல்லாட்சி புரிந்து வருகின்றார். அவருக்கு பக்க பலமாக அவரின் முடிக்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் அவர்கள் இருக்கின்றார்கள். குறிப்பாக நவீன காலத்தின் சவால்களுக்கு மத்தியில் சவூதி நாட்டினை முன்னேற்றப் பாதையிலும் ஸ்தீரமான அரசியல் பொருளாதாரக் கொள்கைகள் மூலமாகவும் வழிநடத்திச் சென்று இன்று உலகில் ஒரு பலம் பொருந்திய சக்தியாக சவூதி அரேபியாவை உருவாக்கியிருக்கின்றார்கள். அந்நாட்டு மக்களும் ஆட்சியாளர்களுடன் மிக நெருங்கிய உறவினையும் அமோக ஆதரவினையும் ஊவத்துள்ளார்கள்.

**சர்வதேச அளவில் சவூதி அரேபியாவின் பலம் பற்றிக் குறிப்பிட்டீர்கள். அதனை சற்று விவரமாகக் குறிப்பிட முடியுமா?**

இன்று சவூதி அரேபியா உலக வல்லரசு நாடுகளுடன் நேருக்கு நிகராக நின்று உலகை ஆளும் ஒரு சக்தியாக மாறிவருகின்றது. உலகில் பலம் பொருந்திய 20 நாடுகளின் கூட்டமைப்பாகிய (G20) கூட்டமைப்பில் அங்கத்தவராகவும், கடந்த 2021 ஆம் வருடம் அதன் தலைமைத்துவத்தினையும் செவ்வனே மேற்கொண்டது.

அதற்கும் மேலதிகமாக இன்று உலகில் வளம் குன்றிய நாடுகளுக்கு மனிதநேய உதவிக்கரம் நீட்டும் நாடுகளில் முதன்மை நாடாகவும் திகழ்கின்றது. மேலும் குறிப்பாக உலகிலே பெரும்பாலான முஸ்லிம்கள் வழிபடும் மக்காவின் புனிதஸ்தலங்களை சிறப்பாகப் பராமரித்து அவற்றுக்குச் செய்ய வேண்டிய அனைத்து வசதிகளையும் முனறயாகவும் நவீன அமைப்பிலும் செய்து வருவதனாலும், உலக இஸ்லாமிய நாடுகளின் நன்மை,தீமைகளில் பங்கெடுத்து அந்நாடுகளுடன் நல்ல உறவைப் பேணி வருவதனாலும் உலக இஸ்லாமிய நாடுகளுக்கு மத்தியில் ஒரு தனித்துவத்தை உடைய ஒரு தேசமாக சவூதி திகழ்கின்றது என்றால் மிகையாகாது.



**சவூதி அரேபியாவில் உள்ள பொருளாதார திட்டங்களின் ஊடாக இலங்கை போன்ற நாடுகளுக்குக் கிடைக்கும் தொழில் வாய்ப்புக்கள் சம்பந்தமாகக் கூறமுடியுமா?**

சவூதி அரேபியாவின் நவீன பொருளாதார சீர்த்திருத்த நடவடிக்கைகளினால் பல பிரமாண்டமான திட்டமிட்ட முதலீட்டுத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சவூதியின் வடமேற்குப் பிரதேசத்தில் செங்கடல் கரையோரமாக திட்டமிடப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள நீயூம் வேலைத்திட்டம் உலகளாவிய மட்டத்தில் முதல்தர வேலைவாய்ப்புச் சந்தைகளில் ஒன்றாகக் கணிக்கப்படுகின்றது.

இவ்வேலைவாய்ப்புத் திட்டம் மாத்திரம் சுமார் 26,500 சதுர கி. மீட்டர் பரப்பளவில் முன்னெடுக்கப்படுகின்றது என்றால் நாம் அதன் பிரமாண்ட வேலைத் திட்டத்தை நாமே கணித்துக்கொள்ள முடியும். இது போன்ற பற்பல பாரிய வேலைத் திட்டங்களின் மூலம் பல்லாயிரக்கணக்கான வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. அவற்றினைத் தேடி எமது நாட்டு இளைஞர்களுக்கும் வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட பொறுப்புதாரிகள் முனைவது காலத்தின் தேவையாக உள்ளது.

**சர்வதேச ரீதியாக சவூதி அரேபியாவின் மனித நேயப்பணிகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?**

நவீன உலகில் முன்னேற்றப்பாதையில் பயணிக்கும் சவூதி வளம் குன்றிய நாடுகளுக்கான தனது உதவிகளை வழங்குவதில் சற்று முன்னுதாரணமாக இருக்கின்றது. அபிவிருத்தி குன்றிய மற்றும் நடுத்தர மட்டத்திலான நாடுகளுக்கான உலகளாவிய மனித நேய உதவித்திட்டத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ அறிக்கையின்படி உலக பொருளியல் மற்றும் கூட்டுறவு வளர்ச்சிக்கான அமைப்பு (Organization for Economic Cooperation and Development OECD) கடந்த 21 டிசம்பர் 2022 அன்று வெளியிட்டிருந்தது. இவ்வறிக்கையின் பிரகாரம் உலகளாவிய மட்டத்தில் அபிவிருத்தி குன்றிய நாடுகளுக்கு உதவிக்கரம் நீட்டிய பலம் வாய்ந்த நாடுகளின் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடம் வகித்துள்ளது. ஒரு முக்கிய விடயமாகும். 2021 ஆம் ஆண்டுக்கான சவூதி அரேபியாவின் உலகளாவிய உதவிகள் 7.12 பில்லியன் அமெரிக்க டொலர்களை (26.71 பில்லியன் சவூதி ரியால்ககளை) எட்டியுள்ளது. மேலும் குறிப்பிட்டுக் கூறவேண்டிய விடயம் யாதெனில் இத்தொகை சவுதியின் தேசிய வருமானத்தில் 1.05 விகிதத்தினை எட்டியிருப்பது விசேட அம்சமாகும்.

இங்கே நாம் இன்னுமொரு விடயத்தினையும் நினைவு படுத்துவது பொருந்தும் என நினனக்கின்றேன். அதாவது 1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சனபயில் எட்டப்பட்ட தீர்மானத்தின் படி, உலகில் பலம்வாய்ந்த உதவி வழங்கும் நாடுகள், தமது தேசிய வருமானத்தில் குறைந்த பட்சம் 0.7 விகிதத்தினையாவது உலகளாவிய மனிதநேய உதவிகளுக்காக ஒதுக்க வேண்டும் என்ற சிபாரிசினையும் தாண்டி சவூதி அரேபிய 2021ஆம் ஆண்டு தனது தேசிய வருமானத்தில் 1.05 விகிதத்தினை ஒதுக்கியிருப்பதானது சவூதி அரேபியாவின் உலகளாவிய மனிதநேய அபிவிருத்திப் பணிகளுக்கான அமோக பங்களிப்பினை எடுத்துக்காட்டுகின்றது.

**அண்மையில் நிகழ்ந்த துருக்கி மற்றும் சிரியா நாட்டில் நடந்த அனர்த்தத்தின் போது அயல் நாடான சவூதி அரேபியாவின் நிவாரண உதவிகள் பலரினதும் கவனத்தினை ஈர்த்துள்ளன. அது பற்றிக் கூற முடியுமா?**

துருக்கி மற்றும் சிரியாவில் நிகழ்ந்த சோகம் அனைத்து மனங்களிலும்; பாரிய சோகத்தினை ஏற்படுத்தியது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு அல்லாஹ் அபயமளிக்க வேண்டும். உதவிக்கரம் நீட்டும் அனைவரையும் அந்த இறைவன் பொருத்திக்கொள்ள வேண்டும். இவ்வனர்த்த நிவாரணத்தில் அனைத்து உலக நாடுகளும் பங்கெடுத்து வரும் நிலையில், குறிப்பாக சவூதி அரேபியா தனது நிவாரணப்பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. அனர்த்தம் நிகழ்ந்த சில மணி நேரங்களில் நிவாரப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு மன்னர் சல்மான், மற்றும் இளவரசர் முஹம்மத் பின் சல்மான் இருவரதும் பணிப்புரைகள் விடுக்கப்பட்டன.

அதன் தொடராக வான்வழி நிவாரணத்துடன் உடன் களமிறங்கிய விசேட சவூதி அனர்த்த மீட்புக்குழுவில் அனர்த்த முகாமைத்துவ விசேட நிபுணர்கள், வைத்தியர்கள், பொறியியலாளர்கள், நிவாரண முகாமைத்துவ அதிகாரிகள் என பலரும் உள்ளடங்கியிருந்தனர். பின்னர் அதனைத் தொடர்ந்து இரண்டாவது வான்வழி நிவாரண உதவிகளையும் சில மணி நேரப் பொழுதில் அனுப்பி வைக்கப்பட்டது. அதைபோல் இவ்வான்வழி நிவாரணப் பணிகள் மேலும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மேலும் உதவிகள் தரை மார்க்கமாக பல கனரக கண்டைனர்கள் தொடரணியாக சென்று கொண்டிருக்கின்றது.

அதேவேளை பாதிக்கப்பட்டவர்களுக்கு நன்கொடைகள் வழங்குவதற்கென்று விசேடமாக வடிவமைக்கப்பட்ட திறன்பேசி விண்ணப்பங்கள் ஊடாக தேசிய ரீதியாக சேகரிக்கப்பட்ட நிதி இதுவரை 427 மில்லியன் ரியால்களை (114 மில்லியன் அ.டொலர்) தாண்டியுள்ளது.

இவ்வாறான மனித நேயப்பணிகள் சவூதி அரேபியாவினால் முன்னெடுக்கப்படுவதனால் சவூதிக்கு 'மனிதநேய இராய்ச்சியம்' என்ற ஒரு சிறப்புப் பெயரும் சர்வதேச அளவில் குறிப்பாக அரேபிய உலகில் இருக்கின்றது.

நேர்காணல்: இக்பால் அலி



# ஹம்பாந்தோட்டை பிரதேசமெங்கும் குளிர் காலநிலை; மக்கள் அசௌகரியம்

ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

ஹம்பாந்தோட்டை பிரதேசமெங்கும் கடந்த சில தினங்களாக காலநிலையில் மாற்றம் ஏற்பட்டுள்ளதினால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருவதோடு பணியுடன் கூடிய குளிர் காலநிலையும் நிலவி வருகிறது.

பிரதேசமெங்கும் இடைக்கிடை மழை பெய்து வருவதினால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டம் எங்கும் நிலவிவந்த உஷ்ணமான காலநிலை மாற்றமடைந்து குளிர்ச்சியான காலநிலை நிலவி வருவதினால் சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் பல்வேறு நோய்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர்.


தினமும் காலநிலை மப்பும் மந்தாரமுமாகவே காணப்படுகிறது. அதிகாலையில் மற்றும் மாலை வேளைகளில் பனியுடன் கூடிய குளிர் காலநிலை நிலவிவருகிறது. அத்தோடு, சந்தையில் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு அரிசி, மரக்கறி வகைகள், வெங்காயம் மற்றும் கிழங்கு ஆகியவற்றின் விலைகளும் வெகுவாக குறைவடைந்துள்ளதோடு தேங்காயின் விலை அதிகரித்து காணப்படுகிறது.

அத்தோடு அரசாங்கம் மின் பட்டியல் விலைகளை அதிகரிப்பதாக அறிவித்ததனை தொடர்ந்து வியாபாரிகளும் தங்களது பொருட்களின் விலைகளினை அதிகரித்துள்ளதினால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# "அறிவுச்சுடர் எம்.ஏ. இனாயத்துள்ளாஹ்" பற்றிய தொகுப்பு நூல் திக்வல்லையில் வெளியீடு

அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர், திக்வல்லை எம்.ஆர்.எம். ரிஸ்கியினால் தொகுக்கப்பட்டுள்ள 'அறிவுச்சுடர் எம்.ஏ. இனாயத்துள்ளாஹ் (திக்வல்லை இனாயாஹ்)' எனும் தலைப்பிலான நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் சனிக்கிழமை (25) காலை 9.30 மணிக்கு திக்வல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை பதியுத்தீன் மஹ்மூத் மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெறவுள்ளது.

ஒஸ்டம் நிறுவன ஸ்தாபகர் எம்.எச்.எம். நஸார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் தென் மாகாண பிரதிக்கல்விப்பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். மஷாயிர் நூல் அறிமுகவுரையையும் எம்.ஆர்.எம். ரிஸ்கி நூல் வெளியீட்டுரையையும் நிகழ்த்துவார். சிறப்புரையை கவிஞர் திக்வல்லை கமாலும் கவிவாழ்த்தை கலாபூஷணம் யோனகபுர ஹம்ஸாவும் ஏற்புரையை கவிஞர் திக்வல்லை ஸும்றியும் நன்றியுரையை ஒஸ்டம் நிறுவன செயலாளர் அத்ஹரும் நிகழ்த்துவர். இந்நிகழ்வில் கலாபூஷணம் தமிழ் தென்றல் அலி அக்பர் தலைமையிலான கவிஞர்களின் கவியரங்கொன்றும் இடம்பெறவுள்ளமை விசேட அம்சமாகும்.







பேருவளை மஸ்ஸல கனிஷ்ட பாடசாலையில் கல்வி கற்று கடந்த 2022ஆம் ஆண்டின் புலமைப்பரிசில் பரீட்சையில் (சிங்கள மொழி) மூலம் பரீட்சைக்கு தோற்றி 158 புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை சேர்த்த உமர் ரிம்ஸான் அண்மையில் தினகரன் ஆசிரியர் பீடத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். தினகரன் ஆசிரியர் பீடத்தில் பணிபுரியும் ரிம்ஸானின் மூத்த புதல்வரான உமருக்கு தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவர் பாராட்டி பரிசு வழங்குவதையும் இணையாசிரியர் மர்லின் மரிக்கார் உட்பட ஆசிரிய பீடத்தினரையும் படங்களில் காணலாம்.

# இலவச பாடப் புத்தகங்கள் மாணவர்களை சென்றடைய ஒத்துழைப்பு வழங்குங்கள்

## விநியோக நிகழ்வில் அதிபர்கள், கல்வி அதிகாரிகளிடம் இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

இலவச பாட புத்தகங்கள் வழங்கும் திட்டத்தை கல்வி அமைச்சு முன்னெடுத்துள்ளதால் அதிபர்கள், அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கி பாடப் புத்தகங்களை தங்களது அதிகாரத்திலுள்ள பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு சிரமம் பாராது செயற்பட வேண்டுமென, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கேட்டுள்ளார்.

2023 இன் புதிய கல்வி ஆண்டுக்கான முதலாம் தவணை மார்ச் மாதம் (27) ஆரம்பிக்கவுள்ளது.இதையடுத்து நாட்டின் அனைத்து அரச பாடசாலைகளுக்கும் 3,000 கோடி ரூபா செலவில் மூன்று கோடியே 20 இலட்சம் பாடப் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டுள்ளன. இவற்றை விநியோகிக்க நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் உரிய நேரத்தில் பாடப் புத்தகங்களை, சகல பாடசாலைகளுக்கும் பெற்றுக் கொடுக்கும் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப் பட்டிருப்பதாகவும் கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் ஹோமாகமை களஞ்சிய சாலையிலிருந்து பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் உத்தியோகபூர்வ நடவடிக்கைகள், கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த மற்றும் கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ஆகியோரின் தலைமையில் நடைபெற்றது.

புதிய பாடப் புத்தகங்களை விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்பில் விளக்கமளிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் மேலும் கூறுகையில், நாடு முழுவதுமாக 10,146 அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 9,750 மாகாண பாடசாலைகள். 396 தேசிய பாடசாலைகளும் அடங்குகின்றன.



மேலும் சிங்கள மொழி மூலம் 6,323 பாடசாலைகளும் தமிழ் பாடசாலைகளாக 2,084 உம் முஸ்லிம் பாடசாலைகளாக 942உம் இரு மொழி பாடசாலைகளாக 762 உம், மும்மொழியிலான 35 உயர்தர பாடசாலைகளும் என்ற ரீதியில் அரச பாடசாலைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்படி 2084 தமிழ் பாடசாலைகளுக்குள் 885 பெருந்தோட்டப் பாடசாலைகளும் உள்ளடங்குகின்றன.

10,146 அரச பாடசாலைகளிலும் தற்போது அண்ணளவாக 40 லட்சத்து 50 ஆயிரம் மாணவ மாணவியர்கள் பயின்று வருகின்றனர். இவர்களில் கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு தோற்றுவதற்காக மூன்று லட்சத்து 20 ஆயிரம் மாணவ, மாணவியர் தயாராகி வருகின்றனர்.

இந்நிலையியே, புதிய கல்வி ஆண்டுக்காக அரசாங்கம் மூவாயிரம் கோடி ரூபாவை செலவிட்டு மூன்று கோடியே 20 இலட்சம் பாடப் புத்தகங்களை அச்சிட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் மாணவர்களின் எதிர்காலம் கருதி அரசாங்கம் பெருந்தொகை பணத்தை செலவிட்டு, புதிய பாடப் புத்தகங்களை அச்சிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



அட்டாளைச்சேனை பொது மக்கள் மீன் சந்தை இல்லாமல் பல வருடங்களாக கூடாரங்களுக்குள் மீன் விற்பனை செய்து வந்துள்ளனர். எனவே இதனை கருத்தில் கொண்டு அண்மையில் அட்டாளைச்சேனை பிரதேச சபையில் நிரந்தரமான கட்டடத்தில் மீன் சந்தை அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட போது...

(படம்: திராய்க்கேணி தினகரன் நிருபர்)

### தர்கா நகர் அல்ஹம்ராவில் 125 வருட பூர்த்தி

# அணிக்கு 11 பேர் கொண்ட கிரிக்கட் சுற்றுப்போட்டியில் பலர் பங்கேற்பு

பேருவளை விசேட நிருபர்

தர்கா நகர் அல் ஹம்றா மகா வித்தியாலயத்தின் 125 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு அணிக்கு 11 பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டி பாடசாலையில் கல்வி கற்ற சாதாரண தரப் பரீட்சை எழுதிய பழைய மாணவர்கள் குழுக்களுக்கு இடையில் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் தர்கா நகர் பாக்கிர் மாக்கார் விளையாட்டு மைதானத்தில் வெகு விமரிசையாக நடைபெற்றது. பாடசாலை அதிபர் திருமதி எம்.எப்.எப் பஸ்லியா தலைமையில் பாடசாலை ஆசிரியர்கள், அபிவிருத்தி சங்கம் மற்றும் பழைய மாணவர் சங்கம் இந்த போட்டித் தொடரை ஏற்பாடு செய்திருந்தது.





இறுதி நிகழ்வின் போட்டி ஆரம்ப வைபவத்தில் தர்கா நகர் நஜீப் ஹாஜியார் கல்வி நிலைய ஸ்தாபகர் தேசமான்ய கலாநிதி அல்ஹாஜ் நஜீப் பின் அமீர் ஆலிம் பிரதம அதிதியாக கலந்து கொண்டதோடு இறுதி நிகழ்வில் இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் பிரதி பயிற்றுவிப்பாளர் தர்கா நகரைச் சேர்ந்த நவீட் நவாஸ் கலந்து சிறப்பித்தார்.

1999 ஆம் ஆண்டு அணி மற்றும் 2015 ஆம் ஆண்டு அணிகளுக்கு இடையிலான போட்டியுடன் ஆரம்பமான முதல் சுற்றில் 7 குழுக்களில் 22 அணிகள் பங்கேற்றன. அதனை தொடர்ந்து புள்ளிகள் அடிப்படையில் 8 அணிகள் தெரிவு செய்யப்பட்ட நொக்அவுட் அடிப்படையில் போட்டிகள் நடைபெற்றன. இறுதிப் போட்டிக்கு 2008 ஆம் ஆண்டு அணியும் 2017 ஆம் ஆண்டு அணியும் தெரிவாகின.


## பெறுகை (டென்டர்) அறிவித்தல் - 2023
## நாத்தாண்டிய பிரதேச சபை

### நாத்தாண்டிய, மாரவில, மஹவெவ வார சந்தைகளைக் குத்தகைக்கு விடுதல்

1. நாத்தாண்டிய பிரதேச சபைக்கு உரித்தான நாத்தாண்டிய, மாரவில, மஹவெவ ஆகிய வார சந்தைகளை 2023.04.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்குக் குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.
2. இதற்காக மீளளிக்கப்படும் பிணை வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் செலுத்தி இதற்கான ஆதனப் பட்டியல் மற்றும் நிபந்தனைகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்களை 2023.02.23 முதல் 2023.03.13 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை நாத்தாண்டிய பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
3. 2023.03.14 அன்று மு.ப. 9.30 வரை பெறுகைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அன்றைய தினம் மு.ப. 10.00 இற்கு கேள்விகள் நாத்தாண்டிய பிரதேச சபையின் பிரதான அலுவலகத்தில் திறக்கப்படும். அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சமுகமளித்திருக்கலாம்.
4. கேள்வி விண்ணப்பங்கள் 'செயலாளர், பிரதேச சபை, நாத்தாண்டிய' என்ற முகவரிக்கு கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்க முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது நேரில் ஒப்படைப்பதற்கு முடியும்.
5. கேள்விகளை உள்ளிடும் தபாலுறைகளின் இடது பக்க மேல் மூலையில் '2023 ஆண்டிற்கான கேள்விகளைச் சமர்ப்பித்தல் என்றும் மற்றும் விண்ணப்பிக்கும் ஆதனத்தின் பெயரும் குறிப்பிடப்படல் வேண்டும். ஒவ்வொரு ஆதனத்திற்காகவும் தனித்தனியாக கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள குத்தகைக்காரர்களிற்கு அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு பெறுகைக்கான விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது. மேலும், எந்தவொரு கேள்வியையும் ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை நாத்தாண்டிய பிரதேச சபைக்கு உரித்தாகும்.
7. ஆகக்குறைந்த கேள்விக்கும் குறைவான கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் பெறுகை விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவர்களினதும் மற்றும் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொண்டு கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காத நபர்களினதும் பிணைத் தொகையானது சபைக்கு உரித்தாக்கப்படும்.
8. அலுவலக நேரங்களில் நாத்தாண்டிய பிரதேச சபையின் செயலாளரிடம் இதற்கான மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**சட்டத்தரணி,**
**ரொஷான் நிலன்த பிரனாந்து,**
**தலைவர்,**
**நாத்தாண்டிய பிரதேச சபை.**

2023.02.17ஆம் திகதி
**பிரதேச சபை அலுவலகம்,**
**நாத்தாண்டிய.**
**தொலைபேசி இல. 032 2254276**
**மின்னஞ்சல்: naththandiyaps@yahoo.com**
**தொலை நகல்: 032-2254275**



## இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு

## விலைமனுக்கோரல்

### மைக்ரோசொப்ட் 365 உரிமத் தொகுப்பினை (MICROSOFT 365 LICENSE PACKAGE ) வழங்கல், நிறுவல் மற்றும் புதுப்பித்தல்

இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8 இல் அமைந்துள்ள இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் தொழிநுட்ப பிரிவிற்கான **மைக்ரோசொப்ட் 365 உரிமத் தொகுப்பினை (MICROSOFT 365 LICENSE PACKAGE ) வழங்கல், நிறுவல் மற்றும் புதுப்பித்தல்** சேவையினை வழங்குவதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டும் மனுதாரர்கள் மனு ஆவணங்களை TRCSL நிர்வாகம் மற்றும் மனிதவள பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.5,000.00** கட்டணத்தினை செலுத்தி **2023.03.14** ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் காரியாலய நாட்களில் **மு.ப.09.00 மணி முதல் பி.ப.03.00 மணி** வரை பெற்றுக்கொள்ள முடியும்.

ஆணைக்குழுவின் சிரேஷ்ட கொள்முதல் குழுத்தலைவரினால் தகுதியினைக் கொண்ட மனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

கேள்வி மனுக்களை சரியான முறையில் பூரணப்படுத்தி பிரதியை முத்திரையிடப்பட்ட ஒரு உறையில் இட்டு **2023.03.15 ஆம் திகதி பி.ப.2.00 மணிக்கு** முன்னதாக **தலைவர், சிரேஷ்ட கொள்முதல் பிரிவு, இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு, இல-276, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 8** எனும் முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் அல்லது ஆணைக்குழுவின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ள டென்டர் பெட்டியில் இட வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"மைக்ரோசொப்ட் 365 உரிமத் தொகுப்பினை (MICROSOFT 365 LICENSE PACKAGE) வழங்கல், நிறுவல் மற்றும் புதுப்பித்தல்"** எனக் குறிப்பிடுதல் வேண்டும். மனு ஏற்றுக்கொள்ளல் முடிவுற்ற உடனேயே ஒவ்வொரு மனுக்களாக திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

தலைவர்,
சிரேஷ்ட கொள்முதல் குழு,
இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு
276, எல்விட்டிகல மாவத்தை,
கொழும்பு 8.

# பாணந்துறை பிரதேச; சட்டத்தரணிகள் சங்க தலைவராக அஜித் பெரேரா



(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

பாணந்துறை நீதி பரிபாலன மாவட்டத்தின் சட்டத்தரணிகள் சங்கத்தின்2023 ஆம் வருடத்துக்கான தலைவராக சட்டத்தரணி அஜித் பெரேரா தெரிவாகியுள்ளார். இவர் இரண்டு தசாப்த காலத்துக்கும் மேலாக சிவில் மற்றும் குற்றவியல் வழக்குகள் தொடர்பில் பாணந்துறை மற்றும் களுத்துறை மாவட்ட நீதிமன்றங்களில் ஆஜாராகிவரும் முன்னணி சட்டத்தரணியொருவராவார். இவர் முன்னாள் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமாகவும் பணியாற்றியுள்ளார். பண்டாரகம வேவிட மைத்திரிபால மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற இவர், கொழும்பு ஆனந்தாக் கல்லூரியில் உயர் கல்வியைத் தொடர்ந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

# வவுனியாவில் குளவி கொட்டுக்கு இலக்கான மாணவர் உட்பட ஐவர் வைத்தியசாலையில்

கோவில்குளம் குறூப் நிருபர்

வவுனியா கோவில்குளம் பாடசாலைக்கு அருகாமையில் நேற்று (21) மதியம் காற்றில் கலைந்த குளவி வீதியால் சென்றவர்கள் மீது கொட்டியதால் பாடசாலை சென்ற மாணவர் ஒருவர் உட்பட ஐவர் வவுனியா பொது வைத்திய சாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பாக, தகவல் அறிவிக்கப்பட்டு நோயாளர் காவு வண்டி மூலம் பாதிக்கப்பட்டவர்கள் எடுத்துச் செல்லப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சையின் பின்னர் மாலையில் நேயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். அவ்வீதியால் சென்ற நான்கு பேர் உட்பட பாடசாலைவிட்டு வீடு சென்ற மாணவனுமே இக் குளவிக் கொட்டிற்கு இலக்காகி வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அநுராதபுரம் கல்வி வலயத்திற்குட்பட்ட தேவநம்பிய திஸ்ஸ புர அல் அஸ்ஹர் முஸ்லிம் வித்தியாலயத்தில் 2022ஆம் ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களினுள் 03 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்துள்ளதாக வித்தியாலய அதிபர் எம்.எப்.எம்.நிசாம்தீன் தெரிவித்தார். அதனடிப்படையில் . எம்.எச். பாத்திமா நிசானா 159, எம்.ஆர். அப்துல் றஷாத் 156, எம்.ஆர். பாத்திமா சஹ்றா 142 ஆகியோரையும் நெறிப்படுத்திய ஆசிரியை ஏ. டப்ளியு. சித்தி ஜநோசா உள்ளிட்டோரை படத்தில் காணலாம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்




சுப்பர் போல் 'கேஷ் ப்ளேஷ்' விசேட லொத்தர் அண்மையில் சந்தைக்கு வெளியிடப்பட்டது. நிகழ்வில் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித் குணரத்ன நாரகல தலைமையில் நடைபெற்ற போது...



## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | முகவரி |
|---|---|
| 20 மார்ச் 2023 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 20 மார்ச் 2023 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 20 மார்ச் 2023 | இல. 134, அனகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 21 மார்ச் 2023 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 22 மார்ச் 2023 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 23/27 மார்ச் 2023 | இல. 44, ஹில்ஸ் ஸ்ட்ரீட், கண்டி. |
| 28/29 மார்ச் 2023 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி. |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க சட்டத்தின் 16(2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்**

## மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் கொள்ளளவை மேம்படுத்தல் -(1ஆம் கட்டம் விரிவாக்கம்)

## சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை

1988ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க மற்றும் 2011ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981ஆம் ஆண்டின் 57ஆம் இலக்க கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ சட்டத்தின் 16(1)ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல, பெலவத்த, புதிய பாராளுமன்ற வீதி, இல. 754 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையினால் சமர்ப்பிக்கப்படும் மன்னார் தம்பவனி காற்றுச் சக்தி செயற்றிட்டத்தின் கொள்ளளவை மேம்படுத்துவதற்கான 1ஆம் கட்ட விரிவாக்கல் செயற்றிட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2023.02 22.ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

01 நகர அபிவிருத்தி மற்றும் வீட்டு அமைச்சு - 17வது மாடி, “சுகுறுபாய” பத்தரமுல்ல.
02 கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் - புதிய செயலகம், 4வது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10.
03 மத்திய சுற்றாடல் அதிகார சபை - இல. 104, “பரிசர பியச” டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல.
04 வனவிலங்குகள் பாதுகாப்புத் திணைக்களம்- இல. 811/A ஜயந்திபுர மாவத்தை, பத்தரமுல்ல.
05 மாவட்ட செயலாளர் அலுவலகம் - மன்னார்
06 பிரதேச செயலாளர் அலுவலகம் - வெல்ல வீதி, மன்னர்.
07 மாநகர சபை - மன்னார்
08 பிரதேச செயலகம் - மன்னார்
09 கடற்றொழில், நீரியல் வளங்கள் திணைக்களம் - மாவட்ட அலுவலகம், மன்னார்

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2023.02.22. ஆந் திகதி முதல் 30 நாட்களுக்குள் கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

**பொறியிலாளர் ஆர்.ஏ.எஸ். ரணவக்க**
**பணிப்பாளர் நாயகம்**
**கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம்,**
**4வது மாடி, புதிய செயலகம், மாளிகாவத்தை,**
**கொழும்பு 10**

**தொலைபேசி இல. 011-2449754, 011-2387922, 011-2449197**
**தொலைநகல் இல. 011-2438005, 011-2472623.**

# கேள்விக்கான அழைப்பு

## மாகாண விவசாயத் திணைக்களம் - சப்ரகமுவ மாகாணம்

## (பெரசூட் தட்டு கொள்வனவு செய்தல்)

சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு பெரசூட் தட்டுக்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | உருப்படி | அளவு | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் ரூ. | கேள்விப்பிணை முறித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 01 | பெரசூட் தட்டு | 42240 | 1000.00 | 53,000.00 |

1. இது பற்றிய ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்திலிருந்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ள முடிவதுடன் (தொ.பே. இலக்கம் - 045-2222356) 2023.02.23 முதல் 2023.03.16 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை கேள்வி ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்து கீழ்க்காணும் முகவரிக்கு எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து மீளளிக்கப்படாத கட்டணத்தை காசாகச் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பித்த பின்னர் கேள்வி ஆவணத் தொகுதியை கொள்வனவு செய்யலாம்.
2. சகல கேள்விதாரர்களும் பெறுகை நிப்நதனைகளுக்கு அமைவாக குறித்த பெறுமதியுடைய மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து ‘பணிப்பாளர், சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களம், முவகம, இரத்தினபுரி’ பெயரில் பெற்றுக் கொண்ட (Unconditional, On Demand) கேள்விப் பிணைமுறியை (வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கு அமைவாக) அல்லது ‘மாகாண விவசாயப் பணிப்பாளர், சப்ரகமுவ’ இற்கு காசாகச் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கேள்வி கேள்விப் பிணைமுறியாக பெறுகை ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களால் சமர்ப்பிக்கப்படும். கேள்விப் பிணைமுறி 2023.03.17 முதல் 2023.07.17 வரை செல்லுபடியாதல் வேண்டும். குறித்த காலம்/ பெறுமதி பிழையான மற்றும் மாதிரிப் பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காத கேள்விப் பிணை முறிகள் நிராகரிக்கப்படும். கேள்விப் பிணை முறியில் குறித்த கேள்வியின் வேலையைக் குறிப்பிடுதல் வேண்டும்.
3. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது எம்மால் வழங்கப்படும் கேள்விப் படிவங்களை நன்றாக வாசித்துப் பார்த்து அதற்கு அமைவாக கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். குறித்த சகல நிபந்தனைகள் மற்றும் விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் வழங்கப்படும்.
4. பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் இரு பிரதிகளுடன் 2023.03.17 மு.ப. 11.00 இற்கு முன் ‘விவசாயத் திணைக்கள பெறுகைக்குழு’விற்கு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது திணைக்கள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அத்துடன் கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கேள்விகள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் நிராகரித்தல் அல்லது கேள்வியின் ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளும் உரிமை பெறுகைக் குழுவின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாகாண விவசாயத்திணைக்களம்,**
**முவகம, இரத்தினபுரி.**
**045-2222356**

2023.02.23

ශ්‍රී/ස ලංකා සීනි (පෞද්ගලික) සමාගම
வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்
LANKA SUGAR COMPANY (PRIVATE) LIMITED

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம்**

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

**சிறு ஏற்றுமதி பயிர்த் தோட்ட அபிவிருத்திப் பிரிவு**

**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**

## பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக Side/Top Roller Bearing இன் வழங்கலுக்காக சர்வதேச போட்டிரீதியான விலைமனு - PR-12532

இலங்கை, புத்தலவில் அமைந்துள்ள பெலவத்த சீனி தொழிற்சாலைக்காக Side/Top Roller Bearing இன் வழங்கலுக்கு ஆர்வமுடைய தரப்புகளிடம் இருந்து வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இத்தால் கோரப்படுகின்றன.

1. கீழ் குறிப்பிடப்பட்ட வங்கிக் கணக்குக்கு நேரடியாக பணம் அனுப்பும் வழி மூலம் 12,500.00 இலங்கை ரூபா அல்லது 35 அமெரிக்க டொலர் மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி 2023 ஏப்ரல் 03 ஆம் திகதி வரை வேலை நாட்களில் இலங்கை நேரப்படி 9.00 மணி தொடக்கம் 15.00 மணி வரை வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை விலைமனுதாரர்களால் கொள்வனவு செய்ய முடியும். விலைமனு ஆவணங்களை லங்கா சீனி இணையதளம் (www.Lankasugar.lk) அல்லது பெருந்தோட்ட அமைச்சின் இணையதளம் (www.plantationindustries.gov.lk) அல்லது வெளிவிவகார அமைச்சின் இணையதளத்தில் (www.mfa.gov.lk) இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் என்பதோடு விலைமனுவுடன் சேர்த்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| விபரம் | **LKR** வங்கி கணக்கு |
| வங்கியின் பெயர் | இலங்கை வங்கி |
| கிளை | மிலகிரிய |
| கணக்கின் பெயர் | வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம் |
| கணக்கு இலக்கம் | 73927950 |
| Swift Code | BCEYLKLX |

2. தேவையான உருப்படிகள்:
   01 Side Roller Bearing (DN MH 423) 06
   02 Top Roller Bearing (DN- 170 & 171) 04
3. விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களுடன் மீளளிக்கப்படாத வைப்பு ரசீதை இணைத்தல் வேண்டும். அவ்வாறு இணைக்கத் தவறினால் விலைமனு நிராகரிக்கப்படும்.
4. விலைமனுக்களை 2023 ஏப்ரல் 04 ஆம் திகதி இலங்கை நேரப்படி 14.00 மணி தாமதிக்காது தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், கைகளால் கொண்டுவந்து சேர்ப்பதன் மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பெலவத்த சீனித் தொழிற்சாலைக்காக Side/Top Roller Bearing இன் வழங்கலுக்கான கேள்விமனு” என்று தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதிக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.
5. அனைத்து விலைமனுக்களும் விலைமனுக்களை திறக்கும் திகதியில் இருந்து 119 நாட்கள் வரை செல்லுபடியானதாக 1,015.00 அமெரிக்க டொலர் அல்லது 375,000.00 இ.ரூபாவின் பணமாக்கக்கூடிய திரும்பப் பெற முடியாத மற்றும் நிபந்தனையற்ற விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.
6. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - பெறுகை முகாமையாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் (தொ. +94 11 258 4184, கைபேசி + 94 77 010 3359, தொலைநகல் +94 11 2500674, (மின்னஞ்சல்: sapumal@lscl.lk).

**தலைவர் - திணைக்கள பெறுகைக் குழு**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்**
**இல. 27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04, இலங்கை**

# பெறுகை அறிவித்தல்

## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## Tender for the supply of Pharmaceuticals, Surgical Consumables and Dressing Items.

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் 2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் பின்வரும் Pharmaceuticals, Surgical Consumables and Dressing Items ஆகியவற்றை வழங்குவதற்காக நுகேகொட, தளபத்பிட்டிய, ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரையிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| Tender No. | Item | Qty | Non-refundable Deposit (Rs) |
|---|---|---|---|
| Q 138/23 | Suture material for Gyn & Obs | 01 Lot | Rs. 3,000.00 |
| Q 139/23 | Surgical Gauze Absorbent (cotton) 36”X100m Roll | 2,400 Rolls | Rs. 3,000.00 |
| Q 140/23 | Drugs – Cardiovascular System – IV (Enoxaparine 40mg & 60mg Injection | 40mg – 10,900 Vials<br>60mg – 13,100 Vials | Rs. 3,000.00 |
| Q141/23 | Drugs – Cardiovascular System – VI (Tenecteplase 40mg injection) | 130 Vials | Rs. 3,000.00 |
| Q142/23 | Drugs – Pantoprazole 40mg injection | 45,000 Vials | Rs. 3,000.00 |
| Q143/23 | Drugs – Meropenam Injection | 500mg – 15,000 Vials<br>1g – 2,200 Vials | Rs. 3,000.00 |
| Q144/23 | Drugs – used in Anaesthesia-1 (Noradrenalin 2mg/ml Injection | 36,000 Vials | Rs. 3,000.00 |
| Q145/23 | Drugs – used in Anaesthesia-1 (Atracurium Besilate 25mg/2.5ml injection) | 32,000 Vials | Rs. 3,000.00 |

பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து எந்தவொரு ஆர்வமும் தகுதியுமுள்ள முகவர்கள் அல்லது உற்பத்தியாளரொருவரின் சார்பாக பெயர் குறிப்பிடப்படுபவர்கள் அல்லது கேள்விதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை இரு பிரதிகளில் கொள்வனவு செய்யலாம்.

(I) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்று.
(II) ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் கணக்காளருக்கு மேலே கூறப்பட்டுள்ளவாறான மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
(III) வியாபார பதிவின் சான்றிதழின் நிழற்படப்பிரதியொன்று.

2. பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 8 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழும் முன்வைப்புடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. விலைமனுக்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வைத்தியசாலையினால் வழங்கப்படும் படிவங்களைத் தவிர வேறேதாவது படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.
4. வைத்தியசாலையின் வழங்கல் அலுவலகத்தில் கேள்வி ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
5. 2023.02.23 ஆம் திகதியிலிருந்து 2023.03.15 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் வழங்கல்கள் அலுவலகத்திலிருந்து கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. 2023.03.16 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் விரிவுரை மண்டபத்தில் கேள்விகள் மூடப்பட்டு திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் கேள்விதாரரின் பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.
7. எந்தவொரு அல்லது அனைத்து கேள்விகளையும்/ கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் நிராகரிப்பதற்கும் கேள்வியின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக்கொள்வதற்கான சுயஉரிமையை திணைக்கள பெறுகைக்குழுத் தலைவர் கொண்டுள்ளார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**



CSIAP THE WORLD BANK

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு**

## கமத்தொழில் அமைச்சு

## தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல்

## காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம் (CSIAP)

**செயற்றிட்ட இல.: P163742**

1. இலங்கை சனநாயக சோஷலிச குடியரசானது உலக வங்கி - சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கமத்தொழில் அமைச்சின் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் கிரயச் செலவிற்காக கடனொன்றைப் பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பாகமொன்றை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதியான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசித்துள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகுதியும் தகைமையுமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விவசாய அமைச்சின் கால நிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டத்தின் (CSIAP) சார்பாக, சிறிய செயற்றிட்ட பெறுகைக் குழுத்தலைவர் (வடமத்திய மாகாணம்) முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| இல. | ஒப்பந்த இல. | வேலையின் விபரம் | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா (மில்லியன்) | CIDA பதிவு | மீளளிக்கப் படாத கட்டணம் (இல. ரூபா) | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி (LKR) மற்றும் செல்லுபடித் திகதி |
|---|---|---|---|---|---|---|
| 01 | LK-MOA-336907-CW-RFB/NCP/DPDO/Rehb.T(08)/2023/01/23/15 | பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவு, ஹிங்குராக்கொட கமநல சேவை நிலைய பிரதேசம், மேல் யான்ஓயா அடுக்கையிலுள்ள தெஹியத்தவல குளம், உனகொல்லாவ குளம், மொரகஸ்வெவ மற்றும் குடா ஹத்த குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 21.06 | C 6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 210,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 02 | LK-MOA-336912-CW-RFB/NCP/DPDO/Rehb.T(20) 2023/ 03/23/17 | பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவு, ஹிங்குராக்கொட கமநல சேவை நிலைய பிரதேசம், மேல் யான்ஓயா அடுக்கையிலுள்ள திம்பிரிகஸ்வெவ, கலென்பிந்துனுவெவ மற்றும் நிக்கபிட்டிய குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 20.31 | C 6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 203,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 03 | LK-MOA-337410-CW-RFB/NCP/DPDO/Rehb.T(38)/2023/08/23/22 | அனுராதபுரம் மாவட்டத்திள்ள கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு, கோன்வெவ கமநல சேவை நிலைய பிரதேசம், 214- டிக்கன்பொத்தன கிராம சேவையாளர் பிரிவு, கொக்-எப அடுக்கையிள்ள கட்டுகளியாவவெவ குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 16.38 | C 6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 164,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 04 | LK-MOA-336918-CW-RFB/NCP/DPDO/Rehb.T(40)/2023/09/23/23 | பொலன்னறுவை மாவட்டத்திலுள்ள ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவு, ஹிங்குராக்கொட கமநல சேவை நிலைய பிரதேசம், மேல் யான்ஓயா அடுக்கையிலுள்ள புரான இலுக் வெவ, அங்குலான வெவ மற்றும் கல்லிந்த குடா வெவயின் புனரமைப்பு வேலைகள் | 23.29 | C 6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 232,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 05 | LK-MOA-337451-CW-RFB/NCP/DPDO/Rehb.T(43)/2023/11/23/25 | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு, கோன்வெவ கமநல சேவை நிலைய பிரதேசம், 214 - டிக்கன்பொத்தன கிராம சேவையாளர் பிரிவு, தோரவெவ மற்றும் தலகொலவெவ குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 32.34 | C 5 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 323,000.00 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 06 | LK-MOA-337411-CW-RFB/NCP/DPDO/Rehb.T(49)/2023/12/23/26 | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு, கோன்வெவ கமநல சேவை நிலைய பிரதேசம், 214 - டிக்கன்பொத்தன கிராம சேவையாளர் பிரிவு, நிக்கவெவ மற்றும் இஹலவெவ குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 28.68 | C 5 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 286,000.00 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 07 | LK-MOA-249199-CW-RFQ/23/1 | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள புளியன்கடவல கிராமத்தின் பண்டிதயாகே வெவ குளத்தின் புனரமைப்பு வேலைகள் | 16.95 | C 6 அல்லது அதற்கு மேல் நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகால மைப்பு | 12,500.00 | 170,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 08 | LK-MOA-309668-CW-RFB/NCP/DPDO/Machinery yards (10)/ 2022/13/23/03 | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கலென்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் பிரிவு, கலென்பிந்துனுவெவ கமநல சேவை நிலையம் மற்றும் ஹொரவப்பொத்தான பிரதேச செயலாளர் பிரிவு, ஹொரவப்பொத்தான கமநல சேவை நிலையம் மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரிவு, கோன்வெவ கமநல சேவை நிலையத்தில் இயந்திராதிகள் முற்றவெளியை நிர்மாணித்தல் | 19.13 | C 6 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 12,500.00 | 196,000.00 2023 ஜுன் 28ஆம் திகதி வரை |
| 09 | LK-MOA-309668-CW-RFB/NCP/DPDO/Machinery yards (10)/2022/13/23/03 | CSIAP யின் கீழ் வட மத்திய மாகாணத்திலுள்ள பொலன்னறுவை மாவட்டத்தில் ஹிங்குரக்கொட கமநல சேவை நிலையம், அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள தந்திரிமலை கமநல சேவை நிலையம் மற்றும் ஆலயபத்துவ கமநல சேவை நிலையம், ரனோராவ கமநல சேவை நிலையம், பேமதுவ கமநல சேவை நிலையத்தில் இயந்திராதிகள் முற்றவெளியை நிர்மாணித்தல் | 32.82 | C 5 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 12,500.00 | 329,000.00 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |
| 10 | LK-MOA-280171-CW-RFB/NCP/DPDO/ Sec. Bidg(125)/2022/009/23/01 | அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹொரவபொத்தான பிரதேச செயலாளர் பிரிவு, பறங்கியாவாடிய கிராமம், இயந்திராதிகள் ஹப்பிற்கு கட்டிடங்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புகளை நிர்மாணித்தல் | 35.82 | C 5 அல்லது அதற்கு மேல் கட்டிடங்கள் | 12,500.00 | 359,000.00 2023 ஆகஸ்ட் 29ஆம் திகதி வரை |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் விலைமனுக்கோரல் நடைமுறைப்படுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அனுராதபுரம், இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம், காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 025-2054424/34) மற்றும் அதே இடத்தில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையான வேலை நாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. ஒப்பந்தத்தை வழங்கப் பெறுவதற்குத் தகைமை கொண்ட வெற்றிகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெற்றிருத்தல் கூடாது என்பதுடன் விலைமனு ஆவணத்திலுள்ள தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும் சித்திகரமான விலைமனுதாரர் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதி வரை செல்லுபடியாகக் கூடிய நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையின் (CIDA) மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசனம் மற்றும் கால்வாய் வடிகாலமைப்பு / கட்டிடங்கள் துறையில் மேற்குறிப்பிடப்பட்ட தரம் மற்றும் அதற்கு மேற்பட்ட தரப் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு விலைகளைக் கோரலாம் ஆனால் ஒப்பந்தக்காரர்கள் நிதியியல் மற்றும் ஏனைய கொள்ளளவு வரையறைகளின் பிரகாரம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
6. ஏதேனும் SOE (அரசுரிமை தொழில்முயற்சி - சபை, கூட்டுத்தாபனம், பணியகம் முதலியன) மேற்கூறிய ஒப்பந்தத்திற்கு விலைக்கோரினால் உலக வங்கியின் IPF கடன் வாங்குபவர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளின் 3.23(b) பிரிவை அவர்கள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
7. மேற்படி அட்டவணையில் காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை (தொகைக்கு மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையைப் பார்க்கவும்) 2023 பெப்ரவரி 22ஆம் திகதி முதல் 2023 மார்ச் 14ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரையில் மற்றும் 2023 மார்ச் 15ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையில் ரொக்கப் பணமாகச் செலுத்திய பின்னர், மேற்படி 4ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள முகவரியிலுள்ள பிரதி செயற்றிட்டப் பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை தகுதியுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம்.
8. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்றும் மற்றும் வேலைத் தள விஜயமும் 2023 மார்ச் 02ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு அனுராதபுரம், கொடகே மாவத்தை, மாவட்ட அலுவலகம், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கேட்போர்கூடத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வளமுள்ள விலைமனுதாரர்கள் இயைபுடைய அதிகாரிகளின் உதவியுடன் வேலைத் தளத்தை தங்கள் சொந்த செலவில் பரீட்சித்துப் பார்க்கலாம்.
9. விலைமனுக்களுடன் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ள விபரத்தின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் தரப்பட்டுள்ள தொகைக்கான நிபந்தனையற்ற விலைக்கோரல் உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் உத்தரவாதமற்ற எந்தவொரு விலைமனுவும் பதிலளிக்கப்படாத விலைமனுவாகக் கருதப்படும் என்பதுடன் எவ்வித விசாரணைகளுமின்றி நிராகரிக்கப்படும்.
10. விலைமனு ஆவணத்தின் சகல பக்கங்களும் விலைமனுதாரரால் கையொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரை பொறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. விலைமனுக்கள் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு பின் அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கம் என்பன குறிக்கப்படுதல் வேண்டும்.
12. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 2023 மார்ச் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு (வடமத்திய மாகாணம்), காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம், பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர் அலுவலகம் (வடமத்திய மாகாணம்), இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, அனுராதபுரம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.
13. கிடைக்கப்பெற்ற விலைமனுக்கள் 2023 மார்ச் 15ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**தலைவர்,**
**சிறு செயற்றிட்டப் பெறுகைக் குழு (வடமத்திய மாகாணம்),**
**காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாய செயற்றிட்டம்,**
**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளரின் அலுவலகம் (வடமத்திய மாகாணம்),**
**இல. 596/15, பண்டாரநாயக்க மாவத்தை, அனுராதபுரம்.**
2023.02.22ஆம் திகதி.

# சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி மீது எடுக்கப்பட்ட ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கை பற்றி பொதுமக்களுக்கான அறிவித்தல்

2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் 37(3) ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம், 2022 திசெம்பர் 28ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சிக்கு வழங்கப்பட்ட நிதித்தொழில் உரிமத்தினை இரத்துச்செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை தீர்மானித்துள்ளது. அதற்கமைய, நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித்தொழிலில் ஈடுபடுவதற்கு 2022 திசெம்பர் 28 தொடக்கம் நடைமுறைக்குவரும் வகையில் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி அனுமதிக்கப்படாது.

மேலும், 2000ஆம் ஆண்டின் 56ஆம் இலக்க நிதிக் குத்தகைக்குவிடுதல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பதிவுசெய்யப்பட்ட நிதிக் குத்தகைக்குவிடும் நிறுவனமொன்றாக சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் பதிவுச் சான்றிதழை இரத்துச்செய்வதற்கு இலங்கை மத்திய வங்கியின் வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களப் பணிப்பாளர் தீர்மானித்துள்ளார்.

"வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் துறையினை ஒருங்கிணைப்பதற்கான முதன்மைத் திட்டத்தின்" பணிப்புரைகளுக்கமைவாக சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் எஞ்சியுள்ள வைப்பாளர்களுக்கு மீள்கொடுப்பனவு செய்வதற்கு எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சிக்கு (அப்போதைய எஸ்எம்பீ லீசிங் பிஎல்சி) மூலம் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்பின் நோக்கில், சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் கோரப்படாத வைப்புப் பொறுப்பானது தொடர்புடைய வைப்பாளர் தகவல்கள் மற்றும் சொத்துக்கள் பெறுமதி என்பவற்றுடன் சேர்த்து எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சிக்கு மாற்றல்செய்யப்படும்.

மேலும், இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக வைப்பாளர் ஒருவருக்கு ரூ.1,100,000 கொண்ட உயர்ந்தபட்சத் தொகை வரையில் சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் தீர்ப்பனவு செய்யப்படாதுள்ள காப்புறுதிசெய்யப்பட்ட வைப்பாளர்களுக்கு ஈடளிப்பினைச் செலுத்துவதற்கு இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டம் காலக்கிரமத்தில் அவசியமான நடவடிக்கைகளை எடுக்கும். கோரப்படாத வைப்பு எஸ்எம்பீ பினான்ஸ் பிஎல்சிக்கு மாற்றல்செய்யப்படுவதுடன் இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கமைவாக இதுவரையிலும் கோரப்படாதுள்ள இலங்கை வைப்புக் காப்புறுதி திரவத்தன்மை உதவித் திட்டத்தினூடாக ஈடளிப்புக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் போது சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சியின் ஒட்டுமொத்த வைப்புப் பொறுப்பும் தீர்ப்பனவுசெய்யப்படும்.

மேலதிக விசாரணைகளுக்கு:

| நிறுவனம் | நோக்கம் | தொலைபேசி இலக்கங்கள் | மின்னஞ்சல் |
|---|---|---|---|
| இலங்கை மத்திய வங்கி - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம் | உரிமத்தை இரத்துச்செய்தல் | 011 2477504 | snbfi_query@cbsl.lk |
| இலங்கை மத்திய வங்கி - தீர்மானங்கள் மற்றும் நடைமுறைப்படுத்தல் திணைக்களம் | வைப்புக் காப்புறுதி திட்டத்தின் கீழ் இழப்பீட்டுக் கொடுப்பனவு | 011 2398788 | dred@cbsl.lk |
| சுவர்ணமஹால் பினான்ஸ்சியல் சேர்விஸஸ் பிஎல்சி | கோரப்படாத வைப்புகள் தொடர்பிலான கருமங்கள் | 011 7534800 | info@sfs.lk |

பணிப்பாளர்,
வங்கியல்லா நிதியியல் நிறுவனங்கள் மேற்பார்வைத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
தொலைபேசி: 0094 11 2477504 தொலைநகல்: 0094 11 2477738 மின்னஞ்சல்: dsnbfi@cbsl.lk

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

# 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்ட விழா – 2023

## 75 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு நடாத்தப்படும் ஓவியப் போட்டி மற்றும் புதிய பாடல் ஆக்கப் போட்டிக்காக படைப்புகள் கோரப்படுகின்றன

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் கழகத்தின் அரச கட்புலக் கலை ஆலோசனைக் குழு மற்றும் அரச இசை ஆலோசனைக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்கின்ற மேற்படி போட்டித் தொடரானது இளம் படைப்பாளர்களை மையமாகக் கொண்டு வயதெல்லை 18 - 35 வரையிலான வயதின் கீழ் இலங்கை பிரஜைகளிடமிருந்து ஆக்கப்பூர்வமான படைப்புகள் கோரப்படுகின்றன.

மேற்படி போட்டிக்கு விண்ணப்பிப்பதற்காக அனைத்து விண்ணப்பதாரிகளும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி 2023 மார்ச் 31ஆம் திகதி பி.ப. 4.00 மணிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மேம்பாட்டு பிரிவிற்கு நேரடியாக கையளிக்கலாம் அல்லது "மேம்பாட்டு பிரிவு, கலாசார அலுவல்கள் திணைக்களம், 8ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு தபால் மூலம் அனுப்புதவற்கு நடவடிக்கை எடுக்கவும்.

01. ஓவிய போட்டிக்காக உங்களால் சமர்ப்பிக்கப்படுகின்ற படைப்புகள் இறுவெட்டில் பதிவு செய்து (300dpi resolution) கொண்டதாக அனுப்புவதற்கு அல்லது நேரடியாக செய்து கையளிக்க முடியும். (உங்களால் அனுப்பப்படும் ஓவியப் படைப்புகள் கொண்ட கடித உறையின் இடபக்க மேல் மூலையில் "75 ஆவது சுதந்திர தின கொண்டாட்ட ஓவியப் போட்டி -2023" என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்)

02. புதிய பாடல் படைப்பு போட்டிக்காக படைப்புகளை இறுவெட்டில் (CD) Wave Format இல் பதிவு செய்து தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ கையளிக்க முடியும். (உங்களால் அனுப்பப்படும் ஓவியப் படைப்புக்கள் கொண்ட கடித உறையின் இடபக்க மேல் மூலையில் "75 ஆவது சுதந்திர தின கொண்டாட்ட புதிய பாடல் ஆக்கப் போட்டி 2023" என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்)

அனைத்து படைப்புக்களும் "75வது சுதந்திர தின கொண்டாட்டத்தில் இருந்து 100வது சுதந்திர கொண்டாட்டம் வரை, சுதந்திர இலங்கை இளைஞர்களின் எதிர்கால தொலைநோக்கு என்ற தலைப்பிற்கு பொருத்தமான புதிய பாடல் படைபுகள் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும்.

விண்ணப்பப்படிவம் அனைத்து மாவட்ட செயலக, பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஊடாக அல்லது கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மேம்பாட்டு பிரிவு அல்லது www.culturaldept.gov.lk என்ற இணையதள முகவரியில் அல்லது Department of Cultural Affairs என்ற Face book பக்கத்தில் இருந்து குறித்த சுற்றுநிருபம் மற்றும் விண்ணப்பப்படிவம் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.


**விபரங்களுக்கு:**
**இசைப் பிரிவு : 011-2872036**
**ஓவியப் பிரிவு : 011-2882551**

**பாக்கியா சி. கடுதெணிய**
**கலாசார அலுவல்கள் பணிப்பாளர் (ப.க.)**
**கலாசார அலுவல்கள் திணைக்களம்**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz it's what you want Classified


For 15 Words Rs. 500/-
* Cost of each additional word Rs. 20/-
Ramani - 077 7 278 948 / Gayani - 011 2 429 342/ 343 / Piyumi - 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

# சிறு விளம்பரம்



## மோட்டார் வாகனங்கள்

**107 டொயோட்டா கார்கள்** விற்பனைக்கு

WP KR-6910 Toyota, 2010, car கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 0714542 958. 011538

**119 பஸ்கள், லொறிகள்** விற்பனைக்கு

WP LJ-1020 Toyota, 2004, lorry கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே 071 4542 958. 011534

**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP AAK-2936 Piaggio, 2013, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 011537

WP AAK- 6976 Bajaj, 2 013, NC YO-8227 Ba jaj, 2011, WP AA X- 8965 Bajaj, 2 015, threewheel கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு03. தொ.பே. 0711210 810. 011536



Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

# வ/ப அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கும் மற்றும் சேமிப்பு சங்கம்

## பணிப்பாளர் சபையை தேர்ந்தெடுக்கும் விசேட மகா சபைக்கூட்டம்

வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கும் மற்றும் சேமிப்புச் சங்கத்தின் அனுமதிக்கப்பட்ட இடைக்கால யாப்பின் 26(V) பிரிவின் விதிமுறைகளுக்கு அமைவாக கீழ்க்காணும் விடயங்களுக்காக விசேட மகா சபைக் கூட்டம் 2023.03.04 மு.ப. 8.00 இற்கு நிர்வாக சபைத் தலைவரின் தலைமையில் மஹரகம ஜனாதிபதி கல்லூரியில் நடைபெறுமென சகல அங்கத்தவர்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

❖ **அன்றைய தினம் மகா சபைக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல் பின்வருமாறு அமையும்.**

1. மு.ப. 8.00 முதல் மு.ப. 8.30 வரை - அங்கத்தவர்கள் பதிவு
2. மு.ப. 8.30 முதல் மு.ப. 8.35 வரை - கூட்டத்தை ஆரம்பித்தல் மத அனுஷ்டானங்கள்
3. மு.ப. 8.35 முதல் மு.ப. 8.40 வரை - கூட்டத்தின் கோரல் அறிவித்தலை சமர்ப்பித்தல் நிர்வாக சபை செயலாளர்
4. மு.ப. 8.40 முதல் மு.ப. 8.45 வரை - சபையை வரவேற்றல் - நிர்வாக சபைத் தலைவர்
5. மு.ப. 8.45 முதல் மு.ப. 9.00 வரை - 2022.07.23ம் திகதி மகா சபைக் கூட்ட அறிக்கையை சமர்ப்பித்தல், சபையில் வழிமொழிதல், சபையின் நடவடிக்கைகளை முடிவுறுத்தல்
6. மு.ப. 9.00 முதல் மு.ப. 9.30 வரை - வாக்கெடுப்பு நடவடிக்கைகளுக்காக மண்டபத்தை தயார்படுத்தல்
7. மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 வரை - வாக்களித்தல் (வாக்கெடுப்பு விடயங்கள்)
8. பி.ப. 4.00 முதல் பி.ப. 4.30 வரைப - வாக்கு எண்ணுதலை தயார்ப்படுத்தல்
9. பி.ப. 4.00 முதல் - வாக்கு எண்ணுதலை மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல்
10. நிறைவு.

❖ 2023.01.13 மற்றும் 14ம் திகதிகளில் ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களின் பிரகாரம் எதிர்வரும் 03 வருட பதவிக் காலத்திற்காக தலைவர், மூன்று உப தலைவர்கள், பொருளாளர் மற்றும் 18 - 35 வயதிற்கிடைப்பட்ட இருவர் அடங்கிய இருபத்தியொரு (21) பேர் கொண்ட பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் இரகசிய வாக்கெடுப்பு மூலம் தேர்ந்தெடுத்தல் (மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 வரை மட்டுமே வாக்களிக்கலாம்.)

❖ அன்றைய தினம் வாக்கெடுப்பின் போது வாக்களிப்பதற்கு அதிகாரமளிக்கப்படுவது 2021.06.23ம் திகதிக்கு வாக்குரிமையுள்ள செல்லுபடியாகும் அங்கத்தவர் பெயர் பட்டியலில் பெயர் குறிப்பிடப்படும் அங்கத்தவர்களுக்கு மட்டுமே.

❖ சகல அங்கத்தவர்களும் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக கீழ்க்காணுபவற்றில் ஒன்றை எடுத்துக்கொண்டு வருகை தரல் வேண்டும்.

- i தேசிய அடையாள அட்டை
- ii. கடவுச்சீட்டு
- iii. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்
- iv. செல்லுபடியாகும் சேவை அடையாள அட்டை

(உங்களது அங்கத்தவர் பாஸ் புத்தகத்தையும் எடுத்து வருவது வாக்களிப்பதற்கு இலகுவாகும்)

❖ அத்தினம் வாக்கெடுப்பு விடயங்களை நிறைவேற்றுதல் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் நியமிக்கப்பட்ட அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும்.

**பி.ஏ. சரத் ஆனந்த -**
**நிர்வாக சபை செயலாளர்**
(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)
**வரையறுக்கப்பட்ட அரச சேவை கூட்டுறவு கடன் வழங்கும் மற்றும் சேமிப்பு சங்கம்,**
**இல. 19, செர்டர்ஸ் பிளேஸ், கொழும்பு-12.**
**தொ.பே. 011-2327640, 011-2327643, 011-2327649.**

❖ **கவனிக்கவும் - பிரயாண வழி:**

i. ஹைலெவல் வீதியில் மஹரகம இலங்கை வங்கியைத் தாண்டி மஹரகம மஹாமேக பிளேஸ் பாதையினூடாக பிரவேசிக்கலாம்.

ii. **வாகனங்களுக்காக பிரயாண வழி**

மஹாமேகராமய பாதையில் மஹரகம ஜனாதிபதி கல்லூரியின் விளையாட்டு மைதானத்திற்கு பிரவேசித்து மண்டபத்திற்கு பிரவேசிப்பதற்காக மஹாமேக பிளேஸ் பாதையில் பிரவேசியுங்கள்.

NSB

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

கேள்வி இல.: **NSB/PT/ITE/2023/05**

**UPGRADING OF EXISTING FIREWALL SYSTEM WITH REDUNDANCY TO THE NATIONAL SAVINGS BANK**

Upgrade of Firewall System என்ற செயற்பாட்டிற்காக புகழ்வாய்ந்த முதன்மையான தயாரிப்பாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தரஅங்கீகாரம் பெற்ற இலங்கையிலுள்ள உள்ளூர் முகவர்கள் ஆகியோரிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| பெறுகையின் விளக்கம் | **Upgrading of existing Firewall System with Redundancy.** |
| பெறுகையின் முறைமை | தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் |
| ஏற்புடையதான மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் | 30,000 ரூபா |
| சமர்ப்பிக்க வேண்டிய விலைமனு உத்தரவாத பெறுமதி | 1,500,000 ரூபா |
| விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம் | 2023.03.14 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு |
| கேள்வியை மூடும் திகதி மற்றும் நேரம் | 2023.03.15 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| விலைமனு முன்னோடிக் கூட்டத் திகதி மற்றும் நேரம் | 2023.03.03 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |

1. முகவரொருவராக அல்லது உபமுகவராக, பிரதிநிதியாக அல்லது எந்தவொரு கேள்விதாரருக்கு அல்லது பெயர் குறிப்பிட்டவருக்காக அல்லது அவரின் சார்பாக செயற்படுபவர் கேள்விக்கு விண்ணப்பிப்பதற்கு முன்னராகவும் கேள்வியை வழங்கிய பின்னரும் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்வது கட்டாயமானதொன்றாகும்.
2. கொழும்பு-03, காலி வீதி, 255 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் படிவங்கள் 2023.02.22 ஆம் திகதியிலிருந்து 2023.03.14 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எழுத்து மூலமான கோரிக்கையொன்றின் மூலமாக வழங்கப்படும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகவும் மேலே சுட்டிக் காட்டியவாறு கேள்விக்கு உரித்தான பெறுமதிக்கான வங்கி உத்தரவாதம்/ விலைமனு பிணையத்துடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டுமெனவும் இந்த உத்தரவாதமானது வர்த்தக வங்கியொன்றிலிருந்து வழங்கப்பட்டதாகவும் ஆகக் குறைந்த கால எல்லையாகிய 120 நாட்காட்டி நாட்களுக்கு கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் குறிப்பிட்டுள்ள திகதியன்று மு.ப. 10 மணிக்கு அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன் மு.ப. 10 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. தேசிய சேமிப்பு வங்கியானது எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவொன்றின் பகுதியொன்றையும் எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை கொண்டுள்ளது.

மேலதிக விபரங்களை வழங்கலுக்கான சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர் - கூட்டாண்மை பெறுகைக் குழு(உயர்மட்டம்),**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல.: 255, காலி வீதி,**
**கொழும்பு-03.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம்

# பெறுகை அறிவித்தல்

## இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சார்பாக சட்டக் கோவையை தயாரிப்பதற்காக தகைமையான ஆலோசகர் நிறுவனமொன்றை தேர்ந்தெடுத்தல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் 1985 இல. 21 பாராளுமன்ற சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட அரச நிறுவனமாகும். இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த, பத்தரமுல்ல முகவரியில் அமைந்துள்ள வளாகத்தில் பணியகத்தின் தலைமையக கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் சகல விடயங்களும் நிர்வாகம் சார்பாக வேறு வேறான சட்டக் கோவையை நிறுவனத்திற்கு பொருந்துமாறு தயாரிக்கும் முகமாக அத் துறையில் தகைமையுடைய அனுபவமுள்ள ஆலோசனை நிறுவனம்/ தனி நபர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதற்காக ஆர்வம் காட்டுகின்ற நிறுவனங்கள்/ தனி நபர்கள் நிர்வாகம் சார்பாக வேறு வேறான சட்டக் கோவையை நிறுவனத்திற்கு பொருந்துமாறு தயாரிக்கும் முகமாக தகைமையுடைய ஆலோசனை நிறுவனங்கள், அரச வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பெறுகைப் பிரிவிலிருந்து தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆவணங்களைப் பரீட்சிக்கலாம். (தொ.பே. இல. 011-2880500, 011-2887585)

தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனத்திற்கு இந்த வேலையை ஒப்படைத்த பின்பு 03 மாத காலத்திற்குள் வேலையைப் பூர்த்தி செய்து இறுதி அறிக்கையை மென் பிரதியுடன் பணியக தலைவருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

இதற்கு முன் சமமான வேலையை நிறைவேற்றிய அனுபவமுள்ளதை சான்றளிக்கும் உறுதி செய்தல் மற்றும் நிறுவனங்களின் பெயர் பட்டியலைச் சமர்ப்பித்தல் வேண்டும். சேவை வழங்கும் நிறுவனத்தினால் இச் சேவை வேலைக்கு தேவையான தகைமைகளை உறுதி செய்யும் சான்றிதழின் உண்மைப் பிரதியை விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும் போது வழங்குதல் வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் நிறுவனங்களால் முழு செலவில் 10% பெறுமதியுடைய (சமர்ப்பித்த வரி இன்றிய பெறுமதி) செயற்பாட்டு வங்கிப் பிணையொன்றை கேள்வியை வழங்கும் தினம் முதல் இவ் வேளையைப் பூர்த்தி செய்வதற்கு அல்லது குறித்த தினத்திற்கு அப்பால் 28 நாட்கள் செல்லுபடியாகுமாறு இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.

தாமதமான காலம் சார்பாக ஒரு நாளைக்கு 0.005% பெறுமதி (சமர்ப்பிக்கப்படும் வரி இன்றி) முழுக் கேள்விப் பெறுமதியிலிருந்து குறைக்கப்படும். இந்த வேலை முடிக்கப்பட்டு 21 நாட்களுக்குள் முழுயைமான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும். மேற்படி வேலையை நிறைவேற்றுவதற்காக போக்குவரத்து வசதிகள் அல்லது வேறு வசதிகள் பணியகத்தினால் வழங்கப்பட மாட்டாது. ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட முழுமையான கேள்வி கோரல் பத்திர தொகுதியொன்றை இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் காசாளரிடம் 2023.02.23 முதல் 2023.03.16 வரையான வார நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 12.30 வரை மற்றும் பி.ப. 1.30 முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத ரூ. 5000.00 தொகைய ஒரு கேள்விப் பத்திரத்திற்காக செலுத்தி கொள்வனவு செய்யலாம்.

உங்களது விலைமனுக்களை பத்தரமுல்ல கொஸ்வத்த, டென்சில் பொப்பேகடுவ மாவத்தையில் இல. 234இல் அமைந்துள்ள பணியகத்தின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023.03.17 பி.ப. 1.00 இற்கு அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். உங்களது விண்ணப்பம் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் சார்பாக சட்டக் கோவையொன்றைத் தயாரிப்பதற்காக தகைமையான ஆலோசகர் நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்தல் - PR/02/61' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பத்தை நிராகரிக்கும் அலலது ஏற்றுக் கொள்ளும் உரிமை பணியகத்தின் பெறுகைக் குழுவிற்கு உரியதுடன் தலைவரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர் - பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொ.பேசி/பெக்ஸ்: 2880550, 2880564**
**இணைய தளம் - www.slbfe.lk**

**'அக்கறையில் மாண்புர இக்கறையில் கைகோர்ப்பு'**

# கொள்வனவு அறிவித்தல்

## வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

## தொழிற்பாட்டு குத்தகை முறையில் மூன்று மோட்டார் கார்களை வழங்குவதற்கான கேள்வி மனுக்கள் கோரல்

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு தொழிற்பாட்டு குத்தகை முறையில் கீழே குறிப்பிட்டவாறு மூன்று மோட்டார் கார்களை வழங்குவதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து கேள்வி மனுக்கள் கோரப்படுகின்றன.

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

**வாகனத்தின் நிலை** : 3 மோட்டார் கார்கள்

**வாகனத்தின் தன்மை** : பதிவு செய்யப்பட்டது/ பதிவு செய்யப்படாதது

**ஒப்பந்த காலம்** : 60 மாதங்கள்

**தகுதிவாய்ந்த வழங்குநர்கள்** : குத்தகைக்கு விடுபவர் இலங்கையிலுள்ள வாகன வகைகளுக்குகான அங்கீகாரமுள்ள பிரதிநிதியாகவும், குறைந்தது 10 வாகனங்களைக் கொண்ட வாகன தொகுதியை வைத்திருப்பவராகவும் நிதி நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டவையாகவும் வாடகை அடிப்படையில் வாகனங்களை வழங்குவதற்கு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

**வழங்கப்பட வேண்டிய சேவைகள்** : வருடாந்த அனுமதிப் பத்திரங்கள், வாகன புகை பரிசோதனை மற்றும் காப்புறுதி உட்பட வாகனத்திற்கான வழமையான பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல்கள், அவசர விபத்தின் பழுது பார்த்தல்கள் செலவு எல்லாவற்றுக்கும் குத்தகைக்கு விடுபவரே பொறுப்பு

**மாற்றீடு மற்றும் தொழில்நுட்ப விபரங்கள்** : ஏல ஆவணங்களின் முழுமையான தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை மாற்றுவதில், மோட்டார் கார்களின் தொழில்நுட்ப தேவைகளுக்கு இணங்கக் கூடிய வாகனங்கள் வழங்கப்பட வேண்டும்.

**வாகனங்களின் விபரங்கள்:**

| தொகுதி இல. | வாகனத்தின் தன்மை | வாகனங்களின் எண்ணிக்கை | மீள பெறமுயாத வைப்புப் பணம் | ஏல பாதுகாப்பு செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| A | மோட்டார் கார்கள் | 03 | ரூ. 5,000.00 | 2023.07.08 |

மீளப்பெறமுடியாத வைப்புத் தொகையைச் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் பிரதியுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட ஏல விண்ணப்பங்களை, இரண்டு சீல் வைக்கப்பட்ட பிரதிகளில் 'செயலாளர், வெளியுறவு அமைச்சகம், குடியரசுக் கட்டிடம், கொழும்பு 01' என்ற முகவரிக்கு, பதிவு செய்யப்பட்ட தபால் மூலம் 08 மார்ச் 2023 பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்புதல் வேண்டும். ஏலங்கள் அடங்கிய உறையின் மேல் இடது பக்க மூலையில் 'தொழிற்பாட்டு குத்தகை முறையின் கீழ் மோட்டார் வாகனங்கள் வழங்குவதற்கான ஏலங்கள்' எனக் குறிப்பிடப்பட வேண்டும். 08 மார்ச் 2023ஆம் ஆண்டு பிற்பகல் 2.00 மணிக்கு ஏலம் திறக்கப்படும். இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01, செலிங்கோ கட்டிடத்தின் 09ஆவது மாடியில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் ஏலதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொள்ளலாம்.

இது தொடர்பாக ஆர்வமுள்ள ஏலதாரர்கள், மீளப் பெறமுடியாத கட்டணமான ரூ. 5000.00ஐ இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01 இலுள்ள செலிங்கோ கட்டிடத்தின் 10ஆவது மாடியிலுள்ள வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் கணக்குப் பிரிவுக்கு 22 பெப்ரவரி 2023 முதல் 07 மார்ச் 2023 வரை வார நாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை செலுத்துவதன் மூலம் முழுமையான ஏல ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புடைய பணம் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் காசாளரிடம் மட்டுமே பணமாக செலுத்தப்படுதல் வேண்டும்.

இந்த கொள்வனவு அறிவிப்பின் விதிகள் மற்றும் நிபந்தனைகள் தேசிய வரவு செலவுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 7/2022 மற்றும் 21.10.2022ஆம் திகதியிட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் விதிகளுக்கு உட்பட்டது என்பதுடன் அமைச்சின் கொள்வனவு குழுவின் முடிவே இறுதியானதுமாகும்.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்வனவுக்குழு,**
**வெளிநாட்டு அலுவல்கள்,**
**குடியரசு கட்டிடம்,**
**கொழும்பு -01.**

Looking for Your Life Partner..,
Wherever you are... Gather with, SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service
Only, WhatsApp or E-mail your ad. Otherwise it will be stopped due to duplication.
Make your payment through online and save your precious time
Acc. No. 000000377 Corporate Branch
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067 Ramani - 077 7 278 948/ 011 2 429 347
Piyumi - 011 2 429 383 I Gayani - 011 2 429 342/ 343



தெல்தோட்டை, மெதகெகில, ஸ்ரேன்ஜர்ஸ் விளையாட்டு கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சிவப்பு, நீலம் மற்றும் பச்சை இல்லங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா கடந்த சனிக்கிழமை (18) நடைபெற்றது. இந்த விளையாட்டு விழாவில் பங்கேற்றவர்களை படத்தில் காணலாம்.

### தீர்க்கமான போட்டியில்

# இங்கிலாந்து லயன்ஸை வீழ்த்திய இலங்கை ஏ அணி தொடர் வெற்றி

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் போட்டியில் வெற்றியீட்டிய இலங்கை ஏ அணி இரு அணிகளுக்கும் இடையிலான உத்தியோகபூர்வமற்ற ஒருநாள் சர்வதேச தொடரை 2–1 என கைப்பற்றியது.

கொழும்பு, ஆர். பிரேமதாச மைதானத்தில் நேற்று (21) நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து லயன்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. முதல் இரு ஒருநாள் போட்டிகளிலும் ஆடிய அனுபவ வீரர் அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் அவிஷ்க பொர்னாண்டோ இன்றியே இலங்கை ஏ அணி இந்தப் போட்டியில் களமிறங்கியது.



இந்நிலையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இங்கிலாந்து லயன்ஸ் அணி ஆரம்பம் தொடக்கம் தடுமாறியது. 22 ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை பறிகொடுத்த அந்த அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்தது.

ஆரம்ப வீரர் ஜகப் பேதல் 67 பந்துகளில் 4 பௌண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 50 ஓட்டங்களை பெற்றபோதும் மறுமுனை விக்கெட்டுகள் முக்கிய இடைவெளியில் பறிபோனதால் அந்த அணியால் ஓட்டங்களை அதிகரிக்க முடியாமல்போனது.

தவிர மத்திய வரிசையில் விக்கெட் காப்பாளர் ஜோர்டன் கொக்ஸ் 31 ஓட்டங்களை பெற்ற நிலையில் வேறு எவரும் 20 ஓட்டங்களைக் கூட எட்டவில்லை. இதனால் இங்கிலாந்து லயன்ஸ் அணி 45 ஓவர்களில் 166 ஓட்டங்களுக்கே சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது அபாரமாக பந்துவீசிய வேகப்பந்து வீச்சாளர் இசித்த விஜேசுந்தர மற்றும் சுழற்பந்து வீச்சாளர் துஷான் ஹேமந்த தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு சுமிந்த லக்ஷான் 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இதன்போது இலங்கை ஏ அணி ஏழு பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை ஏ அணியின் ஆரம்ப வீரர்கள் குறுகிய ஓட்டத்திற்கு ஆட்டமிழந்தபோதும் மத்திய வரிசையில் நிபுன் தனஞ்சய சிறப்பாக துடுப்பெடுத்தாடினார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான லசித் குருஸ்புள்ளே 18 ஓட்டங்களுடனும் நுவனிந்து பெர்னாண்டோ 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க இலங்கை ஏ அணி 28 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதில் ஆரம்ப வீரர்கள் இருவரும் ஒரு பந்து இடைவெளியிலேயே தமது விக்கெட்டை பறிகொடுத்தனர்.

தொடர்ந்து ஜோடி சேர்ந்த லஹிரு உதார மற்றும் நிபுன் தனஞ்சய 3ஆவது விக்கெட்டுக்கு 45 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டனர். இதில் 25 பந்துகளில் 21 ஓட்டங்களை பெற்ற உதார எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழந்தார்.

எனினும் 22 வயதான நிபுன் தனஞ்சய இலங்கை அணியின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடினார். அவர் அணித்தலைவர் சதீர சமரவிக்ரமவுடன் சேர்ந்து 4ஆவது விக்கெட்டுக்கு 29 ஓட்டங்களை பகிர்ந்துகொண்ட நிலையில் சதீர 29 பந்துகளில் 3 பௌண்டரிகளுடன் 23 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதன்படி இலங்கை ஏ அணி ஓவர்களில் 4 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது.

இதன்போது நிபுன் தனஞ்சய 76 பந்துகளில் ஆட்டமிழக்காது 65 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை ஏ அணி இந்த ஒருநாள் தொடரின் முதல் போட்டியில் தோல்வியை சந்தித்தபோதும் அடுத்த இரண்டு போட்டிகளிலும் வெற்றியீட்டியே தொடரை கைப்பற்றியது.

முன்னதாக நடைபெற்ற இலங்கை ஏ மற்றும் இலங்கிலாந்து லயன்ஸ் அணிகளுக்கு இடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட உத்தியோகபூர்வமற்ற டெஸ்ட் தொடர் முடிவின்றி சமநிலையுற்றமை குறிப்பிடத்தக்கது.

# இளம் வீரர்களுக்கு புதிய ஒருநாள் தொடர் அறிமுகம்

இலங்கை கிரிக்கெட் சபை இளம் வீரர்களுக்கான புதிய ஒருநாள் தொடர் ஒன்றை நடத்தவுள்ளது.



வரும் பெப்ரவரி 25ஆம் திகதி ஆரம்பமாகும் இந்தத் தொடரில் கழக மட்டத்தில் மொத்தம் 16 அணிகள் பங்கேற்கவுள்ளன. இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 23 வயதுக்கு உட்பட்ட வீரர்களுக்கான மேஜர் லீக் தொடரில் பங்கெடுக்காத புதிய வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கி அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டுவரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆளுனர் கிரிக்கெட் தொடரில் பங்கெடுத்த அணிகளும், 2022ஆம் ஆண்டுக்கான மேஜர் லீக் தொடரில் தமது தரநிலையை இழந்த கழகங்களும் பங்கெடுக்கின்றன.

## வெப் அலிஸ் சுற்றுலா




இலங்கைக்கு எடுத்துவரப்பட்டிருக்கும் ரக்பி உலகக் கிண்ணமான வெப் அலிஸ் கிண்ணம் கடந்த திங்கட்கிழமை (20) கொழும்பில் உள்ள ஹற்றன் நெஷனல் வங்கி கோபுரத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டபோது பிடிக்கப்பட்ட படம். மாஸ்டர்காட் அனுசரணையிலேயே இந்த உலகக் கிண்ணம் இலங்கையின் பல இடங்களுக்கும் காட்சிக்காக எடுத்துச் செல்லப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய சுப்பர் லீக் தொடரின் அரையிறுதி நாளை ஆரம்பம்



இலங்கை கிரிக்கெட் சபையால் நடத்தப்படும் தேசிய சுப்பர் லீக் நான்கு நாள் கிரிக்கெட் போட்டியின் அரையிறுதிக்கு காலி, தம்புள்ளை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி அணிகள் தகுதி பெற்றுள்ளன. ஐந்து அணிகள் பங்கேற்ற இந்தத் தொடரில் கொழும்பு அணி அரையிறுதி வாய்ப்பை இழந்துள்ளது.

இதன்படி இரு அரையிறுதிப் போட்டிகளும் நாளை (23) தொடக்கம் பெப்ரவரி 26 ஆம் திகதிவரை கொழும்பு ஆர். பிரேமதாச மைதானம் மற்றும் எஸ்.எஸ்.சி மைதானங்களில் நடைபெறவுள்ளன. இதில் முறையே காலி மற்றும் யாழ்ப்பாணம் அணிகளும் தம்புள்ளை மற்றும் கண்டி அணிகளும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

அரையிறுதியில் வெல்லும் இரு அணிகளும் வரும் மார்ச் 02 தொடக்கம் 05 ஆம் திகதி வரை நடைபெறும் இறுதிப் போட்டியில் ஆட தகுதி பெறும்.

# உக்ரைனில் தொடர்ந்து போரிட புட்டின் உறுதி



உக்ரைனுக்கு எதிரான ஓராண்டு கால போர் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்று உறுதி அளித்திருக்கும் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் உலகளாவிய போர் ஒன்றில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியும் என்ற தவறுதலான நம்பிக்கையில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டணி போரைத் தூண்டுவதாகவும் குற்றம்சாட்டினார்.

ரஷ்ய அரசியல் மற்றும் இராணுவ தரப்பினர் முன் நேற்று மொஸ்கோவில் ஆற்றிய முக்கிய உரை ஒன்றிலேயே புட்டின் இதனைத் தெரிவித்துள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், உக்ரைனுக்கு கடந்த திங்கட்கிழமை (20) இரகசிய விஜயம் மேற்கொண்டு அந்த நாட்டுக்கு தமது ஆதரவை வெளியிட்ட நிலையிலேயே இந்த உரை இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

போரை நிறுத்த அனைத்து முயற்சிகளையும் செய்ததாகவும், மேற்குலக ஆதரவு பெற்ற உக்ரைன் 2014 இல் ரஷ்ய கட்டுப்பாட்டுக்கு வந்த கிரிமியா மீது உக்ரைன் தாக்குதல் நடத்தத் திட்டம் தீட்டியதாகவும் புட்டின் கூறினார்.

சாடிக்குள் இருந்து வந்த பூதம் போன்று மேற்குலகம் பிராந்தியங்கள் மற்றும் உலகெங்கும் போரையும் குழப்பத்தையும் ஏற்படுத்தியதாகவும் அவர் சாடினார்.

“உக்ரைனை அரசியல், இராணுவ மற்றும் பொருளாதார ரீதியில் ஆக்கிரமித்திருக்கும் உக்ரைனிய அரசு மற்றும் மேற்கத்தேய நாடுகளின் பணயக் கைதிகளாக உக்ரைனிய மக்கள் மாறியுள்ளனர்” என்றார் புட்டின்.

கடந்த ஆண்டு பெப்ரவரி 24 ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா படையெடுத்தது தொடக்கம் தமது அண்டை நாட்டில் முன்னேற்றம் காண்பதில் அது பெரும் நெருக்கடியை எதிர்கொண்டு வருகிறது.

## சர்வதேச செய்திகள்

# துருக்கியில் மீண்டும் இரு பூகம்பங்கள்: அறுவர் பலி

துருக்கில் இடம்பெற்ற இரு புதிய பூகம்பங்களில் குறைந்தது ஆறு பேர் உயிரிழந்திருக்கும் நிலையில் மீட்பாளர்கள் இடிபாடுகளில் மீண்டும் உயிர் தப்பியோரை தேட ஆரம்பித்துள்ளனர்.



சிரிய எல்லைக்கு அருகில் தென் கிழக்கு துருக்கியில் கடந்த திங்கட்கிழமை (20) 6.4 மற்றும் 5.8 ரிக்டர் அளவுகளில் இரு சக்திவாய்ந்த பூகம்பங்கள் இடம்பெற்றன. கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி ஏற்பட்ட பயங்கர பூகம்பத்தில் துருக்கி மற்றும் சிரியாவில் 47,000 க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்ட நிலையிலேயே இந்த புதிய அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இரு நாடுகளிலும் ஏற்பட்ட முதல் பூகம்பத்தின் அதிர்வால் பல வீனம் அடைந்திருந்த கட்டடங்கள் தற்போதைய பூகம்பங்களால் இடிந்து விழுந்துள்ளன.

துருக்கி நேரப்படி திங்கட்கிழமை இரவு 8 மணி அளவில் 6.4 ரிக்டர் அளவில் முதல் பூகம்பம் நிகழ்ந்து மூன்று நிமிடங்கள் கழித்து 5.8 ரிக்டர் அளவில் இரண்டாவது பூகம்பம் ஏற்பட்டதாக துருக்கி அனர்த்த மற்றும் அவசர முகாமை தெரிவித்துள்ளது.

இதில் அன்டக்யா, டெப்னே மற்றும் சமன்டக் பகுதியில் மூன்று உயிரிழப்புகள் பதிவாகி இருப்பதாக உள்துறை அமைச்சர் சுலைமான் சொய்லு தெரிவித்திருப்பதோடு ஆபத்தான கட்டடங்களுக்குள் நுழைய வேண்டாம் என்று மக்களை எச்சரித்துள்ளார்.

இதில் 213 பேர் காயமடைந்ததாக சொய்லு குறிப்பிட்டார்.


இந்த பூகம்பங்களில் சிரியாவில் சுமார் 470 பேர் காயமடைந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த பூகம்பங்கள் எகிப்து மற்றும் லெபனானிலும் உணரப்பட்டுள்ளன.

## மருத்துவ உதவி

துருக்கி மற்றும் சிரிய பூகம்பங்களால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கென உயிர்காக்கும் மருத்துவ உதவிகளை விமானங்கள் மூலம் இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

